முகப்பு:

புகழ் ஓங்கிய

மாமல்லபுரச் சிற்பம்

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய (ஆட்சி)த் துறை வெளியீடு

மாலை: 21 | சித்தார்த்தி ஆண்டு - வைகாசித் திங்கள்—மே-1979 | மணி: 8

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

திருக்கோயில் திங்கள் இதழின் சந்தாதாரர்களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

ஆணையர் அவர்கள்,
அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை — 600 034

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும். இடைப்பட்ட காலத்தில் சந்தாதாரராக விரும்புவோர், முழு ஆண்டிற்குரிய சந்தாத் தொகை ரூ. **15—00** உடன், இடைப்பட்ட காலத்தில் உள்ள மாதங்களுக்கு, ஒரு இதழ் ரூ. **1—25** வீதம் சேர்த்துப் பணம் அனுப்பிச் '' சந்தாதாரர் '' ஆகலாம்.

தனிப்பட்ட 'சந்தாதாரர்கள்' ஒவ்வொருவரும் நேரடியாக, ஆணையர் அலுவலகத்திற்கே மணியார்டர் மூலம் பணம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும் பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும்பொழுது, மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் *[PINCODE]* எண்ணுடன் தெரிவிக்குமாறும், கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வெளிநாட்டுச் சந்தாதாரர்களின் முகவரிகள் அனைத்தும் செவ்வனே பதிவு செய்து வரிசைப் படுத்தப் பெற்று அவர்கள் எல்லோருக்கும் முறையாக இதழ்கள் அனுப்பப்படுகின்றன. தற்பொழுது வெளிநாட்டுச் சந்தாதாரர் ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு அஞ்சல் செலவு மட்டுமே ரூ. **9—60** ஆகின்றது. ஆதலால் வெளிநாட்டுச் சந்தா, ரூ. **20—00**-ல் இருந்து ரூ. **25—00** ஆக ஜனவரி **1978** முதல் மாற்றி அமைக்கப் பட்டது. வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப் போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## பொருளடக்கம்

திருநாவுக்கரசரின் ஒரு திருத்தாண்டகம்—ஆசிரியர்

திருவாசகத்தில் பக்தி நெறி
—டாக்டர் திரு சோ. ந. கந்தசாமி,

மேற்கியல் வேதாந்தம்
—டாக்டர் திரு டி.எம்.பி. மகாதேவன்

கர்நாடக சங்கீதத்தின் ஆதி மும்மூர்த்திகள்
—திரு.மு.அருணசலம்

வடக்குத் திருவீதிப்பிள்ளை
—திரு பி.ப. அண்ணங்கராச்சாரிய சுவாமிகள்

அமுதுண்ணக் கடையவன்—திரு ந.ரா.முருகவேள்

இராமலிங்கரின் இலட்சியம்
—திரு ம.பொ.சிவஞானம்

துன்பம் துடைக்கும் வழி
—திரு.முருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்

அகர முதல எழுத்தெல்லாம்
—திரு கி.ஆ.பெ. விசுவநாதம்

சங்க நூல்களில் முருகன்—திரு கி. வா. ஜகந்நாதன்

ஆழ்வார்கள் காணும் முழுமுதற் கடவுள்
—டாக்டர் திரு ந. சுப்பு ரெட்டியார்

சேக்கிழார் பெருமை—திரு சுத்தானந்தபாரதியார்

பட்டினத்து அடிகள்—திரு டி.என். சிங்காரவேலு

திருச்சிற்றம்பலக் கோவையார் —ஆசிரியர்

சமய உணர்வு —திரு ஆர். சதாசிவம்

இனியவன் தன் அடைந்தார்க்கு இடைமருதன்
—டாக்டர் திரு வ. ஆ. தேவசேனாபதி

மன்னு தீந்தமிழ்
—திரு. சி. அருணைவடிவேல் முதலியார்

காஞ்சிப் புராணமும் சைவசித்தாந்தமும்
—திரு. க. வச்சிரவேலர்

ஆசிரியர்: ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

# திருநாவுக்கரசரின் ஒரு திருத்தாண்டகம்

**முன்னுரை:**

இந்நாளில் பல்வேறு இதழ்களிலும் சிறு கதை, தொடர்கதை, புதினக் கதை, காதற் கதை எனப் பல கதைகள் வெளிவருவதைக் காண்கின்றோம். நமது திருநாவுக்கரசர் பெருமானும் ஒரு சிறு கதை எழுத்தாளர் நிலையில், அந்நாளில் விளங்கியிருந்திருப்பார் போலும்! அவர் தாமும் இந்நாளைய எழுத்தாளர்களைப் போலவே, ஒரு காதற் கதையை-சிறுகதையை நமக்கு எழுதிக் காட்டுகின்றார்.

**சிறுகதை:**

ஓர் ஊரில் ஒரு செல்வக் குடும்பத்தில் ஒரு பெண் பிறந்தாள். தாய் தந்தையரால் அவள் பெரிதும் பேணி வளர்க்கப்பெற்றாள். தக்க பருவமுற்றாள். பெற்றோர் அவளுக்குத் திருமணம் செய்து வைக்கும் முயற்சியில் தலைப்பட்டனர். தக்கவன் ஒரு நம்பிக்குத் தம் நங்கையைக் கொடுக்கத் தாய்தந்தையர்கள் உறவினருடன் குணம்பேசிக் குலம்பேசித் திருமணத்திற்கு ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தனர். அத் திருமணப் பேச்சின் விவரங்களை யெல்லாம் அப்போதைக்கப்போது தோழியின் வாயிலாக, மணமகள் அறிந்து மகிழ்ந்து கொண்டிருந்தாள். தோழியின் வாயிலாக மணமகள், தன்னை மணக்கப்போகும் ஆடவனின் பெயரை முதலிற் கேட்டறிந்து கொண்டாள். பின்னர் அவனது வடிவழகும் குணநலன்களும் இவ்விப் பெற்றியவை என உசாவி உசாவித் தெரிந்து கொண்டாள். இதற்கும் பின்னர் அவனது ஊர் யாதெனவும் வினவி உணர்ந்து கொண்டாள். இவையனைத்தும் அவளுக்குப் பெரிதும் மனநிறைவை அளிக்கும் வகையிலேயே மேலும் மேலும் அமைந்தன.

ஆதலின், அத்துணை அரிய பெரிய சிறப்புக்கள் அமைந்த அவ் ஆண்மகனையே மணந்து கொள்வதென உறவினருடன் தானும் உளமொத்திசைந்தாள்; உறுதி பூண்டாள். ஒரு கணமும் ஊழியாகும் நிலையில் திருமணம் நிகழவிருக்கும் நாளை ஆவலுடன் எதிர் நோக்கி நின்றாள். திருமணம் சிறப்புற நிகழ்ந்தது. பின்னர்ப் பிறந்தகம் விட்டுப் பெயர்ந்து புகுந்தகம் செல்ல வேண்டிய நாள் போந்தது. தன்னை வளர்த்த அன்னையையும் தந்தையையும் மறந்தாள். நென்னல் வந்த தலைவனுடன் இயைந்து விரைந்து சென்றாள். இல்லிகவாப் பருவத்தில் தனக்கு விதிக்கப் பெற்றிருந்த உலகியற் கட்டுப்பாடுகளையெல்லாம் துறந்தாள். தன்னலம் மறந்தாள். கணவன் நலமே கருதி வாழ முற்பட்டாள். வாழ்விலும் தாழ்விலும் இன்பிலும் துன்பிலும் கணவனுடன் இயைந்து ஒன்றி நின்று இன்புற்று வாழ்ந்து வந்தாள்.

**திருத்தாண்டகம்:**

திருநாவுக்கரசர் நமக்காக எழுதி வெளியிட்ட அழகிய நல்ல இச் சிறுகதை, பின்வரும் ஒரு சிறந்த அழகிய திருத்தாண்டகப் பாடலாக அமைந்துள்ளது.

"முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்!
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்!
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்!
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்!
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்!
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தை!
தன்னை மறைத்தாள்! தன் நாமம் கெட்டாள்!
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே!"

எனவரும் அனைவரும் அறிந்த திருப்பாடலில், இச்சிறுகதை அமைந்துள்ளது. ஒரு முறை கேட்ட அளவிலேயே உள்ளம் கொள்ளைகொள்வதே சிறந்த கவிதையாகும் என்பர் அறிஞர்கள். அதற்கேற்ப, முதன் முறையாகக் கேட்ட மாத்திரத்திலேயே எவருள்ளத்தையும் கொள்ளை கொண்டுவிடும் ஆற்றலும் அழகும் மிக்க இத்திருப்பாடலின் சிறப்பை, எம் ஒரு நாவாற் கூறல் ஒல்லுமோ?

**காதலரும் பக்தரும்:**

(1) தனது காதற்குரியவரின் பெயர் கேட்டு மகிழ்தல் காதலர்களுக்கு இயல்பு. அங்ஙனமே தாம் வழிபடும் கடவுளின் திருப்பெயர் கேட்டலில் அடியார்கட்குப் பெருமகிழ்வு. "சிவனெனும் நாமம் தனக்கே உடைய செம்மேனியம்மான்" "சிவனெனும் ஓசை அல்லது அறையோ உலகில் திருநின்ற செம்மையுளதே?" எனச் சான்றோர்கள் தம் வழிபடு கடவுளரின் திருப்பெயரில் தமது ஈடுபாட்டினைப் புலப்படுத்தியுள்ளமை காணலாம்.

(2) தமது காதற்குரியாரின் வடிவழகும் குணவழகும் நினைத்தும் கேட்டும் இன்புறுதல் காதலர்கட்கு இயற்கை. அங்ஙனமே தாம் வழிபடும் கடவுளின் திருவுருவ நலங்களிலும் அடியார்கட்குப் பேரீடுபாடு நிகழும். "வடிவேறு திரிசூலம் தோன்றும் தோன்றும்" என்பன போன்றுவரும் பதிகங்கள் இதன் உண்மை தேற்றும்.

(3) தம்மால் விரும்பப் படுபவரின் ஊர் கேட்டு உணர்ந்துவப்புறுதல் காதலர்தம் செயல். அவ்வாறே தம் வழிபடு கடவுளரின் தல விசேடங்களை அறிந்து கொள்ள விரும்புதல் அடியவர் பண்பு. "ஒருவனாய் உலகேத்த நின்ற நாளே? ஓருருவே மூவுருவம் ஆன நாளோ?...திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே" என்பன போன்றுவரும் திருப்பதிகங்கள் இதற்குச் சான்று பகரும்.

(4) ஊரும் பேரும் உருவும் சிறப்புடைமை தெளிந்ததற்பின், அனைய சிறப்பினரையே மணந்துகொள்வேன் என உறுதி கடைப்பிடித்துப் பித்துற்று நிற்றல் காதலர்கள் நெறி. "உத்தமன் அத்தன் உடையான் அடியே நினைந்துருகி மத்த மனத்தொடும் மால் இவனென்ன மன நினைவில் ஒத்தன ஒத்தன சொல்லிட ஊரூர் திரிந்து எவரும் தத்தம் மனத்தன பேசி பேசத்" தம்வயம் இழந்து கடவுட் பித்தரா யொழுகுதல் அடியவர்களின் பண்பு.

(5) "இறந்த கற்பினட்கு எவ்வம் படரன்மின்!
சிறந்தானை வழிபடீஇச் சென்றனள்!
அறந்தலைப் பிரியா ஆறுமற் றதுவே"

எனக் கலித்தொகை பாடுதல் போல, எத்துணையோ பாடுபட்டுத் தம்மை இனிது வளர்த்த தாய் தந்தையரைப் பிரிந்து ,தம்மை மணந்து கொண்டவர் பின்னே செல்லுதல் மணமக்கள் வழக்கம். அங்ஙனமே கடவுளுணர்வு தலைப் பட்ட அடியவர்கள், தம்மொடு பல காலமாகப் பயின்று தாயும் தந்தையும் போலும் நிலையில் இருந்து வந்த பொறி புலன் கரணங்களை யெல்லாம் நீத்து, தாம் காதலித்த கடவுட் செம்பொருளையே தேடிப் பின்பற்றிச் சென்று சேர்ந்து நலம் பெறும் இயல்புடையார் ஆவர்.

(6) ''நிறையெனப்படுவது மறை பிறர் அறியாமை'' எனும் அகலிடத்தார் ஆசாரம் காத்து ஒழுகினோர், இல்லற வாழ்வில் அதனைச் சிறிது தவிர்ந்தொழுகுவர். அங்ஙனமே, கடவுளுணர்வு கைக்கூடிய ஞானிகளும் ''தேசம் இடம் காலம் திக்கு ஆசனங்கள் என்பன இன்றி, செய்வது ஒன்றுபோற் செய்யாச் செயலதனைச் செய்து, பாலருடன் உன்மத்தர் பசாசர் குணம் மருவிப் பாடலினொடு ஆடலினைப் பயின்று'' ''உலகியற் பகையார்'' எனும் நிலையில் அகலிடத்தார் ஆசாரத்தை அறவே அகன்று நிற்பர்.

(7) ''வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்
கடுங்கதிர் வெம்மையிற் காதலன் தனக்கு
நடுங்கு துயர்கூர நாப்புலர வாடித்
தன்துயர் காணாத் தகைசால் பூங்கொடி''

எனச் சிலப்பதிகாரம் கூறுவதுபோல, தன் னலம் மறத்தல் காதலர்க்கியல்பு. ''எனை நானென்பது அறியேன், பகல் இரவாவதும் அறியேன்'' ''என்னை மறந்திருந்தேன் இறந் தேவிட்டது இவ்வுடம்பே'' ''ஊன் கெட்டு உயிர்கெட்டு உணர்வு கெட்டு என் உள்ளமும் போய் நான் கெட்டவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ''. ''நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே'' ''ஆயக் கடவேன் நானோதான்? என்னதோ இங்கு அதிகாரம்? ''காயத்திடுவாய் நின்கழற்கீழ் வைப் பாய் கண்ணுதலே'' என்றெல்லாம் அருளும் நிலையில் வைகுதல் ஞானிகள் நிலை.

(8) திருமணத்திற்கு முன் இன்னார் மகளென வும், அதன் பின்னர் இன்னார் மனைவியென வும், பெண்கள் பெயர் பெறுதல் உலகியற்கை. அங்ஙனமே கடவுளுணர்வு தலைப்படுமுன் செட்டியார், முதலியார் என்பன போன்ற பெயர் கள் பெற்றிருந்து, கடவுளுணர்வு தலைப்பட்ட பின்னர்ப் பண்டைக்குலம் ஒழிந்து தொண்டக் குலத்தினராகிப் பத்தர், சித்தர், அன்பர், அடியார் முதலிய பெயர் பெறுதல் ,அருளாளர் பண்பு.

(9) இன்பிலும் துன்பிலும், வாழ்விலும் தாழ் விலும் கணவனின் திருவடிகளையே புகலிட மாகக் கொண்டு கற்புடை மகளிர் ஒழுகுவர். அவ்வாறே ஞானிகளும் ''இடரினும் தளரினும் எனதுறு நோய் தொடரினும் உன்கழல் தொழு தொழுவேன்'' எனும் நிலையில் இறைவன் தாளே தலைப்பட்டு நிற்பர்.

இன்னோரனைய உண்மைகள் எத்துணையோ பலப்பல இனிதமைந்து விளங்கும் வண்ணம், திருநாவுக்கரசர் பெருமான் எழுதிக் காட்டிய இச் சிறுகதைத் திருப்பாடல் எத்துணைச் சிறந்த தொன்றாகத் திகழ்கின்றது பார்மின் கள்! திருமுறைகளின் சிறப்பை யுணர்தற்கு இவ்வொரு திருப்பாடலே அமையாதோ? ''இதனளவு உண்டு கோள் மதிவல்லோர்க்கே''.

## திருத்தாண்டகத்தில் திருக்குறள்:

இனி ஈண்டு இப்பாடலில் முதன்மையாகக் கருதத் தகுவது ஒன்றுள்ளது. இவ்வழகிய இனிய பாடல், ஆசிரியர் திருவள்ளுவர் தமது திருக்குறளின்கண் கடவுள் வாழ்த்தாகக் கூறிய பத்துக் குறள்களையும் தன்னுள் அடக்கிக் கொண்டு, குறளினும் மிகச் சுருக்கமும் இலக் கியச் சுவையும் வாய்ந்து திகழ்கின்றது என லாம்.

(1) திருவள்ளுவர் 'ஆதிபகவன்' எனக் குறித்ததனையே, திருநாவுக்கரசர் பெருமான் 'அவனுடைய நாமம்' என்கின்றார்.

(2) 'வாலறிவன்' என்றதனை ''மூர்த்தி யவனிருக்கும் வண்ணம்'' என விளக்குகின்றார்.

(3) 'மலர்மிசை ஏகினான்' என்பதே, அவனுடைய 'ஆரூர்' எனப்பட்டது.

(4) இறைவனின் 'பொருள்சேர் புகழ் புரிதல்', 'அவனுக்கே பிச்சியாதல்' எனக் குறிப் பிடப்படுவதாயிற்று.

(5,6) 'வேண்டுதல் வேண்டாமை இலான் என்பதும், 'பொறிவாயில் ஐந்தவித்தல்' என்பதும், 'அன்னையையும் அத்தனையும்நீத் தல்' ஆக உருவகம் செய்யப்பட்டன.

(7) 'தனக்குவமை இல்லாதான்' தாள் சேர்ந்து மனக்கவலை மாற்றலே, 'அகலிடத் தார் ஆசாரம் அகலுதல்' ஆயிற்று.

(8) பொருளும் புகழும் போகமுமாகிய 'பிறவாழி நீந்தலே' 'தன்னை மறத்தல்'எனவும்,

(9) எண்குணத்தான் தாளை வணங்கிப் பசு கரணங்கள் பதிகரணங்களாக மாறப்பெறு தலும் பிறவுமே 'தன் நாமம் கெடுதல்'எனவும்,

(10) பிறவிப் பெருங்கடல் நீந்தி இறை வனடி சேர்தலே 'தலைவன் தாள் தலைப்படு தல்' எனவும், திருவள்ளுவரின் அடியொற்றித் திருநாவுக்கரசரால் குறிப்பிடப்பெற்றன.

## முடிவுரை:

திருக்குறள் போன்ற சிறந்த இலக்கிய நூல்களை ஆராய்ந்துணர்தற்கும், சுவைப்பதற் கும்கூட, இத்தகைய இனிய திருமுறைப் பாடல் கள் பெரிதும் துணைபுரிதல் காணலாம். திருக் குறளின் கடவுள் வாழ்த்துப் பாடல்களின் பொருளினை, இங்ஙனம் ஒரு திருப்பாடலிலேயே சுருக்கமாகவும், சுவை பெருகவும், ஒரு கதை நிகழ்ச்சிபோல அமைத்துக் கலைத்திறம் விளங் கவும், சமய அனுபவ நலங்கள் தகவுற மிளிர வும், அருளிச் செய்த திருநாவுக்கரசரின் சிறப்பு, நினைத்தொறும் நினைத்தொறும் வியப்பும் விம்மிதமும் விளைவிப்பதாகும்.

—ஆசிரியர்.

# திருவாசகத்தில் பக்திநெறி

டாக்டர் திரு. சோ. ந. கந்தசாமி, M.A., M.Litt., Ph.D,
தமிழ்த்துணைப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

### ஞானக் கருவூலம் :

பத்தியின் விளைநிலம் பைந்தமிழ் நாடு. மனத்தைப் பண்படுத்தி, உணர்ச்சிகளை ஒழுங்கு படுத்தி, உள்ளத்தை உறுதிப்படுத்தி, மக்கள் வாழ்வாங்கு வாழ வழிகாட்ட வந்த ஞானச் செல்வர்தான் மணிவாசகப்பெருமான். ஐம் புலன்கள் காணும் புறவுலகு என்னும் திரைக் குப் பின்னால் புலன்களால் காணமுடியாத— உள்ளத்தால் மட்டுமே உணரத்தக்க மாபெரும் ஆற்றல் விளங்குவதை உணர்ந்து உணர்த்த வந்த ஆன்மீகக் கவிஞர்தான் மணிவாசகப் பெருமான். வரம்பிலாப் புலமை நிரம்பப் பெற்ற இப்பெருந்தகை கல்லாத கலை இல்லை யென்பது, 'கல்வியென்னும் பல்கடல் பிழைத் தும்' என்னும் இவர் சொல்லாலே விளங்கிற்று. அன்றாடம் நாம் வாழ்ந்து வரும் தினசரி வாழ்க்கைக்கு மேலே, உயர்ந்த இலட்சிய வாழ்க்கை ஒன்று உண்டென்பதை உணர்ந்த வாதவூரர், அந்நிலையை அடைய அனைவரை யும் ஆற்றுப்படுத்தும் வழித்துணைவராக விளங்குகின்றார். அரிமர்த்தன பாண்டியன் அவையில் அமைச்சுத் தொழில் பூண்ட வாத வூரர் அரச வாழ்க்கையைத் துறந்து ஆன்மீக வாழ்க்கையை மேற்கொள்ளும் ஒரு திருப்பு மையத்தை இறைவனே அமைத்துவிட்டான். திருப்பெருந்துறையில் இருந்த மரத்தடியில் குருபரன் அருளினால் பெற்ற ஞானத் தெளி வையும் அதன் விளைவாகத் தாம் துய்த்த அனுபவங்களையும் கண்ட காட்சிகளையும் நடந்த நிகழ்ச்சிகளையும் தேனினும் இனிய தீந்தமிழில் அமுதப் பாக்களாக நமக்கு அளித் துள்ளார். திருவாசகம் ஞானக் கருவூலமாக வும், பக்திக் கனியாகவும் திகழ்கின்றது.

சைவ சித்தாந்தம் புலப்படுத்தும் நால் வகை நெறியில் மாணிக்கவாசகர் ஞானமார்க் கத்தில் நின்றவர். ஏனைய மூன்று மார்க்கங் களினும் உருவம், அருவுருவம், அருவம் என் னும் இறைவனின் மூவகைத் திருமேனிகளை முறையே புறத்தொழில், அகப்புறத்தொழில், அகத்தொழில்களினால் ஏத்திச் சாலோக, சாமீப சாரூபம் ஆகிய அபர முத்தியை அடைவர். ஆயின் ஆளுடைய அடிகள் இம் மூவகைத் திருவுருவின் விழுமிய அகண்டாகார நித்திய வியாபக நிர்மல சச்சிதானந்தப் பிழம்பாக வுள்ள பரம்பொருளை அகத்தொழில் புறத் தொழிலின்றி அறிவுத் தொழிலினாலேயே பணிந்து பரவிப் பரவசமடைந்து சிவசாயுச்சியம் ஆகிய பரமுத்தியைப் பெற்ற சீலராகத் திகழ் கின்றார். ஆன்மீகப் பயணத்தில் அடிகளார் பெற்ற அருள்வாகைக்கு அடையாளமாக— வெற்றிச் சாசனமாக விளங்குவது திருவாசகம்.

### அறிவாற் சிவனே :

பல கலையும் பயின்று பழுத்த புலமை படைத்த மணிவாசகப்பெருமானை உள்ளவாறு உணர்ந்து கொண்டவர் ஈசான தேசிகர் எனச் சுட்டப்பெறும் சுவாமிநாத தேசிகராவர். இவர் யாத்துள்ள இலக்கணக் கொத்து என்னும் திட்பநுட்பம் செறிந்த இலக்கண நூலில்.

'பல்கால் பழகினும் தெரியா வுளவேல்
தொல்காப் பியம்திரு வள்ளுவர் கோவை
மூன்றினும் முழங்கு மென்க'

என்று இயம்பியிருத்தல் எண்ணத்தக்கது. இப் பகுதிக்கு இவரே உரையும் வகுத்துள்ளார். அவ்வுரைப் பகுதியில், 'திருவைக் கோவைக்கும் கூட்டுக. மாணிக்க வாசகர் அறிவாற் சிவனே என்பது திண்ணம். அன்றியும் அழகிய திருச் சிற்றம்பலமுடையார் அவர் வாக்கில் கலந்து இரந்து அருமைத் திருக்கையால் எழுதினார்' எனவரும் இடம் நோக்கத்தக்கது. குமரகுரு பரர்,

'பைந்தமிழ் நவின்ற செந்நாப் புலவ!
ஐந்திணை யுறுப்பின் நாற்பொருள் பயக்கும்
காமஞ் சான்ற ஞானப் பனுவல்'

என்று பாராட்டிப் பரவுகின்றனர். அருட் செல்வர் பலரும் பாராட்டிப் புகழும் ஞானச் செல்வராகிய மாணிக்கவாசகர், தாம் ஞான நெறியில் நின்று உய்தி பெற்றிருப்பினும் யாவ ரும் எளிதில் பின்பற்றுதற்குரிய இனிய வழி யாகப் பக்தி நெறியைத் தான் பாரித்துப் பேசியுள்ளார். ஆன்மா படும் அக அல்லல்களை வெளிப்படுத்தற்கும், ஆண்டவனை அறிந்து அவன் வழங்கும் எல்லையில்லா இன்பத்தில் திளைப்பதற்கும், அமரத்துவ நிலை அடைதற் கும், பத்தி மார்க்கத்தைத்தான் மாணிக்கவாச கர் பரிந்துரை செய்கிறார்.

### திருவாசகத்தில் பக்திக் குறிப்புக்கள் :

எங்குமாய்த் திகழும் இறைவனின் எல்லை யற்ற அருளினைப் பெற்ற இப்பெருந்தகை ஒப் பற்ற தம் அருட்பனுவலில் பக்திநெறி குறித் துப் பாடியுள்ள சில இடங்களை மட்டும் இவண் சிந்திப்போம். பத்திநெறியைத் திருவாசகத்தின் நிறைவுப் பகுதியாகிய அச்சோப் பதிகத்தில்,

'முத்திநெறி அறியாத
மூர்க்கரொடும் முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப்
பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச்
சிவமாக்கி யெனையாண்ட
அத்தனெக் கருளியவா
றார்பெறுவா ரச்சோவே'

என்று பெருமிதம் தோன்றப் பாடுகிறார். ஞான நெறியில் நின்ற இப்பெருந்தகைக்கு இறைவனே பத்தி நெறியை அறிவித்துப் பதப்படுத்தினார்

எனப் பார்க்கிறோம். இதே பதிகத்தில், 'உய்யும் நெறி காட்டுவித் திட்டு' என்று இவரே பாடியிருப்பதால், பத்திநெறிதான் மக்கள் உய்வதற்குரிய நெறி என்று இவர் கருதியுள்ளார் எனலாம்.

முத்தி என்பது விடுதலை (Liberation). மக்கள் அயலார் ஆட்சியினின்றும் பெறும் விடுதலையை அரசியல் விடுதலை (Political freedom) என்பர். சமுதாய ஏற்றத் தாழ்வினின்றும் நீங்கிச் சரிநிகர் சமானமாக வாழும் சமத்துவ நிலையைச் சமுதாய விடுதலை (Social freedom) என்பர். ஏழை பணக்காரர் என்ற வேறுபாடின்றி எல்லாரும் எல்லாச் செல்வமும் எய்தும் வாய்ப்பு நிலையினைப் பொருளாதார விடுதலை (Economic freedom) என்பர். இத்தகைய விடுதலைகட்கு எல்லாம் உயர்ந்ததாய், இவையனைத்தையும், இவற்றிற்கு மேம்பட்டதையும் தரவல்லதாய், உள்ள ஆன்மீக விடுதலையைத்தான் (Spiritual-freedom) முத்தி என்ற சொல் சுட்டுகின்றது. அடிமைத் தளைகளினின்றும் விடுபடுவது தான் விடுதலை.

இந்த ஆன்மா யார் யாருக்கு அடிமையாய் அல்லற்படுகிறது என்பதை எண்ணிப் பார்த்தல் வேண்டும். ஆசாபாசங்களாகிய முதலாளிகளால் ஆட்டிப்படைக்கப்படுகின்ற ஆன்மா, இந்த விலங்குகளை உடைத்தெறிந்து, தனக்கு உரிய தலைவனின் தண்ணருள் நிழலில் நிலை பெற்றுத் தங்கி இன்புறுதலே விடுதலையாகும். இந்த இலக்கினை எய்துவதற்குரிய எளிய பாதையினைத்தான் பத்திநெறி என்று பகர்ந்துள்ளார். இந்நெறியில் நின்றமையால் தீயாரிணக்கம் நீங்கி, பழவினைகளாகிய சஞ்சிதம், பிராரத்தம் ஆகிய வல்வினைகளும், வலியவந்து சித்தத்தைக் கலக்கும் அநாதி மலமாகிய ஆணவத்தின் வன்மையும் அவிந்து, ஒவ்வொரு அணுவும் சத்துவ குணத்தினால் சிவத்தன்மை எய்தி, தாம் இறைவனால் அடைந்த அருளின்பத்தினை மாணிக்கவாசகர் வியந்து போற்றுகிறார்.

**பத்திவலை :**

மாணிக்கவாசகர் பத்தியை ஒரு வலையென்று உருவகம் செய்கின்றார். "பத்தி வலையிற் படுவோன் காண்க" என்பது திருவாசகம். கிடைத்தற்கரிய ஒன்றைச் சிக்கெனப் பிடிப்பதற்கு மக்கள் பயன்படுத்தும் ஒரு கருவி, பொறி, கண்ணி, அல்லது வலையாகும். கிடைத்தற்கரிய ஆண்டவனைப் பிடிப்பதற்குக்கூட ஒரு வலையிருக்கிறதென்று மணிவாசகப்பெருமான் உபாயம் காட்டுகின்றார். அதுதான் பத்தி என்னும் வலை. "அன்பெனும் ஆறு கரையது புரள" என்று அடிகளார் கூறுவது போல, அன்பைப் பெருக்கிக் கொள்வதுதான் பத்தி நெறியின் இன்றியமையாத கூறாக உள்ளது. வலையினைச் சுருக்கி வைத்தால் நாம் குறி வைத்த பொருள் அதற்குள் வந்து அகப்படாது. எனவே அன்பு அல்லது பத்தி என்னும் வலையைத் தன் மட்டில் சுருக்கிக் கொள்வதால் இறைவனைப் பற்றுதல் இயலாது. இவ் வலையை விரிப்பதன் மூலமாகத் தான் இறைவனை அகப்படுத்த முடியும். உண்மையான அன்பு இருக்கிற இடத்தை நோக்கி அவனே ஓடிவருகிறான்.

"இங்குநம் மில்லங்கள் தோறும் எழுந்தருளும்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை......" (1)

"அடித்து அடித்து அக்காரம் தீற்றிய
அற்புதம் அறியேனே" (2)

"அறைகூவி ஆட்கொண் டருளி" (3)

முதலிய பகுதிகள் இறைவனின் எளிவந்த தன்மையை (சௌலப்பியம்) எடுத்துரைப்பனவாகும். பள்ளத்தை நோக்கிச் செல்லும் வெள்ளத்தைப் போலப் பத்தியுள்ள உள்ளத்தை நோக்கி ஓடிவருகிறான் ஆண்டவன். வள்ளலாரும்,

"அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே!
அன்பெனும் குடில்புகும் அரசே!
அன்பெனும் வலைக்குட் படுபரம் பொருளே!"

என்று அகம் கனிந்து பாடுதல் இங்கு எண்ணத் தக்கது.

**பத்திக் கடல் :**

தன்னலக்காரர்களாக, தாங்கள் மட்டுமே உய்திபெற வேண்டுமென்ற எண்ணத்தில் முத்திக்காக முயலும் முனிவர் கூட்டத்திற்கு இறைவன் எளிதில் புலப்படுவதில்லை. ஆனைக் காவில் தான்தோன்றியாக விளங்கிய சிவக் கொழுந்தினை, அன்றாடம் தன்வாயின் நூலாற் பந்தர் அமைத்து வந்த அஃறிணைச் சிற்றுயிர் ஆகிய சிலந்திக்கு, அடுத்த பிறவியில் சோழப் பெருவேந்தனாக (கோச்செங்கணானாக) வாழ்வளித்த வள்ளல் சிவபிரான். அத்தகைய அருளாளன் அடிகளாரை ஆண்டு கொண்டது அவர் கொண்ட பத்திப் பெருக்கினால் ஆகும். பத்தியைக் கடலாக உருவகிக்கிறார் மணிவாசகர். முன்பு கல்வியைக் கடலென உருவகம் செய்தவர், இங்கு இறைவன் மாட்டுக் கொண்ட அன்பினையும் கடலென உருவகம் செய்கிறார். எனவே ஞானக்கடல் பத்திக்கடல் என்ற இரு வகைக் கடலினைப் படைத்துக்காட்டும் வாதவூரர், முடிபாக இறைவன், பத்தியைக் கடலாகப் பெருக்கிக் கொள்பவரிடத்தில் தன்னைப் பதித்துக் கொள்ளும் பெருஞ்சுடர் என்று பேசுகிறார். தன்னிடம் பத்திமை கடலாகப் பெருகுவதற்கும் பரஞ்சுடரே காரணன் ஆவான் என்கிறார். மெய்யன்பரின் தூயநேயத்திற்கு விரைந்து சென்று உயிர்விருந்து அளிக்கும் பரமனின் இன்பப்பேறு அள்ளூறித் தித்திக்கும் திறத்தினைத் தெள்ளேணம் கொட்டிப் பாடிப் பரவசம் அடைகிறார்.

"முத்திக்கு உழன்று முனிவர்குழாம் நனிவாட
அத்திக்கு அருளி அடியேனை ஆண்டுகொண்டு
பத்திக் கடலுள் பதித்த பரஞ்சோதி
தித்திக்கு மாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ

என்றுமனம் இனிக்க நாஇனிக்க செவியினிக்கப் பாடுகிறார். அருணகிரிப் பெருமான், 'பத்திக் கடலுள் படிவதனால் புத்தித் தரங்கம் தெளியும்' என்று பாடியிருத்தலும் இங்கு நோக்கத்தக்கது.

(தொடரும்)

# "மேற்கியல் வேதாந்தம்"

'வேதாந்த வித்தகர்' டாக்டர் திரு. டி. எம். பி. மகாதேவன் அவர்கள்

''ஒரு புதிய பொருள் வரலாற்றுக்குள் வந்திருக்கின்றது-
அதுதான் மேற்கியல் வேதாந்தம்''
—கெரால்ட் இயர்ட்

வேதாந்தம் என்பது, முழு அநுபவத்தின் அல்லது எல்லையற்ற ஞானத்தின் தத்துவமாகும். அஃது, இனம் அல்லது நிறம், தட்பவெப்பம் அல்லது தேசம் என்னும் வேறுபாடுகளை அறியாதது. இந்தியாவிலேயே முதன் முதலாகக் கண்டுபிடிக்கப்பெற நேர்ந்தபோதிலும், அஃது இந்தியநாடு ஒன்றற்கு மட்டுமே உரியதாகக் கருதப் பெறவில்லை. வேதாந்தப் பயிற்சி பெறுதற்குரிய தகுதிகள் பலவற்றுள், ஒரு குறிப்பிட்ட இடத்தின் பிறப்பு அல்லது இனம் என்பது, சேர்க்கப்பெறவில்லை. வேதாந்தத்தின் தலைஊற்றாக விளங்கும் உபநிடதங்கள் ''அழியாப் பேற்றுக்குரிய குழந்தைகளாகிய நீங்களெல்லாம்'' என்றே, தம்முடைய அழைப்பை அமைத்து, அனைவரையும் ஒருசேர விளிக்கின்றன.

அவ் உபநிடதங்களிலிருந்து பெருகுகின்ற அத்துவைதம் என்னும் அழிவற்ற தத்துவமானது, என்றும் உள்ள பரம்பொருளைப் பற்றிய எல்லோருடைய தாகத்தையும் தணிக்கவல்லதாகத் திகழ்கின்றது. ஒரு குறிப்பிட்ட காலத்தில், உலக மக்களில் ஒருசிலர் மட்டுமே, இந்தத் தாகத்தை உணரக் கூடியவர்களாக இருப்பர் என்பது உண்மைதான். உபநிடதம் ஒன்று குறிப்பிடுவதுபோல, ''பிரம்மத்தைப் பற்றிக் கேட்டுணர்வது கூடப் பலருக்குக் கடினமாக இருக்கும்; ஒருகால் கேட்டாலும், பலர் அதனைப் புரிந்து கொள்வதில்லை. அதனைப் பயிற்றுவிக்கக் கூடியவன் வியக்கத்தக்கவன். அதனைக் கண்டுபிடிப்பவன், மிக வல்லமை உடையவன். ஆற்றல் மிக்க ஆசிரியர் ஒருவர் கற்பிக்க, அதனை உணர்பவன் மிகவும் நற்பேறுடையவன்''. அழியாத ஆன்மாவைத் தேடுபவர்கள், அதைத் தேடுவது எங்ஙனம் கடினமோ, அங்ஙனமே மிகவும் அரியவர்கள் ஆவர். ஆனால், அந்த அரிய ஆர்வலர்கள், ஒரு குறிப்பிட்ட காலம் அல்லது தேசத்துக்குத் தனிச் சிறப்பாக உரிய பொருள்கள் அல்லர். மிகவும் எதிர்பார்க்கப் படாத இடங்களிற்கூட, அத்தகையவர்களை ஒருவன் சந்தித்தல் இயலும். சிறிதும் எதிர்பார்க்கப்படாத காலங்களில்கூட, அவர்கள் காணப்படலாம். இடம்-காலம் என்னும் நிபந்தனைகள், ஆன்மாவிற்குப் பொருந்துவதில்லை. இடம்-காலம் என்பவற்றைத் தவறாகப் பயன்படுத்துதலே, மாயையாக அமைகின்றது.

காலம் இடம் என்னும் தடை நிலைகளினின்று, நம்மை விடுவிக்கும் குறிக்கோள் கொண்ட ஒரு தத்துவமானது, ஆன்மிகச் செய்திகளில், ஒருசார் நிலப்பகுதி உரிமைகளின் பொய்யான எந்தக் கொள்கையையும், உடன்படுவதில்லை. இந்திய நாட்டின் இயற்கைப் பரப்பளவு, எல்லைகளை உடையதாக இருந்தாலும், இந்தியாவின் ஆன்மிகக் குடியரசுக்கு எத்தகையதோர் எல்லைப் பாகுபாடும் இல்லை. பழங்காலத்தில் இருந்தது போலவே, இந்தியாவின் ஆன்மிக நற்செய்தி, உலகின் எல்லாப் பகுதிகளிலும், தனக்குரிய ஆர்வலர்களை, இந்நாளிலும் மீண்டும் பெற்று வருகின்றது. மேலைநாடுகளில், அதுவும் குறிப்பாக அமெரிக்க நாட்டில், வேதாந்தத்தின் செல்வாக்குப் பரப்பளவு, அங்கேயுள்ள நம்முடைய பல சுவாமிகளின் முன்னோடியான பணிகளின் மூலம், மெல்ல மெல்ல விரிந்து பரவி வருகின்றது. மேலை நாடுகளின் சிறந்த பேரறிஞர்கள் சிலர், வேதாந்தத்தின் உயரிய சிறப்பினை உணரவும், அது திறந்துள்ள வழியினைப் பின்தொடரவும், தொடங்கியுள்ளனர். மனித குல வரலாற்றில், ''மீளவும் விழிப்பூட்டப்பெற்ற மேலை நாடுகளின், வேதாந்த தத்துவ ஆர்வம்'' என்னும் ஒரு புதிய பகுதி, சேர்க்கப்பெற்று வருகின்றது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வேதாந்த மையங்களில், மேலை நாட்டுக்கு வேதாந்தம் கற்பிக்கும் முறை பற்றிய சிக்கல், தீர்க்கப் பெற்றுக் கொண்டு வருகின்றது. வேதாந்த உணர்வு என்பது ஒன்றாகவே உள்ளதாயினும், அதனைப் பற்றிய விளக்கங்கள், இந்தியாவிலும்கூடப் பல்வேறு வகையாக விளங்குகின்றன. சங்கரரின் கலப்பற்ற அத்வைதக் கொள்கைமுதல், மத்துவரின் நெகிழ்ந்து கொடாத துவைதக் கொள்கை வரையில், இடைப்பட்டனவாக எத்தனையோ பலவகையான வேதாந்தக் கொள்கைகள் இருந்து வருகின்றன. அவைகள் அனைத்தும், வேதங்களையே தம்முடைய பிரமாணங்களாக உரிமை கொண்டாடுகின்றன. வேதங்களின் சமய தத்துவச் சிந்தனையில், நிர்க்குணப் பிரம்மம் என்றும், சகுணப் பிரம்மம் என்றும், முதன்மையான இருவகைப் போக்குகள் உள்ளன. இவற்றில் ஒன்று அல்லது மற்றொன்று, வேதாந்தத்தின் பிரிவுகள் ஒவ்வொன்றிலும், முதன்மை இடம் பெறுகின்றது. ஆனால் இந்த எல்லாவகைப் பிரிவுகளிலும், ஒரு பெரும் பொதுக்கூறு அமைந்துள்ளது. அதுதான், உபநிடதங்கள் பிரம்மம் என்று அழைக்கின்ற, ஓர் அடிப்படைப் பரம்பொருளை உடன்படுவது. இவைகளுள், ''பிரம்மத்தை உருவமுடைய கடவுளாகக் கொள்வதா? அல்லது உருவமற்ற ஒரு பரம்பொருளாகக் கொள்வதா?'' என்பது பற்றிய, மிகச் சிக்கலானவேறுபாடு உள்ளது. அத்துவைதம் அல்லது இரண்டன்மையாகிய சங்கரரின் வேதாந்தக் கொள்கை, பிரம்மம் உருவமற்றது என்னும் பின்னைய கொள்கையினை ஆதரிக்கின்றது. ஏனையன பிறவோ கடவுள் உருவம் உடையவர் என்னும் கருத்தினைத் தழுவுகின்றன. சுவாமி விவேகானந்தர், ''மேலைநாட்டு உள்ளத்திற்குப் பெரிதும் இயைந்தது, பிரம்மம்

உருவமற்றது என்னும் அத்வைத வேதாந்தமே என்பதனைத் தெளிவாகக் கண்டுணர்ந்தார். அவருக்குப் பின்னர், அவருடைய பணியினை மேலைநாடுகளில் செய்துகொண்டு வருபவர்களும்கூட, தங்களின் அனுபவத்தின் மூலம், சுவாமி விவேகானந்தரின் கண்டுணர்வு எவ்வளவு பிழையற்றது, மிகவும் சரியானது என்பதை, ஆராய்ந்து உணர்ந்துள்ளனர்.

இந்திய நாடு, மேலைநாடுகளுக்கு வழங்குவதற்கு, அத்துவைத வேதாந்தமே சிறந்தது, என்பதற்குப் பலவகையான காரணங்கள் உள்ளன. அத்துவைதம் அல்லாத, இந்தியச் சிந்தனையின் மற்றைய கொள்கைகளுக்கு, மேலைநாடுகளில் ஒப்புமைப் பகுதிகள் பலகாணப்படக் கூடும். ஆனால் அத்துவைத தத்துவத்திற்கு, அத்தகைய ஒப்புமைக்கூறு எதுவும் இருப்பதாகத் தோன்றவில்லை. ஃபிச்டே, பிராட்லி போன்ற தத்துவப் பேரறிஞர்களின் சிந்தனைகளுடன், அத்துவைதக் கொள்கை ஒப்பிடப்படுவதுண்டு. என்றாலும் அவைகள்கூட, முதன்மையான பகுதிகளில் அத்துவைதத்தினின்று வேறுபடுகின்றன. ஆதலின் மனித குலத்தின் சிந்தனையிலும் அநுபவத்திலும், அத்துவைதமானது தலை சிறந்த ஓர் இடத்தைப் பெற்று விளங்குகிறது. மேலைநாட்டு உள்ளமானது, தனக்குரிய சூழ்நிலையினின்று நீங்கி, ஒரு நல்லவாய்ப்பான இடத்தில் இருந்து கொண்டு, உண்மையை நோக்கவும் உணரவும் விரும்புமாயின், அந்த இடமானது மேலை நாட்டுச் சூழல்களுக்குள் காணப்படமுடியாத, ஓர் இடமாகவே (இந்தியாவாகவே) இருக்கும். அத்துவைதமானது தனக்கேயுள்ள சிறப்பியல்பைப் பெற்றுள்ளது; அச்சிறப்பியல்பானது, மேலைநாட்டுச் சிந்தனையின் தரங்களால் மட்டுமன்றி, கீழைநாடு மற்றும்இந்திய நாட்டின் தரங்களாலும், ஆராய்ந்து அளந்து மதிப்பிடப்பட்டதாகும். மேலும் அத்துவைதமானது, பரப் பிரம்மத்தின் கடவுளியல் அணுக்கத்தினைத் தழுவி உள்ளடக்கியதேயன்றி, அதற்கு மாறுபட்டதன்று. அத்துவைதத்தில் கடவுளுக்கு இடமில்லை என்று வாதிடுவது, பயனில் வீண் செயலேயாகும். பரம் பொருளின் இரண்டன்மையாகிய அத்துவைதக் கொள்கையினை விளக்கும் பேருரையாளராகிய சங்கரர் ,பல்வேறுவகையான வடிவங்களைக் கொண்ட, உருவமுள்ள பரம்பொருளைக் குறித்து, உயிரை இயக்கும் அழகிய பற்பல துதிப்பாடல்களைப் பாடியுள்ளார். தமக்குப் பின்னர், அவர் விட்டுச் சென்றுள்ள அப்பாடல்கள், அவருடைய ஆழ்ந்த சிறந்த நல்ல பக்தியுணர்வுகளுக்குச் சான்று பகர்கின்றன. ''வழிபடுபவர் - வழிபடப்பெறும் தெய்வம்'' என்னும் உறவு, ஒரு சிறந்த உறவாகும். அவ்வுறவு, ஏனைய பிற எல்லாவகையான உறவுகளையும்விட, மிகவும் புனிதம் வாய்ந்ததாகும்.

ஆனால் அதுவும்கூட, பிரித்துணர இயலாத இறுதிநிலை அநுபவத்தில், கடக்கப்பட்டு விடுகின்றது என்று, அத்துவைதம் கூறுகின்றது. எது மிகுதியானதோ, அது குறைந்ததாக இருக்க முடியாது. அத்வைதமானது கடவுள் உணர்விலும் மேம்பட்டது என்றால், அது கடவுளின்மைக் கொள்கையாகவோ, அல்லது கடவுள் எதிர்ப்புக் கொள்கையாகவோ இருத்தல் இயலாது. கடவுள் உணர்வுக் கொள்கைகள் பலவும் ,தமக்குள் ஒன்றொடொன்று பூசலிட்டுப் பிணங்கிக் கொள்ளலாம். அத்வைதத்திற்கு அவைகளுள் எதனோடும் பூசல் இல்லை. சங்கரரின் குருவுக்குக் குரு என்று தொன்று தொட்டுக் கருதப்பெறுகின்ற, பழமையான அத்துவைத தத்துவ ஆசார்யர் ஒருவர், ''அத்வைதமானது, பல்வேறு சமய தத்துவக்கொள்கைகளுக்கும், மூலமும் முழுமையும் ஆக விளங்குகின்றது; சமய தத்துவங்கள் யாவும், அத்துவைத தத்துவத்தின் பகுதிகளும் பாகுபாடுகளுமே ஆகும்'' என்று கூறுகின்றார்.

தற்காலத்திய மேலை நாட்டு உள்ளத்திற்கு, அத்வைதத்தின் கொள்கைப் பிடிவாத மற்ற தன்மை, மிக்க பெரும் கவர்ச்சியை விளைவிப்பதாகும். பழைய கால ஐரோப்பிய தத்துவ ஞானிகள், வெவ்வேறு வகையான கொள்கை வகைகளில் ஈடுபட்டு மகிழ்ச்சியுற்றுத் திளைத்து நின்றனர். ஆனால் இப்பொழுது தற்காலத்திய சிந்தனையாளர்கள் பலர், ஏதேனும் ஒரு கொள்கையைத் தழுவுதற்குத் தயங்குகின்றனர். ''நீர் எந்தவகையான சிந்தனைப் பிரிவைச் சேர்ந்திருக்கின்றீர்?'' என்னும் வினாவிற்கு, அமெரிக்க நாட்டுத் தத்துவ அறிஞர்களில் பலர், எத்தகைய விடையும் அளிக்க இயலாதவர்களாக இருக்கின்றனர். இருக்கத் தகும் நிலை கொள்கை (Idealism) , இருக்கும் நிலைக் கொள்கை (Realism), உலகாயதக் கொள்கை (Materialism), மன இயல்புக் கொள்கை (Mentalism), போன்றவற்றிற்கு இடையே இருந்துவந்த பழைய காலத் தடைநிலைகள், இந்நாளில் மறைந்து வருவதாகத் தோன்றுகின்றன. அதன் விளைவாக மேலை நாட்டு உள்ளம், அத்வைதக் கொள்கையை அறிந்து வியந்து போற்றுதற்கு ஏற்றதாக உள்ளது. ஏனெனில் அத்வைதம் உலகில் நிலவிவரும் பலவகைக் கோட்பாடுகளுள் ஒன்றன்று. அங்ஙனமாயின், 'அத்வைதமானது இரண்டன்மையன்றா?' என்று, எவரேனும் கேட்கக்கூடும். அத்வைதம் என்னும் சொல்லிலுள்ள முன்னொட்டானது, இரண்டெனும் தன்மைக்கு மட்டுமின்றி, கோட்பாடு என்பதற்கும்கூட, எதிர்மறையாகும் என்பது தான்,அதற்குவிடை. அத்வைதத்தின் குறிக்கோள்களில் ஒன்று, ''தத்துவங்கள் என்று சொல்லப்படுகின்றனவும், ஒன்றோடு ஒன்று முரண்படுவனவும் ஆகிய கருத்துக்கள், பல குறைபாடுகள் கொண்டவை; ஏதோ ஒன்றிற்கு அப்பால் நம்மைக் கொண்டு செல்லுகின்ற வரையில்தான், அவைகள் பயன்படும்'' என்னும் உண்மையை, உணர்த்துவதேயாகும். முழு அநுபவத்தைப் பெறுவதுதான் நம்முடைய குறிக்கோள். அத்வைதத்தின் மிக மேலான குறிக்கோளானது, அந்த அநுபவத்தை அடையும் வரையில், ஓயாமல் உழைத்தலை வற்புறுத்துவதேயாகும்.

அத்வைதத்தின் கொள்கைப் பிடிவாத மற்ற தன்மையைப் பற்றி, மேலே நான் குறிப்பிட்டேன். அங்ஙனம் அதன் பண்பைச் சுட்டிய தற்குரிய காரணங்களுள் ஒன்றையும் குறிப்பிட்டேன். அதற்கு வேறு காரணங்களும்கூட உள்ளன. அறிவின் கருவியாகத் தருக்க இயற்காரணம் அமைவது பற்றிய, அத்வைதத்தின்

நிலையை, உதாரணமாக நாம் எடுத்துக் கொள்வோம். மரபுநெறி மதங்கள் அறிவை நம்புவதில்லை; நம்பிக்கையினையே அவைகள் வற்புறுத்துகின்றன. மேற்கில் பலவும், கிழக்கில் சிலவும் ஆகிய தத்துவ நெறிகள், பகுத்தறிவைத் தவிர வேறு எந்த வகையான அறிவையும் ஏற்பதில்லை. இந்த இருவகையான நிலைகளும், கொள்கைப் பிடிப் பிடிவாதத் தன்மை உடையவை என்று காண்பது கடினமன்று. நம்பிக்கையைப் பொறுத்த வரையில் அறிவிற்கு இடமில்லை என்றுகொள்வதில், சமயங்கள் பிடிவாதத்தன்மை உடையனவாக இருக்கின்றன. அறிவுக்கு மேலானதோ அல்லது அப்பாற்பட்டதோ எதுவும் இல்லைஎன்று கொள்வதில், தத்துவ நெறிகள் பிடிவாத இயல்புடையனவாக இருக்கின்றன.

சமய தத்துவ ஆராய்ச்சியில் அறிவுக்குரிய சரியான இடத்தைக் கொடுப்பதுடன், ''மனிதனின் குறிக்கோள் பரம்பொருளின் இயல்பினைக் கொள்கையளவில் உணர்ந்து கொள்வதனால் மட்டும் அடையப் பெறுவதில்லை'' என்று, அத்வைதம் சுட்டிக் காட்டுகின்றது. தத்துவம் என்பது அநுபவம்; அது வெறுந் தருக்க இயல் அறிவு மட்டும் அன்று. அநுபவத்தை விளக்கி விரித்துரைப்பதற்குத் தருக்கநெறி அறிவு இன்றியமையாததாக இருந்த போதிலும், தருக்கநெறி அறிவே தத்துவமாகாது. முழு அநுபவம், தருக்கநெறி அறிவைக் கடந்து நிற்கின்றது. ஆயினும் அஃது அறிவுக்கு மாறுபட்டதன்று. கௌடபாதரின் நான்கு அத்தியாயங்கள் கொண்ட மாண்டூக்கிய காரிகை என்னும் நூலின் உரையில், வேதப் பிரமாணம் பற்றிய முதல் அத்தியாயத்தில் நிறுவப்பெறுகின்ற அத்வைத தத்துவக் கொள்கைகள், அடுத்த மூன்று அத்தியாயங்களில் தருக்க இயற்காரண விளக்கங்களின் மூலம், புரிந்து கொள்ளுவதற்கு உரியனவாகத் தெளிவுறுத்தப்படுகின்றன. ஆதலின் அறிவாராய்ச்சி என்பது பயனுடையதாகவே விளங்குகின்றது. ஆனால் அதே சமயத்தில், அது தனக்கே எல்லாம் தெரியும் என்று அகந்தை கொள்ளவும், தன்னுடைய அறிவின் எல்லைக்கு அப்பால் அனுபவம் எதுவும் இல்லை என்று உரிமை கொண்டாடவும், முற்படுதல் கூடாது.

அத்வைதத்தின் கொள்கைப் பிடிவாத மற்ற தன்மை, அதன் வரலாற்றைக் கற்றுணர முற்படுபவர்களுக்குத் தெளிவாகத் தெரியும். அத்வைதத்தில் கொள்கை வேறுபாடுகள் உள்ளன. ஏனெனில் அத்வைத ஆசிரியர்கள், உண்மையினை விளக்குவதற்குப் பலவகையான முறைகளை மேற்கொள்வது இன்றியமையாதது என்று கண்டுள்ளனர். ''ஆன்மா ஒன்றா பலவா?'' ''உலகத்தின் நிலைமை என்ன?'' என்பன போன்ற வினாக்களுக்கு, அத்வைத ஆசிரியர்கள் வெவ்வேறான விடைகளை அளித்துள்ளனர். விடுதலைப்பேறு குறித்தும்கூட, அவர்கள் தமக்குள் வேறுபட்டுள்ளனர். விடுதலைப் பேற்றிற்கு வழிவகுப்பது ஞான நெறியா? அல்லது இறைவனிடத்து அன்பு செலுத்தும் பக்தி நெறியா? என்னும் வினாக்களில், சங்கரர் ஞான நெறியே விடுதலைப் பேற்றிற்கு வழிவகுக்கும் என்கின்றார். பிற்காலத்தில் அவரது வழிவந்த மதுசூதனர் என்பவர், அத்வைத தத்துவங்களை முழுவதும் ஒப்புக் கொண்டபோதிலும், பரப்பிரம்மத்தை உணர்வதற்குப் பக்திநெறியே எளிய நெறி என்கின்றார். இங்ஙனமே அத்வைதத்தை அணுகும் முறைகளில், ஒன்றற்கொன்று மாறான நிலைகள் உள்ளன. அத்வைதத்தின் கொள்கை வேறுபாடுகளை விளக்கப் புகுகின்ற ஒருநூல், அத்வைதத்தை ஒருபெரும் ஆற்றுக்கு ஒப்பாகக் கூறுகின்றது. ஆறானது தொடக்கத்தில் ஒரு மூலத்தினின்றே தோன்றியபோதிலும்? சமவெளியை அடைகின்றபோது பல கிளைகளாகப் பிரிந்து, பலதிற மக்களுக்கும் பயன்பட்டுப் பணிபுரிகின்றது. அதுபோலவே அத்வைதமும் வேதம் ஆகிய ஒரே மூலத்தினின்று தொடக்கத்தில் தோன்றி, மக்களிடையில் பல வேறு வகையாகப் பிரிந்து, அவரவர்களின் அறிவுக்கும் மனப்பக்குவத்திற்கும் ஏற்பப் பயன்பட்டுப் பணிபுரிகின்றது.

தத்துவ விசாரம் புரிபவர் அனைவரும், ஒரே வகையான உள்ளமும் அறிவும் உடையவர்கள் அல்லர். அவரவர்களின் இயல்புகளுக்கும் மனநிலைகளுக்கும் ஏற்ப, அத்வைத ஆசிரியர்கள், தம்முடைய கொள்கைகளை விளக்குவதற்கு வெவ்வேறு வகையான முறைகளைக் கைக்கொள்கின்றனர். பௌத்தமதம் இந்தியாவில் பரவலாகிச் செல்வாக்குப் பெற்றிருந்த காலத்தில், அத்வைதக் கொள்கையினைக் கற்பிப்பதற்குக் கௌடபாதர் பௌத்த மதத்தின் சொற்கள்-சொற்றொடர்கள் ஆகிய குறியீடுகளைக் கடன்பெற்றுப் பயன்படுத்தினார். சங்கரர் தம்முடைய பாடல்களில் ஒன்றில், காசுமீரச் சைவத்தின் குறியீடுகளைப் பயன்படுத்துகின்றார். பரமார்த்தசாரம் என்னும் அத்வைத நூல், சாங்கியக் கொள்கைபற்றி முதன்முதல் அறியப் பெற்றதொரு நூலின் மூலத்தைத் தழுவி, அமைக்கப்பெற்றுள்ளது. ஆதலின் மேலை நாடுகளில் நுழைந்து இடம் பெற்றுவரும் அத்வைத வேதாந்தமானது, மேலைநாட்டு உள்ளத்திற்கு ஏற்ற முறையிலேயே விளக்கப் பெறுதல் வேண்டும். அது குறித்து வியப்படைதற்கு ஏதுமில்லை. அத்வைதத்தின் தனிச் சிறப்பியல்புக்கும், சம்பிரதாய நெறிமுறைக்கும், அது முற்றிலும் மிக மிகப் பொருந்துவதேயாகும்.

இந்தத் தத்துவத்தை விரும்புபவர்கள் அனைவரும், அவர்கள் எங்கிருந்தாலும், மேலை நாடுகளில் அதன் வளர்ச்சிப் போக்கினைக், கூர்ந்து நோக்கிக் கவனித்து வருவதற்கு ஆவலுடன் இருப்பர். மேலைநாட்டு வாழ்க்கையில் வேதாந்தத்தைப் புகுமுகம் செய்து பரப்புவதின்மூலம், இந்திய நாடு மட்டுமின்றி, இவ்வுலகம் முழுவதுமே நலம்பெறும். மதவெறி உணர்வுகளுக்கும், மதமாற்ற முனைப்பு முயற்சிகளுக்கும், அத்வைதத்தின் இந்தப் புகுமுகப் பரப்புமுறை, அறவே பெரிதும் மாறுபட்டதாகும்.

—''Western Vedanta''

என்னும் ஆங்கிலக் கட்டுரையின்

தமிழாக்கம்: ந.ரா. முருகவேள்

## கர்நாடக சங்கீதத்தின்

# ஆதி மும்மூர்த்திகள்

''இலக்கிய ஆராய்ச்சிப் பேரறிஞர்''

திரு மு. அருணாசலம் அவர்கள்

(முற்றொடர்ச்சி)

''ஒருத்தியவள் உம்மை வரச் சொன்னாள் காண்'' என்று தொடங்கும் பல்லவி உடையது. மூன்றாவது பதம், பைரவி ஆதிதாளம். ''தருணம் உன்மேல் மயல்கொண்டு மகள் தவிக்கிறாள்'' என்ற பல்லவி, நான்காவது. கல்யாணி ராகம் ஆதிதாளம். 'நித்தியம் நித்தியம் எத்தனையோ மனம்' என்று தொடங்கும் பல்லவி உடையது. ஐந்தாவது பாடல் மயிலைக் கற்பகவல்லி அம்பிகைமீது மோகனம் ஆதி தாளத்தில் அமைந்த கீர்த்தனம்.

வேறு திக்கறி யேனம்மா நீயேயல்லால்-
வேறே
யாதரவேது சொல்வாய் சும்மா

என்று பல்லவி உடையது.

இக்கீர்த்தனங்கள் சென்ற நூற்றாண்டில் 1855-ல் வியாசர்பாடி விநாயக முதலியார் கட்டிய 'சித்திரச்சத்திரப் புகழ்ச்சி மாலை' என்ற பல வித்துவான்கள் பாடல் தொகுப்பில் உள்ளன. அம்முதலியார் திருமயிலையில் வாழ்ந்தார். அவர் ஓர் அழகான சித்திரம் கட்டிய போது, அதைப் புகழ்ந்து, அவருடைய வள்ளன்மையையும் போற்றி மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையே ஒரு விரிவான மாலை பாடி அளித்திருக்கிறார். அக்காலத்தில் வாழ்ந்த புலவர், இசைவாணர் எல்லோரும் முதலியாரைப் புகழ்ந்து கணக்கற்ற தனிப் பாடல்களும், பிரபந்தங்களும், கீர்த்தனங்களும், பதங்களும் பாடினார்கள். அப்பாடல்கள் 160 பக்கம் உள்ள ஒரு பெரு நூலாக அச்சிடப்பட்டுள்ளது. சென்ற நூற்றாண்டின் இடைப் பகுதியில் இருந்த இலக்கியப் போக்கை அறிய அது ஒரு சிறந்த கருவியாகும். அந்த நூலின் இடையில், இந்தக் கீர்த்தனங்கள் காணப்படுகின்றன. இந்தக் கீர்த்தனங்கள் 125, 31 ஆகிய பக்கங்களில் காணப்படுகின்றன. இவற்றுள் குறித்த தெய்வங்களின் புகழேயன்றி விநாயக முதலியாரின் பேரோ, சத்திரத்தின் பேரோ இல்லை. விநாயக முதலியாரைப் புகழும் நூல் திரட்டில் கவிராயர் பாடலுக்கு இடமில்லை. ஆனால் இதிலிருந்து ஒன்று தெரிகிறது. அக்காலத்திலிருந்த பெரும் புலவர்கள் தாங்கள் கேட்டிருந்த தமிழ்க் கீர்த்தனங்களை அவை இறந்து போகாமல் காக்க வேண்டி எங்கேனும் ஓரிடத்தில் சேர்த்து அச்சிட்டு வைத்திருந்தார்கள். அவ்வாறு இங்கு இடம் பெற்றனவே இக் கீர்த்தனங்கள்.

இதுபோல மற்றொரு கீர்த்தனமும் சீகாழி அருணாசலக்கவிராயர் பாடியது, முத்துத் தாண்டவர் கீர்த்தனப் புத்தகத்தின் கடைசியில் சேர்த்து அச்சிட்டிருக்கக் காண்கிறோம். இது சௌராஷ்டிர இராகத்தில் அடதாளத்தில் அமைந்தது. 'தில்லைத்தலம் போல-சொல்லப் புவிமீதில் தெய்வத் தலங்களுண்டோ-நாளும்' என்ற பல்லவி யுடையது.

இவையெல்லாம் கவிராயருடைய சைவப் பற்றைக் காட்டும். அருணாசலக் கவிராயர், இராம நாடகக் கீர்த்தனை பாடியிருக்கிறார் என்பது, இதுவரையில் யாரும் கேட்டிராத செய்தி, முதன்முதல் இங்கேதான் சொல்லப்படுகிறது.

### சீர்காழித் தலபுராணம் :

கவிராயர் சீர்காழியில் வசிக்கையில் தம் நண்பரான தம்பிரான் விரும்பியபடி சீர்காழித் தலபுராணத்தைப் பாடிமுடித்துக் கொடுத்தார். இப் புராணம் 31 அதிகாரங்களும் 1550 பாடல்களும் கொண்டது. சிறந்த இலக்கியப்பண்பு பொருந்தியது. சீகாழிக்குப் பன்னிருபெயர் அமைந்த வரலாற்றைச் சிறப்பாக உணர்த்துகிறது. சிதம்பரநாத முனிவரே இதற்கு ஒரு சிறப்புப் பாயிரம் கொடுத்திருக்கிறார்.

### அநுமார்பிள்ளைத்தமிழ் :

இந்த நூல் கிடைத்து 1899இல் அச்சிடப்பட்டுள்ளது. வழக்கம் போல் 10 பருவங்களும் 100 பாடல்களும் உடையது. அநுமார் இங்கு திரிநேத்திர மாருதி என்ற சொல்லப்படுகிறார். கவிராயர் மிகவும் ஈடுபட்டு அழகாக இந்நூலைப் பாடியிருக்கிறார். காப்புப் பருவத்துக் கடைசிப்படலத்து இறுதிப் பாடல்,

திருமேவும் ஆழ்வார்கள் பதின்மரும்வடி
தெருட்டி உரையிட்ட மதுரச்
செந்தமிழ்த் தேனுண்ட சிறிய திருவடி
யிரு
செஞ்செவிக்கண் கவிராயரோ.

**பிற நூல்கள் :**

இவர் செய்த அசோமுகி நாடகம் ஒரு கால் இராமநாடகம் போலக் கீர்த்தனை நாடகமாக இருக்கலாம். கிடைக்கவில்லை. காழி அந்தாதி அச்சிடப் பட்டுள்ளது. காழிப்பள்ளு கிடைக்கவில்லை. 5 பாடல்களே கிடைத்து என்னால் வெளியிடப்பட்டுள்ளன. காழிக் கலம்பகம், காழிக்கோவை, தியாகேசர்வண்ணம் முதலியவை பற்றிய செய்திகள் தெரிய வில்லை. · .. நூல்கள் இல்லை. தியாகேசர் வண்ணத்துக்கு இலிங்கப்பச் செட்டியார் மகன் தேப்பெருமாள் செட்டியார் பரிசில் அளித்தார். என்பதைக் கவிராயருடைய 'கவிகொண்ட பஞ்ச லட்சணம்' என்ற சீட்டுக் கவியால் அறியலாம்.

**கவிராயர் பரம்பரை :**

கவிராயருடைய புதல்வர் அம்பலவாணக் கவிராயர் என்பவர். இவரும் சிறந்த புலவராக விளங்கினார். தந்தை காலமான பிறகு இவர் கொங்குநாடு சென்று, அங்கு அறப்பளீசுர சதகம் முதலான நூல்களை இயற்றினார் என்று சொல்வர். வேறு செய்திகள் தெரிய வில்லை.

ஆனால் நாடகக் கீர்த்தனம்பாடிக் காலட்சேபம் செய்தமுறையில் கவிராயருடைய இசைப் பரம்பரை மிகவும் விரிவாக வளர்ந்தது. கவிராயருக்குப் பிறகு சரித்திர நாடகக் கீர்த்தனையைப்பாடிய இசைப் புலவர்கள் எண்ணற்றவர்கள். சமீபகாலத்தில் நந்தனார் சரித்திரக் கீர்த்தனை பாடிய கோபாலகிருஷ்ண பாரதி உலகமறிந்த பக்தர். சிறந்த இசைவாணர். இவர் தியாகராச சுவாமிகளுக்குச் சமகாலத்தவர். இவருக்கு முன்னும் பின்னும் எண்ணற்ற ஆசிரியர் தோன்றிச் சிறப்பான நாடகக் கீர்த்தனைகள் பாடியிருக்கிறார்கள். இவர்களே உண்மையில் அருணாசலக் கவிராயருடைய பரம்பரையை வளர்த்தவர்கள் . அவர்களுள் சிலரை மட்டும் இங்கே குறிப்பிடுவோம். அனந்தபாரதி அய்யங்கார் உத்தர ராமாயணக்கீர்த்தனையும், வேதாந்த தேசிகர் வைபோகக்கீர்த்தனையும் எழுதினார். திருவிளையாடல்கீர்த்தனை-மழலை சுப்பிரமணிய பாரதி, பெரியபுராணக்கீர்த்தனை-மகா வைத்தியநாத அய்யர் தமையனாரான ராமசாமி சிவம்; பாகவததசமஸ்கந்த கீர்த்தனை-லட்சுமி அம்மாள், அருணாசலேசுவரர் கீர்த்தனை - வீரணப்புலவர், மற்றுமொரு பெரிய புராணக் கீர்த்தனை-மழலை சிதம்பர பாரதி, மகா பாரதக்கீர்த்தனை-முத்துராம முதலியார், கந்தபுராணக் கீர்த்தனை-கவிகுஞ்சரபாரதியார், பெற்றான் சாம்பான் சரித்திரக் கீர்த்தனை-தியாகராஜ தேசிகர், இவையாவும் அளவாற் பெருநூல்கள்.

இவையன்றித் தனித்தனி அடியவர் சரித்திரங்களும், நாயன்மார் வரலாறுகளும், சிறு நாடகக் கீர்த்தனங்களாகப் பாடப்பட்டுள்ளன. குசேலர், துருவன், ஜெயதேவர், புரந்தர தாசர், ருக்மாங்கதன் முதலியவை இவ்வாறு பாடப்பெற்றுள்ளன. நாயன்மார்களில்காரைக்கால் அம்மையார், சிறுத்தொண்டர், அப்பூதி அடிகள், திருக்குறிப்புத் தொண்டர், பராங்குச தாசர் முதலியன குறிப்பிடத்தக்கவை. இவை போல் இன்னும் எத்தனையோ.

**முடிவுரை :**

தேவார காலம் தொடங்கித் தேவாரப் பண்ணிசை தமிழ் நாடெங்கும் ஒலித்துக் கொண்டிருந்தது. அரசில் என்னென்ன மாறுதல்கள் ஏற்பட்டபோதிலும், அவற்றினால் பாதிக்கப் பெறாமல் மேளக்காரர் பரம்பரையினர் சிவாலயங்களில் இப் பண் வரிசையை நாள்தோறும் ஓதிவந்தார்கள். இதன் பயனாய் இவ்விசை நன்கு பாதுகாக்கப் பெற்று, தொடர்பு அறாமல் இசைச் சிறப்புக் குன்றாமல் நின்று நிலவிற்று. இது சோழ நாட்டிலேயே பெரும் ஆட்சிபெற்றிருந்தது. முத்துத் தாண்டவர் பேணியதும் இந்தப் பண்ணிசையே. கீர்த்தனப்பாணியில் அமைத்துப் புதுமெருகு கொடுத்தார். சோழ நாட்டின் பெரும்பகுதி தஞ்சாவூர் ஜில்லாவாதலினால், பிற்காலத்தில் இது தஞ்சாவூர்ப் பாணி என்று பெயர் பெற்றது. இந்தப் பாணி வரலாறு அறிந்தவகையில் கீர்த்தன வடிவம் பெற்றுக் காப்பாற்றப்பட்டது முத்துத்தாண்டவரால் தான். பின்னால் யார் எங்குப் பாடினாலும், அது எந்த மொழியாயினும், தமிழ் தெலுங்கு வடமொழி எதுவாயினும், தஞ்சாவூர்ப் பாணி என்றே வழங்கப் பெறலாயிற்று. திருப்பாம்புரம் சுவாமிநாதபிள்ளை இவற்றுக்கு வர்ண மெட்டு சுரம் அமைத்தபோது, அவர் புதிதாக எதுவும் செய்துவிடவில்லை. அவர் குடும்பத்திலும் பிற குடும்பங்களிலும் வழங்கிய பாணியையே கடைப்பிடித்தார். அது தேவார காலம் தொடங்கி முத்துத்தாண்டவர் வழியாக வளர்ந்து வந்த பாணி. இதையே பிறர் கர்நாடகசங்கீதம் என்று கூறத் தலைப்பட்டார்கள். இதன்பொருள், இது பழமையானது, சாஸ்திரோக்தமானது என்பதாகும். மேளக்காரர் அனைவரும் தெய்வத்துக்கென்றே தங்கள் கலையைச் சமர்ப்பணம் செய்திருந்தமையால், அதில் பிற பாணிகள் எவையும் கலக்காமல் தூயநிலையிலேயே இருந்து வந்தது. இந்தத் தூய நிலையே அதற்குக் கர்நாடகமென்ற பெயரைச் சூட்டியது. இதுவே தஞ்சாவூர்ப் பாணி என்றும் புகழப்பெற்றது.

பலர் பலவகையாக ராக தாளம் அமைத்துத் சரிபடுத்த முடியும். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார் வெளியிட்டுள்ள சாமிநாதப் பிள்ளையின் சுரப்பதிப்பின் சிறப்பு, இது உண்மையான சுத்த கர்நாடக சங்கீதம், பரம்பரையான சங்கீதம், பிற்காலத்து அன்னியப் பாணிகள் கலவாதது என்பதாகும். மேளக்காரர் இந்தப் பாணியைத் தங்கள் குடும்பச் சொத்து போலக் காப்பாற்றி வந்தமையால், இது இன்று வரை சுத்தமாக இருந்து வந்திருக்கிறது. சாமிநாதப்பிள்ளை அமைத்தபோது தம்மால் பாடக் காதிலே கேட்டுக் கேட்டுப் பண்பட்டு வந்த இசையை அமைத்தார். பிறர்க்கு இந்த அளவு கேட்கவும் பழகவும் வாய்ப்பு இல்லாமையால் சிறப்பாகவும் சுத்தமாகவும் அமைக்கும் நல்ல வாய்ப்பு அவர்களுக்கு இல்லை.

# வடக்குத் திருவீதிப்பிள்ளை

"மகாவித்துவான்"

திரு பி. ப. அண்ணங்கராச்சாரிய சுவாமிகள்

காஞ்சிபுரம்

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

வடக்குத் திருவீதிப்பிள்ளை சீர்வசன பூடணம், முமுட்சுப்படி முதலிய பதினெண் மறைநுண் பொருள் நூல்களை அருளிச்செய்த பிள்ளைலோகாச் சாரியருக்கும், ஆசாரிய இருதயம் என்னும் நூலை அருளிச் செய்த அழகிய மணவாளப்பெருமாள் நாயனாருக்கும், திருத் தந்தையார் ஆவர். இவருடைய இயற்பெயர் கிருஷ்ணமகாகுரு என்பது ஆகும். இந்தத் திருப் பெயரே, பெரியவாச்சான்பிள்ளை என்கிற மற்றோர் ஆசிரியர்க்கும் இருந்ததனால், நம்பிள்ளை திருவடிகளில் ஈடுபட்டிருந்த அவர்களுக்குள் வேறுபாடு தெரிவதற்காக இவர் வடக்குத் திருவீதிப்பிள்ளை என வழங்கப் பெற்று வந்தார். திருவரங்கம் பெரிய கோயிலில் வடக்குத் திருவீதியில் இவர் வாழ்ந்து வந்ததுவே, இத் திருப்பெயர் ஏற்படுவதற்குக் காரணம் ஆகும்.

இப் பேராசிரியருடைய திவ்விய சரித்திரங்களைப் பற்றி, நம் முன்னோர்கள் விவரமாக எதுவும் எழுதிவைத்ததில்லை. ஆதலால் இங்கு அவருடைய ஞானப் பெருமைகளை மட்டும் ஒருசிறிது ஆராய்ந்து அனுபவிப்போம். பகவத் விஷயம் என வழங்கப்படுகின்ற திருவாய்மொழி வியாக்கியானமான ஈடு முப்பத்தாறாயிரப்படியை, இவ்வாசிரியரே பட்டோலை கொண்டவர். உபதேச ரத்தினமாலையில் "தெள்ளியதா நம்பிள்ளை செப்பும் நெறி தன்னை, வள்ளல் வடக்குத் திருவீதிப் பிள்ளை, இந்த நாடறிய மாறன் மறைப் பொருளை நன்குரைத்தது, ஈடு முப்பத்தாறாயிரம்" என்று அருளிச் செய்த பாசுரத்தின்படி நம்பிள்ளையின் திருவாய்மொழி விரிவுரைகளைக் கேட்டுத் திருவுள்ளத்தில் தரித்துக் கொண்டிருந்து அதி அற்புதமாகப் பட்டோலை கொண்ட (எழுதியருளிய) பெருமை இவ் வாசிரியருக்கே தனிச்சிறப்பாக உரியதாகும். சிலர் கூறுவதாவது: நம்பிள்ளை சோதிவாய் திறந்து அருளிய பொருள் நயங்கள் எப்படியோ, அப்படியே அப்பொருள் நயங்கள் ஈட்டில் அமைக்கப்பட்டன என்று. இதில் அவுசித்தியம் சிறிதும் இல்லை. பேச்சுவழக்கு நடைவேறு; நூல் எழுதுகின்ற நடைத்திறன் வேறு. கங்கை யாற்றின் பெருவெள்ளம்போல் நம்பிள்ளை அருளிச் செய்தவையாய், கரைகட்டாக் காவேரி என்னும் படியாய் அமைந்த விரிவுரைகள், அப்படியே உள்ளது உள்ளவாறு ஏடுபடுத்த முடியாதவை. பெரும் சொற்பொழிவுகளில் குறிப்பெடுத்துக் கொள்ளும் முறையில் அமைந்தது ஈடு. ஈட்டின் பொருள் விளக்கச் சிறப்பு முறைகள் வேறு எந்த நூலிலும் கண்டறியாததும், காணமுடியாதததுமாகும். தமிழ்ப் புலவர்களும் வடமொழிப் புலவர்களும் தனித்தனியே உள்குழையத் தக்க உயர்ந்த சிறந்த சுவை நலச்சிறப்பு வாய்ந்தது நம்பிள்ளை அருளிய ஈடு. "ஈட்டுக்கு உவமை ஈடே" என்னவேண்டும். அத்தனை. மணிப்பிரவாள நடையில் மற்றும் எத்தனையோ பல ஆசிரியர்களும்கூட எழுதியிருக்கின்றார் எனினும், இவருடைய நடையின் சிறப்பு, தேனும்பாலும் நெய்யும் கன்னலும் அமுதமும் ஒத்து விளங்கும் மாட்சிமை உடையது. அனுபவித்து உணர்ந்த அறிஞர் பெருமக்களுக்கு அதன் பலவகைச் சிறப்புக்களையும் அறிதல் இயலும். பொருள் தெரியாமற் போனாலும், அதன் விளக்கஅமைப்பின் சிறப்பை ஒருசிறிது அறிந்த அளவிலேயே இரும்புபோல் வலிய நெஞ்சும் இறையிறை உருகும் என்பதில் ஐயம் சிறிதும் இல்லை. பெரிய புலவர்கள் பத்தெட்டு வரிகளில் எழுத வேண்டிய பொருள்களை, ஒருவரியிலேயே வெகு கம்பீரமாக அடக்கி எழுதும் திறன் இவ்வாசிரியர்க்கே சிறப்பாக அமைந்தது எனலாம்.

மணவாள மாமுனிகள் இவ்வாசிரியருக்கு வள்ளல் என்ற சிறப்பு அடைமொழியை யிட்டு அருளினார். உதாரகுணம் வாய்ந்தவர் என்பது அதன் பொருள். வரையாது வழங்கும் வள்ளற்றன்மை மிக்கவர்கள் உலகில் பலர் புகழ் பெற்றிருந்தாலும், இவர் ஒருவருடைய ஞானதான வள்ளற் றன்மையே உண்மையில் உவந்து கொண்டாடத் தக்கதும் ஒப்புயர்வு அற்றது மாகும். ஏற்கனவே திருக்குருகைப் பிரான்பிள்ளான் அருளிச் செய்த ஆறாயிரப்படி வியாக்கியானமும், நஞ்சீயர் அருளிச் செய்த ஒன்பதினாயிரப்படி வியாக்கியானமும் இருந்தாலும், அவைகள் மிகவும் சுருக்கமானவைகள் ஆகையாலே, அனுபவ ரசிகர்களுக்குப் பரிபூரண மனநிறைவு விளைவிக்கப் போதாதவை. நம்பிள்ளை தம்முடைய நல்லருளால் ஏவியிட, பெரியவாச்சான்பிள்ளை அருளிச் செய்த இருபத்திநாலாயிரப்படி வியாக்கியானம் அவை

களைப்போலச் சுருக்கம் அன்றிக்கே, சிறிது விரிவாகவே இருந்தாலும், ஈடுமுப்பத்தாறாயிரப்படி திருவவதரித்த பின்பு, அதுவும் சுருக்கமே என்னும்படியாயிற்று. அநேக இடங்களில் இருபத்தினாலாயிரப்படி அமைப்பு முறைகளும் ஈட்டின் அமைப்பு முறைகளும் ஒற்றுமைப்பட்டிருக்கையாலே, முன்னம் அவதரித்ததான இந்த வியாக்கியானத்தின் துணைகொண்டே, ஈடு எழுதியருளப் பட்டது என்று தெரிகின்றது. ஆயினும் உரைநயத்தின் மிடுக்கும், பொருள் நலத்தின் நிறைவும், ஈட்டுக்கு வேறு எந்த நூலுக்கும் அமையாத சிறப்பு முறையில் அமைந்திருப்பது பற்றியே அதுவே எங்கும் காலட்சேப நூலாகக் கொள்ளப்பட்டுக் குலாவிப் போற்றப் பெறுகின்றது. இராமாயணம் முதலிய இதிகாச புராணங்களிலிருந்து மேற்கோளாக ஆங்காங்கு பலபல சுலோகங்களையெடுத்து இனிமையே வடிவெடுத்ததாக வியாக்கியானம் செய்தருளும் அழகு, ஈட்டுக்குச் சிறந்த உயர்ந்த அணிகலனாகும்.

திருவிருத்தத்திற்கும் இங்ஙனம் ஈடுவியாக்கியானம் அமைந்துள்ளது. அஷ்டசுலோகி பெரியபடியின் வியாக்கியானத்தில் ''வடக்குத் திருவீதிப்பிள்ளை அஷ்டாட்சர தீபிகையிலே அருளிச் செய்தருளினார்'' என்று காண்கையாலே, அஷ்டாட்சர தீபிகை என்கிற நூலும் கூட, இவரால் செய்யப்பெற்றிருந்தது என்று தெரியவருகிறது. அது மறைந்து போயிற்று. இப் பேராசிரியருடைய பெருமைகள் பலவற்றில் ஒன்று, நாம் பெரிதும் உட்குழைந்து போற்றத் தக்கது. அது யாதெனின், அது இவர் உலகுக்கெல்லாம் உயிரான பிள்ளை லோகாச்சாரியரையும், அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரையும் பெற்றுக் கொடுத்தருளிய பெருமையே யாகும். வடக்குத் திருவீதிப் பிள்ளை திருவடிகளே சரணம்!

* * *

(முற்றும்)

---

## —: இந்து மதத்தின் சிறப்பியல்பு :—

''இந்து மதம் எல்லாச் சமயங்களிலுமுள்ள நல்ல கொள்கைகள் அனைத்தையும் ஏற்றுக் கொள்கின்றது. எந்த ஒரு சமயத்தையும் இகழ்ந்து புறக்கணிக்காமல், எல்லாவற்றையும் ஏற்றபெற்றி உடன்பட்டுத் தழுவிக் கொள்கின்றது. மனித குலத்திற்கும், மனித இயற்கைக்கும், அனைத்துலகிற்கும் உரிய, இனிய மதமாக அது திகழ்கின்றது. வேறு எந்த மதத்தின் வளர்ச்சியினையும் தடுத்து எதிர்க்கும் இயல்பு அதன்கண் காணப்படவில்லை. ஏனைய எல்லாச் சமயங்களையும், தனது பரந்து விரிந்த பெருநோக்கினால், தன்பால் ஏற்று இணைத்துத் தழுவிக்கொள்ளும் பெருமாட்சிமை உடையதாக, இந்துமதம் இலங்குகின்றது. அவரவர்களின் மனப்போக்கிற்கும் இயல்பிற்கும் ஏற்ப, அவரவர்க்குப் பொருந்திய நலங்களை விளைவிக்கும் திறனை, இந்து மதம் உண்மையிலேயே பெற்று விளங்குகின்றது. மனித குலத்திற்கும், மனித மனப்போக்குக்கும் உரிய, எத்தகைய வேறுபாடுகளுக்கும் இணங்கி இசைந்து ஒத்துச் செல்லும் தன்மையில், இந்துமதம் இணையற்றதாகத் திகழ்கின்றது. இவ்வியல்பே அதன் வலிமைக்கும் வளர்ச்சிக்கும் காரணம் எனலாம். தத்துவஞானிகள், கவிஞர்கள், சிந்தனையாளர்கள், அமைதி விரும்புவோர், தனிமை நாடுவோர், உணர்ச்சி மிகுந்தோர், செயல்வகை விழைவோர் ஆகிய பலருக்கும், மனநிறைவு அளிக்கவல்லதாக, இந்துமதம் இனிய பற்பல சிறப்பியல்புகளைத் தன்னிடம் கொண்டுள்ளது.'' *

—சர். மானியர் வில்லியம்ஸ்,

—தமிழாக்கம்: ந. ரா. முருகவேள்.

---

* "A characteristic of Hinduism is its receptivity and all comprehensiveness It claims to be the one religion of humanity, of human nature, of the entire world. It cares not to oppose the progress of any other system. For it has no difficulty in including all other religions within its all-embracing and ever-widening fold.

And in real truth, Hinduism has something to offer which is 'suited to' all minds. Its very strength lies in its infinite adaptability to the infinite diversities of human character and human tendencies. It has its highly spiritual and abstract side suited to the metaphysical philosopher, its practical and concrete side siuted to the man of poetic feeling and imagination, its quiescent and contemplative side siuted to the man of peace and lover of seclusion."

—Sir Monier Williams

# "அமுதுண்ணக் கடையவன்"

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

**திருவாசகம் :**

அமிழ்தினும் இனிய நமது தமிழ்மொழி, பழமையும் பெருமையும் வாய்ந்தது. தமிழ் மொழியின்கண் தலைசிறந்து விளங்கும் நூல்கள் பலவற்றுள், ஒன்றாகத் திகழ்வது திருவாசகம். இங்ஙனம் மிக்கபெரும் சிறப்புடையதாகத் திகழும் திருவாசகத்தின்கண், 51 திருப்பதிகங்கள் உள்ளன. அவற்றுள் நீத்தல் விண்ணப்பம் என்பதும் ஒன்று. தம்மைக் கைவிட்டு விடாது காத்தருளுதல் வேண்டும் என்று, இறைவன்பால் விண்ணப்பம் செய்து வேண்டிக்கொள்ளும் முறையில், மணிவாசகப் பெருமான் பாடியருளிய 50 சிறந்த பாடல்களைக் கொண்ட பகுதியே, திருவாசகத்தில் நீத்தல் விண்ணப்பம் என வழங்கப்பெறும்.

**நீத்தல் விண்ணப்பம் :**

நீத்தல் விண்ணப்பம் என்பது, திருப்பெருந்துறையில் தம்மை ஆட்கொண்டருளிய இறைவன், 'நலமலி தில்லையுள் கோலம் ஆர்தரு பொதுவினில் வருக' என அருளிச் செய்து மறைந்தருளிய பின்னர், 'இங்ஙனம் எளியேனை நீத்தல் (விட்டுப் பிரிதல்) தகுமா?' என்று இறைவன்பால் முறையிட்டுக் கொண்டு, மணிவாசகப் பெருமான் திருவாசகத்தில் பாடியருளிய பகுதியாகும். நீத்தல் விண்ணப்பப் பாடல்கள் அந்தாதிமுறையில் அமைந்தவை; சிறந்த சொற்பொருட் சுவை நலங்களும், அழகிய பல உவமைத் தொடர்களும், அரிய இனிய கவிதைத் திறன்களும் செறிந்தவை; அன்புடன் ஓதுபவர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டு உருக்கி மகிழ்விக்கும் சிறப்புடையவை.

''திருவா சகநூற் பதிகங்கள்,
சிறப்பின் ஐம்பத் தொன்றாகும்;
ஒருவா தவற்றுள் ஒவ்வொன்றும்
உயர்வும் சிறப்பும் உடைத்தெனினும்,
'இறைவா எனைநீ கைவிடற்க'
என்னும் நீத்தல் விண்ணப்பம்,
நிறைவாம் கவிதை நலங்கள்பல
நிரம்பிச் சிறந்து திகழ்ந்தோங்கும்!

''அரிய நல்ல கவிநலங்கள்,
அழகார்ந் தொளிரும் சொற்பொருள்கள்,
உரிய சிறந்த பொருத்தமிகும்
உவமைத் தொடர்கள், பழமொழிகள்,
தெரியத் தெரியத் தெய்வநலம்
தேற்றும் திறன்கள் என்பவற்றால்,
பெரிதும் நீத்தல் விண்ணப்பம்
பிறங்கி ஓங்கிச் சிறந்துநிற்கும்!

—ந.ரா.மு.

**அமுதுண்ணக் கடையவன் :**

நீத்தல் விண்ணப்பத்தின் இறுதிச் செய்யுளில், இறுதியாக வருவதே ''அமுதுண்ணக் கடையவன்'' என்னும் இக்கட்டுரையின் தலைப்புத் தொடர் ஆகும். இத்தொடரின்கண், வரும் 'கடையவன்' என்னும் சொல், விளி வேற்றுமையில் அமைந்து வந்திருத்தலால், பொதுவாக அது சிவபெருமானையே பெரிதும் குறிப்பதாகக் கொள்ளுமாறு விளங்குகின்றது. ஆயினும், நல்லறிஞர்கள் சிலர், மணிவாசகர் தம்மைச் சுட்டிக் கொள்ளும் முறையிலேயே, அச்சொல் பயின்று வந்துள்ளதாகக் கொண்டு கூறுகின்றனர். அதுபற்றிய முடிவு எங்ஙனம் இருப்பினும், விவாதத்திற்குரிய அவ் ஆராய்ச்சியில் தலையிட்டுக் கொள்ளாமல், அவ் அழகிய நீத்தல் விண்ணப்பச் செய்யுளின் சொற்பொருட் சுவை நலங்களை மட்டும், இங்கு நாம் ஒரு சிறிது கண்டு இன்புறுவோம்.

''ஏசினும், யான்உன்னை ஏத்தினும்,
என்பிழைக்கே குழைந்து,
வேசறு வேனை விடுதிகண்
டாய்;செம் பவளவெற்பில்
தேசுடை யாய்,என்னை ஆளுடை
யாய், சிற் றுயிர்க்கிரங்கிக்
காய்சின ஆலமுண் டாய்,அமுது
உண்ணக் கடையவனே!''

**பொழிப்புரை :**

''பழித்துப் பேசினாலும், அல்லது உன்னைப் புகழ்ந்து கூறினாலும், யான் என்னுடைய பிழையையே நினைந்து நினைந்து, உள்ளம் குழைவுற்றுக் கரைந்து உருகி, மிகவும் வருந்துவேன்.; அத்தகைய என்னை நீ கைவிட்டு விடுவாயோ! கைவிட்டுவிடாதே! சிவந்த நிறமுடைய பவளமலையைப் போல, ஒளிவிடுகின்ற திருமேனியை உடையவனே! எளியேனையும் ஆளாகக் கொண்டருளியவனே! சிற்றுயிர்களாகிய தேவர்களின் பொருட்டு இரக்கம் கொண்டு, கொதித்து எழுந்த ஆலாலம் என்

னும் கொடிய நஞ்சை (முன்வந்து) உண்டருளி யவனே! அமிழ்தம் உண்ணுதலில் இறுதியாக இருப்பவனே!'' என்பது, இப்பாடலின் திரண்ட பொருள்.

**சொற்பொருட் சுவை நலன்கள் :**

(1) மனிதர்க்கு அறிவு அறியாமை ஆகிய இரு நிலைகள் உண்டு. அறியாமை நிலையில் இறையுணர்வு இன்றியும், அறிவு நிலையில் இறையுணர்வு மிக்கும் மனிதர்கள் இருப்பர். இறையுணர்வு இல்லாத அறியாமை நிலையில் இறைவனை ஏசுதலும், இறை யுணர்வு மிக்க அறிவு நிலையில் இறைவனை ஏத்துதலும் மனிதர்க்கு இயல்பு. ஆதலின் ''ஏசினும் யான் உன்னை ஏத்தினும்'' என் றார். உம்மைகள், எண்ணும்மை.

(2) ஏத்துதலை விட, ஏசுதலே மிக மிகுதியாகவும் முன்னதாகவும் பலகால் நிகழ்ந் தமை உணர்த்த, ஏசியதனை முதற்கண் குறிப் பிட்டார்.

(3) ஏசுதலும் ஏத்துதலும் செய்தவர் யார்? அவை செய்யப்பட்டவர் யார்? என்று நிகழத்தக்க ஐயத்தினை நீக்குதற்கு ''யான் உன்னை'' என்றார். ''யான், உன்னை'' என் னும் தொடர், ஏசுதல் ஏத்துதல் ஆகிய இரு செயற்கும் பொதுவாய், முறையே எழுவாயும் செயப்படுபொருளுமாக இடையில் நின்று, தாப்பிசைப் பொருள்கோள் அமைய வந்தது.

(4) இனி, ''வாயார உண்டபேர் வாழ்த் துவதும், நொந்தபேர் வைவதுவும் எங்கள் உலக வாய்பாடு'' எனத் தாயுமானவர் பாடு தல் போல, நலம் பெற்றபோது துதித்தலும், நலம் பெறாதபோது இகழ்தலும் இயல்பாதல் பற்றி ''ஏசினும் யான் உன்னை ஏத்தினும்'' என்றார் எனினுமாம்.

(5) 'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்பது உணராமல், 'செய் தீவினை இருக்கச் சிவனை நொந்து' ஏசிய தம் சிறுமையினை நினைந்து, 'அந்தோ அந்தோ அந்தோவே!' (திருவா. 612) எனக் கழிவிரக்கம் கொண்டு வருந்துதலின், ''என்பிழைக்கே குழைந்து வேசறுவேன்'' என்றார்.

''இவறலும் இகலும் இன்றி
யார்க்குமோர் பெற்றித் தாகி,
அவரவர் வினைகள் நாடி

அதற்படு பொருளை நல்கும்
சிவனையாம் வெறுத்தல் குற்றம்;
சிறந்தநோன் பியற்றி டாதே,
தவறுசெய் தனம்என்று எம்மை
நோவதே தக்க தாகும்''

எனவரும் கந்தபுராணச் செய்யுள் இங்கு நாம் பெரிதும் சிந்தித்து உணர்தற்கு உரியது ஆகும். வேசறுதல்-வருந்துதல். ''இரை தேர் கொக்கு ஒத்து இரவு பகல் ஏசற்றிருந்தே வேசற்றேன்'' (திருவா,380) என்பது காண்க.

(6) இறைவன் தமக்கு அருள்செய்திலன் என்று அவன்மேற் பிழை கருதி யிருந்து, பின் னர் இறைவன் அருள்செய்யாமைக்குக் கார ணம், தம் பிழையே என்று ஆய்ந்து தெளிந்த வராதலின் ''என்பிழைக்கே குழைந்து வேசறு வேன்'' என்றார் எனினுமாம்.

''ஆயாக் கொடியேனுக் கன்புடையாய், நீஅருளிங்கு
ஈயாக் குறையே இலைகண்டாய்!—மாயாற்கும்
விள்ளாத் திருவடிக்கே விண்ணப்பம் யான்செய்து
கொள்ளாக் குறையே குறை''

எனவரும் இராமலிங்க அடிகளின் திருவருட்பா, இங்கு நாம் இயைபுபற்றி எண்ணி இன்புறுதற்கு உரியது.*

(7) ஏசியதற்கு வேசறலாம், ஏத்து தற்கு வேசறுதல் எற்றுக்கு? எனின், இறைவன் எல்லையற்ற பொருள்சேர் புகழும், சிறப்பும் உடையவன். இறைவனின் எல்லையற்ற பெரு மைகளை உணர்தலும் ஓதுதலும் நம்மனோ ரால் இயலாத செயல். அங்ஙனமாகவும், 'இன் னன் என்றுரைத்தல் எமக்கு எவன் எளிது?' என்று எண்ணி அமையாமல், 'உய்த்தல் அறிந் தும் புனல் பாய்பவரே போல்', இத்தகைய தென்று இறைவனின் புகழை அளவிட்டுக்கூறத் துணிந்த தமது அறியாமை முனைப்பின் திறம் நினைந்து ''ஏத்தினும் என்பிழைக்கே குழைந்து வேசறுவேன்'' என்றார்.

(8) இறைவனை வியப்பிக்கவும் மகிழ் விக்கவும் விழைந்து அவனது எல்லையற்ற புகழைச் சொல்லத் தலைப்பட்டு, அதனில் சிறி தேனும் செவ்விதின் உணராது, ஈங்கும் ஊங்கு மாகச் சில பிதற்றி, 'இவன் அறிந்தவாறு இதுவே போலும்' எனக் கருதி, இறைவன் எள்ளல்நகை கொள்ளும்படி செய்வித்துத் தாம் தமது அறிவின்மையைப் புலப்படுத்திக் கொண் டதாகக் கருதி, ''ஏத்தினும் என் பிழைக்கே குழைந்து வேசறுவேன்'' என்றார்.

''நின்புகழ் விரித்தனர் கிளக்குங்கால் அவைநினக்கு
இறும்பூது அன்மை, நற்கு அறிந்தேம் ஆயினும்
நருத்லும் தகுதி; ஈங்கு ஊங்குநிற் கிளப்ப''

எனவரும் பரிபாடல் வரிகள், இங்கு நாம் நினைவு கொள்ளத் தக்கவையாகும்.

(9) ''என் பிழைக்கே'' என்புழி ஏகாரம் பிரிநிலை ;இதற்கு முன்பெல்லாம் இறைவனின் பிழையாகத் தாம் பிறழ உணர்ந்து கருதி வந்ததனை விலக்குதலின். தம் பிழையைப் பிறர்மேல் ஏற்றிவிட முயலுதல், கீழோர்

* ''God's infinite mercy is open to every one, at all times, in all places, under all conditions, unfailing, unswerving. Upon us depends how we use it. Blame neither man, nor god, nor anyone in the world. When you find yourselves suffering, **blame your selves, and try to do it better...**''

**—Swami Vivekanandar**
Complete Works, Vol. II, P. 225

செயல். அங்ஙனம் இன்றித் தம் பிழையைப் பிழை என உணர்ந்து உடம்பட்டுக் கொண்டு அதற்காக மனம் வருந்தித் திருந்துதல், பெரியோர் செயல். ஆதலின் ''என் பிழைக்கே குழைந்து வேசறுவேன்'' என்றார்.

(10) தம் பிழையுணர்ந்தவழிக் குழைதல் அல்லது வேசறுதல் என்னும் இரண்டனுள் ஒன்றே அமையாதோ? இரண்டினையும் கூறுதல் எற்றுக்கு? எனின்-'எற்றென்று இரங்குவ செய்யற்க; செய்வானேல் மற்றன்ன செய்யாமை நன்று' என்றபடி, பிழையைப் பிழை என்று உணர்ந்தால், பிழை செய்தமைக்கு வருந்துதல் வேண்டும்; வருந்துதலோடு மட்டும் அமைந்துவிடாமல் அதற்குக் கழுவாய் தேடுவதுடன், இனி அத்தகைய பிழை செய்யாமல் இருக்க உறுதிபூண்டு முனைந்து முயலுதலும் வேண்டும். ஆதலின் அவ்விருவகைத் திறனும் உணர்த்தக் ''குழைந்து, வேசறுவேன்'' என்றார். குழைதல் காரணம், வேசறுதல் காரியம். ஆதலின் 'குழைவேன், வேசறுவேன்' என்னாமல் ''குழைந்து, வேசறுவேன்'' என்றார். குழைதல்-நெகிழ்தல், மனம் கசிந்து உருகுதல். மணிவாசகர் 'குழைத்த பத்து' பாடியருளியவர் என்பதும், இங்கு நினைக்கத் தகுவது.

(11) மணிவாசகரை இறைவன் ''செந்தழல் புரை திருமேனியும் காட்டித், திருப்பெருந்துறையுறை கோயிலும் காட்டி, அந்தணன் ஆவதும் காட்டி வந்து ஆண்டான்'' ஆதலின், இறைவனது வண்ணமும் வடிவும் ஒளியும் நினைந்து வியந்து ''செம்பவள வெற்பில் தேசு உடையாய்'' எனப் புகழ்ந்து போற்றினார். ''முத்து-மாமணி-மாணிக்க-வயிரத்த-பவளத்தின் முழுச் சோதி'' (திருவா, 432) என்றது காண்க. ''வெற்பில்'' என்புழி, ஐந்தன் உருபு உறழ் பொருளில் வந்தது. பவளம், நெய்தல் நிலப்பொருள் ஆதலின், 'பவள வெற்பு' என்றது அதிசய அணி.

(12) என்னை(யும்) ஆளுடையாய்' என்பதில், இழிவு சிறப்பு உம்மை தொக்கது. ''சிவன் எம்பிரான் என்னை ஆண்டுகொண்டான்'' என்றும், ''இந்திரனும் மாலயனும் ஏனோரும் வானோரும் அந்தரமே நிற்கச் சிவன் அவனி வந்தருளி எந்தரமும் ஆட்கொண்டான்'' என்றும், ''யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடையான், யாவர்க்கும் கீழாம் அடியேனை யாவரும் பெற்றறியா இன்பத்துள் வைத்தான்'' என்றும், மணிவாசகப்பெருமான் ஆங்காங்கே அருளிச் செய்திருத்தல் காணலாம்.

(13) இங்ஙனம் தம்மை ஆட்கொண்டதற்குத் தம்முடைய தகுதி எதுவுமின்றி, இறைவனின் கருணையே காரணம் என்பார், அக்கருணைத் திறனை விதந்து வியந்து, ''சிற்றுயிர்க்கு இரங்கிக் காய்சின ஆலம் உண்டாய்'' என்று புகழ்ந்தார்.

(14) சிறிய அறிவும் சிறிய தொழிலுமே உடையன ஆதலின் உயிர்களைச் ''சிற்றுயிர்'' என்றார். அறம் பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டுண்டு பிறந்தும் இறந்தும் உழன்று வருதல் ஆகிய சிறுமை பற்றி உயிர்களைச் ''சிற்றுயிர்கள்'' என்றார் எனினுமாம்.

(15) ''சிற்றுயிர்'' என்றது, ஈண்டுத் தேவர்களைக் குறித்து நின்றது. மணிவாசகப் பெருமான், தேவர்களின் சிறுமையினைப் பல இடங்களிலும், ஆங்காங்கே குறிப்பிட்டருள்வார். ''சாவ முன்னாள், தக்கன் வேள்வித் தகர்தின்று...ஆவ எந்தாய் என்று அவிதா இடும் நம்மவர் அவரே, தேவர் என்றே இறுமாந்து என்ன பாவம் திரிதர்வரே'' (திருவா, 8) என்றும்; ''மிகுகுறை; வானவர்'' (மிகு, குறைவு ஆனவர்-திருவா, 590) என்றும்;''பொய் வானவர்'' (பிறர்கூறும் பெருமை அவர்க்கு இன்மையிற் ''பொய்வானவர்'' என்றார், கோவை-67) என்றும், பிறவாறும் வருதல் காண்க.

(16) 'கோலாலமாகிக் குரைகடல்வாய் அன்றெழுந்த ஆலாலம்' ஆதலின், அதனது கொடுமை மிக்க இயல்பினைக் குறிக்கக் 'காய்சின ஆலம்' என்றார்.

(17) சிவபிரான் ஆலம் உண்டிலனேல், குமரகுருபரர் பாடுவது போலத் தேவமாதர்களின் செங்கைகளும் கொங்கைகளும் சிவக்கும்படி (மார்பில் அடித்துக் கொண்டு புலம்புமாறு), அன்று அயன்மால் உள்ளிட்ட மேலாய தேவர் எல்லாம்,

''மால்எங்கே? வேதன்உயர் வாழ்வுஎங்கே?
இந்திரன்செங்
கோல்எங்கே? வானோர் குடிஎங்கே?—கோலஞ்சேர்
அண்டம் எங்கே? அவ்வவ் அரும்பொருள்எங்கே?
உனது
கண்டம்அங்கே நீலம்உறாக் கால்''

என்று இராமலிங்கர் பாடுதல் போல, ஒருங்கே வீடி அழிந்தொழிந்திருப்பார் ஆதலின், ''இரங்கி'' என்றார்

(18) ''நம்பா நினக்கு ஓலம்! முறையோ எனக் கால நஞ்சுண்டு பித்துண்டு, நாம் தேவர் என்பார்தம் பாவையர்க்கு அன்று காதோலை பாலித்த தயவாளர்'' என்று குமரகுருபரர் பாடுதற்கு ஏற்ப, 'இரங்கி' என்றார் எனினுமாம்.

(19) ஆலம் உண்டது, தம் வீரமும் பெருமையும் விளக்குதற்கு அன்றிச் சிற்றுயிர்களைக் காத்தருளுதற்கு விரும்பிய பரிவு காரணமாகவே யாதலின், ''இரங்கி'' என்றார். இறைவன் தனது எல்லையற்ற பேரிரக்கத்தால் புரிந்தருளிய செயல் ஆதல் பற்றியே, இறைவன் நஞ்சுண்ட நயத்தக்க நனிநாகரிகச் செயல், அவனது எண்வகை வீரச் செயல்கள் போன்றதொரு வீரச் செயலாகக் கருதப் பெறாமல், கருணை (இரக்க)ச் செயலாகவே நூல்களாலும் பெரியோர்களாலும் போற்றப்படுவதாயிற்று.

(20) திருமால் முதலிய தேவர்கள் அனைவரும் திருப்பாற்கடலில் நஞ்சு தோன்றியபோது பிந்தினர்; ஆனால் அமுதம் தோன்றியபோது அதை உண்ணுதற்குத் தம்முள் ஒரு

வரை ஒருவர் இகலி முந்தினர். ஆனால் இறைவனோ தன் பெருங் கருணைத் திறனால் நஞ்சு உண்ண முந்தினன்; அமுதுண்ணப் பிந்தினன் என்பார், இறைவனது பேரருளையும் பெருந்தகைமையையும் வியந்து ''அமுதுண்ணக் கடையவனே'' என விளித்துப் புகழ்ந்து மகிழ்ந்தார்.

(21) இறைவன், தானே எவருக்கும் இறவாப்பேறு அளிக்கும் அமிழ்தமாகத் திகழ்தலின் தேவர்களைப்போல அமுதம் உண்ண வேண்டிற்றிலன் என்பது கருத்து. ''விண்ணோர் அமுதுண்டும் சாவ, ஒருவரும் உண்ணாத நஞ்சுண்டு இருந்து அருள் செய்குவாய்'' என முத்தமிழ்ப் புலமை வித்தகராகிய இளங்கோவடிகள் அருளிச் செய்திருத்தல், இங்கு அறிந்து இன்புறற்பாலது.

(22) அமுதுண்ணக் கடையவன் என்றது, தேவர் யாவரும் உண்ட பிறகு இறைவன் கடைசியில் அமுதுண்டான் என்னும் கருத்தில் வந்ததன்று. ஒரு செயலை யான் அது செய்திலேன், செய்யேன் எனக் கூறுவோர், 'அதனைச் செய்தற்கு நான்தான் கடைசி ஆளாக இருப்பேன்' (I will be the last person to do it) என்று கூறுதல் போன்ற ஒருவகைக் குறிப்பிற் போந்தது எனலாம். இஃது ஒரு சார்பு எடுத்துக் காட்டேயன்றி, தமிழ் வழக்கிற்குப் பொருள் காண ஆங்கில வழக்கினை மேற்கொள்ளலாம் போலும் எனச் சிலர் பிறழ உணர்ந்து கொள்ளுதற்கு அன்று. ''மலத்திலக்கணம் வடமொழி வழக்குப் பற்றி ஓதுவார் 'ஞான திரோதகமாய்' எனவும், அதனைத் தமிழ் மொழியின் உரைத்துக் காட்டுவார் 'மறைத்துக் கொடு நிற்றலான்' எனவும் கூறினார்'' எனவரும் சிவஞான போதப் பேருரை போல்வன, இங்குச் சிந்திக்கத் தகும்.

(23) இறைவன் ''அமுதுண்ணக் கடமைப் பட்டவன்'' எனச் சிலர் பொருள் கொள்கின்றனர். அப்பொருள் படவேண்டுமாயின் 'கடமையனே' என்றோ, அல்லது 'கடவியனே' என்றோதான், சொல்லமைப்பு இருந்திருத்தல் வேண்டும். மேலும் 'கடமை' என்பது 'கடன்மை' என்பதன் மரூஉ. அதற்குக் கடன்படுந்தன்மை (Due, Duty) என்பது பொருள். இறைவனைக் கடன்பட்டவனாகக் கருதுதல் பொருந்தாது.

(24) தேசுடையாய்! ஆளுடையாய்! ஆலமுண்டாய்! என்பன போல 'அமுது உண்ணக் கடையவனே' என்பதும் ஒரு விளி. அது 'விடுதி கண்டாய்' என்பதனைக் கொண்டு முடியும். ஆதலின் இங்குக் 'கடையவன்' என்பது சிவபெருமானையே குறிக்கும். எல்லாவற்றிற்கும் ஆதியும் அந்தமும் ஆக விளங்கும் இறைவனைக் கடையவன் என்றலிற் பிழை ஒன்றும் இல்லை. இதனை மணிவாசகர்க்கு ஏற்றுவதாயின், சொற்கிடந்தவாறே பொருள் கொள்ளாது 'கடையவன் அமுதுண்ண, ஆலமுண்டாய்; எனை விடுதி கண்டாய்' என்று தேவையின்றிப் பிரித்துக் கூட்டிப் பொருள் கொள்ளல் (விபாக யோகம் புரிதல்) வேண்டும். மேலும் மணிவாசகப் பெருமான், தாம் அமுதம் உண்டதாக எங்கும் பாடிற்றிலர் என்பதும், கருதுதற்கு உரியது. மணிவாசகர் தம்மைக் கடையவன் என்று குறிப்பிட்டுக் கொள்ளுதலில் யாதொரு வியப்பும் சிறப்பும் இல்லை. அவர் சிவபிரானைக் கடையவன் என்றதே, சேர்ந்தறியாக் கையான்-குணமிலி - மானிடன் -தேய்மதியன் என்றாற் போன்ற சுவைநலம் உடையது.

(25) அந்தாதி முறையில் அமைந்த இந்த நீத்தல் விண்ணப்பப் பகுதி, மணிவாசகப் பெருமானால் 'கடையவனே' என்பதனை முதலாகக் கொண்டு தொடங்கப் பெற்றதனால், இவ் இறுதிப் பாடலின் இறுதியிலும், 'கடையவனே' என்னும் சொல் அமைந்து மண்டலித்து நிறைவு பெறுவதாயிற்று. இதன்கண் ''என் பிழைக்கே குழைந்து வேசறுவேன்'' என்றது பிரபஞ்ச வைராக்கியம்.

---

* ''The words 'அமுதுண்ணக்கடையவனே' of the last stanza are problematical and have baffled all the commentators so far. Therefore, the clear, creditable and convincing interpretation of these words here, bespeaks the blessedness of the learned author. And in addition to his other explanations, the author has given a master stroke of an English idiom or common usage namely: 'I will be the last person to do it' to prove and strengthen his point of view. It has certainly enhanced his reputation as a masterly critic and a mighty commentator.''

—'Thiruvachakamani'

K. M. Balasubramanyam, B.A., B.L.

---

## கந்தபுராணத் தத்துவ நுட்பம்

சூரபன்மன் ஆணவம்; சிங்கமுகன் தொல்மாயை;
தாரகன் கன்மமலம் தான்என்க! —போரினில்வெல்
நம்முருகன் தான், நல்ல ஞானகுரு; மற்றவன்வேல்
செம்மையுறு ஞானம்எனத் தேர்!

—ந. ரா. முருகவேள்

# இராமலிங்கரின் இலட்சியம்

*'சிலம்புச் செல்வர்'*
திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள்
*(மேலவைத் தலைவர்)*

அருட்பிரகாச வள்ளலார், ''ஆன்மநேய ஒருமைப் பாட்டுரிமை'' என்ற புதிய கோஷத்தை எழுப்பினார். அந்தக் கோஷத்தின் அடிப்படையில் உயிர்களிடையே சகோதர உணர்வை வளர்க்க முயன்றார். அடிகளாரின் குறிக்கோள் பலவாயினும், அவற்றுள் தலையாயது-மற்ற எல்லாக் குறிக்கோள்களையும் தன்னுள்ளே கொண்டு விளங்குவது ''ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை'' என்பதாகும். ''சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லட்சியம் ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமை'' என்று அடிகளாரே கூறுகின்றார்.

சன்மார்க்க நெறியிற் சாராதாரைத் 'துன் மார்க்கர்'' என்றே கூறுவார் தாயுமானவர். இதனைச் 'சன்மார்க்க நெறியிலாத் துன் மார்க்கனேனையும் தண்ணருள் கொடுத்தாள் வையோ!'' என்ற அவரது வாக்காலேயே அறியலாம். இங்குத் தாயுமானவர் வலியுறுத்துவது சித்தாந்த-வேதாந்தங்கள் கலந்த சமய சன் மார்க்கமேயாம். வள்ளலார், சமயங் கடந்த 'சமரச சுத்த சன்மார்க்கம்' என்ற புது நெறியையே போதித்தார்.

**ஆன்மநேய ஒருமை :**

உயிர்கள் பலவகையான தேகங்களைப் பெற்று வாழ்கின்றன. அவற்றை, மனிதர்-மிருகம்-பறவை-ஊர்வன-நீர்வாழ்வன-தாவரம் எனப் பாகுபடுத்தியுள்ளனர் அறிஞர் பெருமக்கள். அவை அனைத்தும் பரமான்மாவால் படைக்கப்பட்ட ஜீவான்மாக்கள் என்பது சமயக் கொள்கை. அதனால், அந்த உயிர்களிடையே ஆன்மநேய ஒருமைப்பாடு காண்பதனைத் தம் கடமையாகக் கொண்டார் வள்ளலார். ''உலகம், ஆதி பகவானாகிய இறைவனை முதலாக உடைத்து'' என்றார் திருவள்ளுவர். அந்த முதற் பொருளைத் தலைமையாகக் கொண்டு ஆன்மநேய ஒருமைப் பாட்டுரிமைச் சமுதாயத்தைக் காண விரும்பினார் வள்ளலார். இது பற்றித் தாம் இயற்றிய 'சீவகாருண்ய ஒழுக்கம்' என்ற நூலில், அடிகளார் தரும் விளக்கம் வருமாறு:

''சீவர்கள் எல்லாம் ஒரு தன்மையாகிய கடவுள் இயற்கை உண்மை ஏக தேசங்களாகிக் கடவுள் அருட்சக்தியால் பூதகாரிய தேகங்களில் வருவிக்கப்பட்ட படியால் இச் சீவர்களெல்லாம் ஒருரிமை இனத்தவர்களேயாகும்.

''சீவர்கள் எல்லாம் ஒரு தன்மையாகிய இயற்கை உண்மை ஏகதேசங்களாய்ச் சர்வ சக்தியுடைய கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டபடியால், ஒருரிமை உள்ள சகோதரர்களேயாவர்''.

மேலே எடுத்துக்காட்டிய இரண்டு பகுதிகளும் ஒரே கருத்தை வலியுறுத்தியுள்ளனவாக இருப்பினும், முன்னதில் உயிர்கள் அனைத்தையும் ஒரே இனமாகக் குறிப்பிடுகின்றார். பின்னதில், அந்த இன உரிமை பற்றிச் சகோதர ஒருமைப்பாடு இயற்கையாக இருப்பதை எடுத்துக் காட்டுகின்றார்.

**வாயே பறையானது :**

'உயிர்கள் அனைத்திடத்தும் அன்பு செலுத்த வேண்டும்' என்பது சீவகாருண்யம். அடிகளார் ,அதனினும் ஒருபடி மேலே சென்று தேகபேதங்களை மறந்தவராகி, உயிர்களையெல்லாம் ஒரே இனத்தைச் சார்ந்தவையாகக் கூறுகின்றார். அது, ஆன்மநேய இனமாகும். அந்த அடிப்படையில் கருணையையே மதமாகக்கொண்ட ஒரு புத்தம் புதிய உலகைஅமைக்க முயன்றார் வள்ளலார். அதனைத் தம் கண்ணாரக் கண்டு மகிழும் பேற்றினைத் தருமாறும் கடவுளைப் பிரார்த்தித்தார்.

''கள்ள வாதனையைக் களைந்தருள் நெறியைக்
காதலித்து ஒருமையில் கலந்தே

உள்ளவாறு இந்த உலகெலாம் களிப்புற்று
ஓங்குதல் என்று வந்து உறுமோ?''

''வள்ளலே அதுகண்டு அடியேன் உள்ளம்
மகிழ்தல்என் றோஎனத் துயர்ந்தேன்

ஒள்ளியோய் நினது திருவுளம் அறிந்தது
உரைப்பதுஎன் அடிக்கடி உனக்கே''

''உலகத் திரளெலாம் மருவுறக் கலந்து
வாழ்வதற்கு வாய்த்த தருணம் இதுஎன்றே

வாயே பறையாய் அறைகின்றேன்''

என்னும் வரிகளில், தமது இலட்சியச் சித்தி திரத்தைக் காட்சிப்படுத்துகின்றார் வள்ளற் பெருமான்.

அடிகளாரின் ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை, பேதங்களைக் கடந்த அல்லது பேதங்கள் அற்ற அபேத சித்தாந்தமாகும். ஆம்; கடவுள் வேற்றுமை, வருண வேற்றுமை, சமய மத வேற்றுமை, சாதி வேற்றுமை ஆகியவற்றையெல்லாம் அழித்தும், மொழி நாடு நிற வேற்றுமைகளையெல்லாம் கடந்தும் வளர்வது ஆன்மநேய ஒருமைப்பாடு.

தெய்வம் பலப்பல என்னும் மூட நம்பிக்கைக்கு எதிரான சித்தாந்தம் ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை. அதனால்,

''ஆறு கோடியாம் சமயங்கள்
அகத்தினும் அவைமேல்

வீறு சேர்ந்தசித் தாந்தவே
தாந்தாநா தாந்தம்

தேறும் மற்றைய அந்தத்தும்
சிவம்ஒன்றே அன்றி

வேறு கண்டிரேல்
பெரியர்காள் விளம்பீர்!''

எனப் பாருலகனைத்துக்கும் பறையறைந்து பாடுகின்றார் வள்ளலார். தெய்வம் ஒன்றுதான் உண்டு என்று உண்மையை உணராத மாந்தர்களைப் பார்த்து, ''ஒன்றெனக் காணும் உணர்ச்சி என்றுறுமோ?'' என்றும், ''ஒன்றே சிவம் என உணர்ந்து இவ்வுலகெலாம்; நன்றே ஒருமையுற்று வாழி!'' என்றும் பாடினார். இங்கு அடிகள் சிவம் என்றது உயிர்க்குலம் அனைத்துக்கும் பதியான பரம்பொருளேயாகும்.

**அன்பே-அகிலமே கடவுள் :**

வள்ளலார் சொல்லும் கடவுள், நாம ரூப பேதங்களுக்கு அப்பாற்பட்டது. இதனை அடிகளாரே கூறக் கேட்போம். ''உண்மையில் 'கடவுள்' எனப்படுவது அகிலமாம்-அன்பாம். அஃது, உலகிலுள்ள எல்லாவற்றிலும் பரிபூரண சமாதானத்தையும் சமரச நிலையையும் ஏற்படுத்தி அவைகளை நிலை நிறுத்துகின்றது''. முற்காலச் சான்றோர், 'அன்பே கடவுள்' என்றனர். அத்துடன் அகிலத்தையும் சேர்த்து 'அன்பாம் அகிலமாம் கடவுள்' என்றார், உலக ஒருமைப்பாட்டினைக் காண விழைந்த வள்ளலார்.

உயிரினத்திடையே-குறிப்பாக, மனிதர்களிடையே ஒருமைப்பாட்டினை வளர்க்கத் தடையாக இருக்கும் எதனையும் தெய்வ சக்தியாகவோ, தெய்வ சம்மதமாகவோ ஏற்க மறுக்கிறார் வள்ளலார்.

இராமலிங்கர் உலகிலுள்ள எல்லா மதங்களையுமே வெறுத்தார்; அம்மதங்களைச் சார்ந்த மக்கள் அனைவரிடமும் ஒருமைப்பாடு காண விழைந்தார், இஃது அவருடைய பொதுக் கொள்கை. ஆயினும், தமது கொள்கைக்கு ஆதரவு தேடும் முயற்சியை முதலில் இந்தியாவில் தோன்றி வளர்ந்த இந்து, சமண, பௌத்த மதங்களிடையே மட்டும் மேற்கொண்டார். இஸ்லாம் கிறிஸ்துவ சமயங்களைப் பற்றி இவர் வெளிப்படையாக எதுவும் சொல்லவில்லை. அதனால் இஸ்லாம் கிறிஸ்துவ மதங்கள் அல்லாத இந்திய மதங்களை மட்டும் ஒன்றுபடுத்த விரும்பினார் என்று கருதுவதற்கில்லை. தமது கொள்கைக்கு இஸ்லாம்-கிறிஸ்து மதத்தை ஈர்க்க விருப்பமிருப்பினும், அதனைக் காலத்தின் கையில்-கடவுள் கையில் விட்டுவிட்டார் என்றே சொல்ல வேண்டும். ஆம்; கருத்துப் போர்க்கான களத்தைப் பெரிதாக்கிக் கொள்ள விரும்பாத இராசதந்திரி வள்ளலார்.

**ஆதிசங்கரர் கண்ட ஒருமை :**

ஒரு குழுவினருக்கு எதிராக இன்னொரு குழுவினர் ஒன்றுபடுவது ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமையாகாது. அதனைத் தற்காப் புணர்ச்சி என்றே சொல்ல வேண்டும். அடிகளார் ஒருமைப்பாட்டினை வற்புறுத்தியது குறிப்பிட்ட ஒரு குழுவினருக்கு மட்டும் தற்காப்புத் தேடவன்று. 'ஒரே உலகம்' காண்பதற்கேயாம். ஆதிசங்கரர், இந்து சமயத்தின் உட் பிரிவுகளாக இருந்த அறுவகைச் சமயங்களிடையே ஒருமைப்பாடு காண முயன்றார்.

ஆதி சங்கரரின் சமய ஒருமைப்பாட்டு முயற்சி, அவருடைய வெறுப்புக்கு இரையான சமண, பௌத்த மதங்களுக்கு எதிராக-அந்த மதங்களின் தாக்குதலிலிருந்து வேத மதத்திற்குத் தற்காப்புத்தேட-இந்துக்களை எல்லாம் ஒன்றுபடுத்த எடுத்துக் கொண்ட முயற்சியேயாகும். வள்ளலாரின் குறிக்கோள் அதுவன்று. அவர், மதங்களே இல்லாத மனித சமுதாய ஒருமைப்பாட்டைக் காணவே பாடுபட்டார். ஒன்று பட்ட அந்த மனித சமுதாயமும், ஒரே தெய்வ நம்பிக்கை கொண்டு பிளவு-பிரிவினை ஆகிய தீய சக்திகளிடமிருந்து விடுபட்டு, உயிர்கள் அனைத்திடமும் அன்பு செலுத்துவதாக இருக்க வேண்டும் என்றுகனவு கண்டார். அதனாற்றான், 'இந்து நேய ஒருமைப்பாட்டுரிமை' என்று சொல்லாமல், 'ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை' என்று கோஷித்தார். கோஷம் புதியதாயினும், அந்தக் கோஷத்தினுள்ளே அடங்கியிருக்கும் குறிக்கோள் உலகத்திற்குப் புதிதன்று.

**முன்னோர் கண்ட தோல்வி :**

உலகில், மதாசாரியர்களாக - தீர்க்கதரிசிகளாகக் கருதப்படுவோர் அனைவருமே உலகம் முழுவதையும் ஒரே நெறியின் கீழ்க் கொண்டு வர முயன்றவரே யாவர். ஆனால், காலம் அவர்களுள் ஒவ்வொருவரையும் தனிமைப்படுத்திப் பல மதங்களை ஏற்படுத்திவிட்டது. அதனால், ஒவ்வொரு நெறியும் அல்லது ஒவ்வொரு இயக்கமும், காலத்தில் தனித்தனி மதங்களாகி, அவற்றைத் தோற்றுவித்தவர்களின் ஒரே உலகக் கனவு பலிக்காமல் செய்துவிட்டது.

மதவாதிகளும் ஞானிகளுமேயன்றி, சக்கரவர்த்திகளும் உலகனைத்தையும் ஒரு குடைக் கீழ் கொண்டுவர முயன்று, அதிலே அவர்கள் தோல்வியடைந்தனர். அதன் விளைவாக, சாம்ராஜ்யங்கள் பலவாயின. உலக சாம்ராஜ்யம் காணச் சக்கரவர்த்திகளுள் சிலர் முயன்றதற்குத் தலைமைப் பதவியில் அவர்கள் கொண்டிருந்த ஆசையும் ஒரு காரணமாக இருக்கலாம். ஆயினும், ஒரே உலகப் பொதுமை உணர்வும் அவர்களுக்கு இருந்ததென்பதை நாம் மறப்பதற்கில்லை.

ஞானியர்களும் அரசர்களும் அடைந்த தோல்விகளுக்குக் காரணம், அவர்களது 'ஒரே உலக' முயற்சியானது, ஆன்மநேய ஒருமைப்பாட்டுணர்வை அடிப்படையாகக் கொள்ளாததுதான். ஒரே உலக உணர்வுடன் தோன்றிய மதங்கள் தங்களுக்குள்ளே போட்டியிட்டு, போராடத் தொடங்கி, தத்தம் உயிர்க்கொள்கையான உலக ஒருமைப்பாட்டிற்கே கேடிழைத்துவிட்டன. அந்தப் புனிதமான குறிக்கோள் என்றென்றுமே நிறைவேறாதபடி மதங்கள் தடைகளாகிவிட்டன. அதனாற்றான், மதங்களை இணைத்தாலன்றி, ஆன்மநேய ஒருமைப்பாடு தோன்றுவதோ, உலகிலுள்ள மனிதர் அனைவரும் ஒருமையாய் ஒன்றுபடுவதோ சாத்தியமில்லை என்றார், சமரச சுத்த சன்மார்க்க சங்கத் தலைவரான வள்ளலார்.

மதங்கள் பலவாயிருப்பினும், குறிக்கோளில் ஒருமைப்பாடு இருப்பின், வள்ளலார் மதங்களை வெறுத்திருக்கமாட்டார். ஆனால், அவர் வாழ்ந்த காலத்தில், ''போதித்த சமயமோ ஒன்று சொன்னபடி ஒன்று பேசாது'', என்று தாயுமானவர் எடுத்துக்காட்டிய இழிதன்மையே நிலைத்திருந்தது. அதனால், மதங்களை இணைத்து, மனித குலத்திடையே ஒற்றுமை காண விழைந்தார்.

## எம்மதமும் சம்மதம் :

''எம்மத நிலையும் நின்னருள் நிலையில்
இலங்குதல் அறிந்தனன்

எல்லாஞ் சம்மத மாக்கிக் கொள்கின்றேன்''

என்ற அருட்பா வரிகளில், எம்மதமும் சம்மதம் என்ற கொள்கையினை வெளிப்படுத்துகின்றார். இங்கு 'எம்மதமும்' என்று அடிகளார் குறிப்பது, மத ஸ்தாபனங்களையன்று; மத தத்துவங்களையே. இந்தக் குறிக்கோளுக்கிணங்கச் சித்தாந்தம், வேதாந்தம், போதாந்தம் ஆகிய ஆறு அந்தங்களையும் ஒன்றுபடுத்தி ''ஷடாந்தம்'' என்றொரு சமரச சமஷ்டித் தத்துவத்தை உருவாக்கினார்.

ஆதிசங்கரர், இந்து மதத்தின் உட்பிரிவுகளாக ஆக்னேயம், ஐந்திரம், காணபத்தியம், சைவம், வைணவம், சாக்தம் ஆகிய ஆறு சமயங்களையும் ஒன்றுபடுத்தினார். அது காரணமாக, 'ஷண்மத ஸ்தாபகர்' என்ற சிறப்புப் பெயர் பெற்றார். அவர் காலத்தில் இந்து மதமொன்றே இந்தியா முழுவதிலும் செல்வாக்குப் பெற்றிருந்ததால், அதன் உட்பிரிவுகளை ஒன்றுபடுத்துவதையே தேசிய ஒருமைப்பாட்டுப் பணியாக அவர் கருதியிருக்கக்கூடும்.

அவருக்குப் பல நூற்றாண்டுகளுக்குப்பின் வாழ்ந்த வள்ளலார் காலத்தில் 'இஸ்லாம்-கிறிஸ்துவ மதங்கள் இந்து மதத்தின் செல்வாக்கை ஊடுருவி, அந்த மதங்களைச் சார்ந்தவர்களால் நடத்தப்பட்ட அரசாங்கங்களின் துணையால், இந்தியாவில் நிலைத்துவிட்டன. ஆகவே, இந்து மதத்திற்குப் புறச் சமயங்களான சமண-பௌத்த மதங்களையேயன்றி, இந்தியாவிற்குப் புறச் சமயங்களான இஸ்லாம்-கிறிஸ்தவ மதங்களையும் ஒன்றுபடுத்தி, உலக ஒருமைப்பாடு காண விழைந்தார் வள்ளலார்.

## இஸ்லாம்-கிறிஸ்தவம் :

அடிகள், தமது ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமைக் கொள்கையை முதலில் இந்திய மதங்களிடையே மட்டும் பரப்ப முயன்றதற்கு முக்கிய காரணம், அந்தக் கொள்கைக்கு மிகவும் நெருக்கமாக இருக்கும் நாடு இந்தியாதான் என்று அவர் நம்பியதேயாகும். இதனைச் சுவாமி விவேகானந்தரும் உறுதிப்படுத்துகின்றார்.

''எல்லாத் தேசங்களிலும் 'எல்லா உயிர்களையும் தன்னுயிர் போல்நினை' என்ற சிறந்த உண்மை சொல்லப்பட்டிருக்கிறது. நாம் மனித உயிர்களுக்கும் மற்ற உயிர்களுக்கும் வித்தியாசம் காட்டுவதில்லை''

''ஏன் மற்ற உயிர்களைத் தம் உயிர் போல் நினைத்து அன்பு செய்யவேண்டும்? இதற்குக் காரணம் மற்ற சாஸ்திரங்களில் கொடுக்கப்படவில்லை. கடவுள் அருபமாய் எல்லா உயிர்களிலும் இருக்கிறார். அதனால், எல்லா உயிர்களும் சமம்''

—இந்தியப் பிரசங்கங்கள், பக்.32.

ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமைச் சித்தாந்தம், 'தெய்வம் ஒன்று' என வற்புறுத்துவதோடு, 'அத்தெய்வம் எல்லா உயிர்களிலும் இருக்கின்றது' என்றும் சொல்கின்றது. மனிதர் மிருகம் பறவை ஊர்வன நீர்வாழ்வன தாவரம் என்பனவெல்லாம் உடலைக் காரணமாகக் கொண்ட வேற்றுமைகளே. அந்த வேற்றுமைகளுக்கும், ஆன்மாவுக்கும் சம்பந்தமில்லை என்பது அடிகளின் கொள்கை.

## புல்லாகி :

உயிர்கள் அனைத்திலும் கடவுள் வியாபித்திருக்கிறார் என்ற உண்மையை உணராதவர், தம்மிடத்திலுள்ள கடவுள் தன்மையையும் உணரத் திறனற்றவராவர். இதனை,

''சீவகாருண்யம் ஆன்மாக்களின் இயற்கை விளக்க மில்லாத
சீவர்களுக்குக் கடவுள் விளக்கம் அகத்திலும் புறத்திலும்
வெளிப்படவே மாட்டாது''

—சீவகாருண்ய ஒழுக்கம்-3

என்ற அடிகளார் வாக்காலும் அறிகிறோம்.

''பெருகியபேர் அருளுடையார் அம்பலத்தே நடிக்கும்
பெருந்தகைஎன் கணவர்திருப் பேர்புகல்என் கின்றாய்
அருகர்புத்தர் ஆதிஎன்பேன் அயன்என்பேன் நாரா
யணன்என்பேன் அரன்என்பேன் ஆதிசிவன் என்பேன்
பருகு சதா சிவம்என்பேன் சுத்தசிவம் என்பேன்
பரமம் என்பேன் பிரமம் என்பேன் பரப்பிரமம் என்பேன்
துருவுசுத்தப் பிரமம் என்பேன் துரியநிறைவென் பேன்
சுத்தசிவம் என்பன் இவை சித்துவிளையாட்டே''

''சிற்சபையில் நடிக்கின்ற நாயகனார் தமக்குச்
சேர்ந்தபுறச் சமயப்பேர் பொருந்துவதோ என்றாய்
பிற்சமயத் தார்பெயரும் அவர்பெயரே கண்டாய்
பித்தர்என்றே பெயர்படைத்தார்க்கு எப்பெயர் ஒவ் வாதோ?
அச்சமயத் தேவர்மட்டோ நின்பெயர்என் பெயரும்
அவர்பெயரே எவ்வுயிரின் பெயரும்அவர் பெயரே
சிற்சபையில் என்கணவர் செய்யும்ஒரு ஞானத்
திருக்கூத்துக் கண்டளவே தெரியும்இது தோழி''

இப்பாடல்கள் இரண்டும் தலைவி தோழிக்கு உரைக்கும் பாவனையில் அடிகளார் பாடியயவையாகும். முதற் பாடலில், அருகர்-புத்தர் என்னும் பெயர்களும் தாம் வணங்கும் ஆண்டவனுடைய பெயர்களே என்கிறார். ''அருகர்-புத்தர் என்பன புறச் சமயங்களின் தலைவர்கள் பெயராயிற்றே, அவை இந்து, ஆகம முறைப்படி வழிபடும் அம்பலத்தரசருக்குப் பொருந்துமா?'' என்று தோழி கேட்டதாகப் பாவித்து, இந்தியாவின் புராதன சமயங்களின் தலைவர்களாகிய- அருகர் புத்தர் ஆகியவர்களின் பெயர்களேயன்றி, ''பிற்சமயத்தார் பெயரும் அவர் பெயரே கண்டாய்'' என்கிறார் அடிகள் 'பிற்சமயத்தார்' எனக் குறிப்பிடுவது, பிற்காலத்தில் இந்தியாவில் புகுந்து, வளர்ந்து, நிலைத்துவிட்ட இஸ்லாம்-கிறிஸ்தவ சமயங்களேயாகும். இதில் சிறிதும் சந்தேகமில்லை. ஆகவே, அடிகளார் 'எம்மதமும் சம்மதம்' என்றது, இஸ்லாம்-கிறிஸ்துவ மதங்களுக்கும் பொருந்துவதாகும். ''ஒருமையின் உலகெலாம் ஓங்குக'' என்றுரைத்த அடிகளார், எத்தகைய பரந்த விரிந்த மனப்பான்மையும், இலட்சியமும் கொண்டவர் என்பது, இதனால் இனிது விளங்கும்.

---

## —: அறிவியலும் இயற்கையும் :—

அறிவியற்றுறையின் போக்கு, இப்பொழுதெல்லாம் ஒரு திருப்பம் அடைந்து, சமயத்தை நோக்கித் தழுவி இணையவே முற்பட்டு வருகின்றது. இதனை ரெனிஃபுலாப் மில்லர் என்னும் அறிஞர், பின்வருமாறு உருவகமுறையில் அழகுற விளக்குகின்றார்:

''அறிவுக்கும் (Reason), நம்பிக்கைக்கும் (Faith)- அறிவியலுக்கும் இறையியலுக்கும்-இடையே ஒரு வழக்கீடு ஏற்பட்டு நிலவி வந்தது. அறிவு வாதியாக அமைய, நம்பிக்கையே பிரதிவாதியாக இருந்தது. அறிவு நலனும் பரந்த மனப்பான்மையும் கொண்ட, ஆண் பெண் இருபாலாரும் அடங்கிய ஒரு நடுவுநிலைக்குழுவினர், அதனை ஆராய்ந்தனர். மில்லிக்கன், எட்டிங்டன், ஜீன்ஸ், வொயிட்ஹெட், ஹால்டேன் போன்ற பேரறிஞர்கள் சான்றுரை கூறினர். அச்சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு, பிரதிவாதி யாகிய நம்பிக்கையின்மீது கொணரப் பெற்ற வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது''.

''ஆனால் வாதியாகிய அறிவுதான், 'புரட்சிகரமான பிற்போக்கு மனப்பான்மை கொண்டுள்ள உண்மையான குற்றவாளி' என்ற ஐயுறவு நேர்ந்தது. ஆயினும் தன் குற்றத்தை யுணர்ந்துகொண்டு, மெய்யாகவே திருந்தி விடக்கூடிய நிலையில் மாறி வருவதனால், அறிவு ஆகிய புதிய பிரதிவாதியின்மீது, அக்குற்றம் வலியுறுத்தப்படாமல், பரிவு காட்டப்பெறுகின்றது'' என்று, அவர் **'அகிலத்தை அசைவித்த அருளாளர்கள்'** என்னும் நூலிற் குறிப்பிட்டிருக்கின்றார். இது நம்மனோர் சிந்தித்து உணர்தற்கு உரியது.

—தமிழாக்கம்: **ந. ரா. முருகவேள்**

"At the present time things are taking a decidedly different turn. The odds are clearly against reason. More and more often the witnesses called in from the laboratories and studies of exact science turn evidence for defence, and materialism is told many unpleasant things by its own experts and authorities.

The Jury, composed of intelligent and liberal modern men and women, bases its verdict on the views expressed by the witnesses **Millikan, Eddington, Jeans, Whiteheard, Haldane....** The case against faith is dismissed.

Reason, the original plaintiff, is now suspected of being really the one that is guilty of reactionary backwardness, but the case is not pressed for it seems that the new defendant is honestly desirous of mending his ways".

—**RENE FULOP MILLER**
*(The Saints that Moved the World)*

# துன்பம் துடைக்கும் வழி

"அருண் மொழியரசு"
திரு. முருக கிருபாநந்த வாரியார் சுவாமிகள்.

உலகிலே பிறந்த உயிர்கள் அனைத்தும் பலப்பல எண்ணங்களுடன் வாழ்கின்றன. ஒரு தந்தைக்கு ஒரு தாய் வயிற்றில் இரு மக்கள் பிறந்தன. ஒன்று தாய் தந்தையருக்கு அடங்குகின்றது. ஒன்று அடக்குகின்றது. ஒரு தாய் வயிற்றில் பிறந்த மக்கள் குணம் வேறு, நடை வேறு, முகபாவங்கள் வேறு, நிறம்வேறு, திறம் வேறு. இவ்வாறு எல்லாவற்றிலுமே மாறுபாடுகளுடன் இருக்கின்றார்கள்.

தாய் கேகசி; தந்தை விச்சிரவசு. இவர்கட்குப் பிறந்தவர்கள் இராவணன், கும்பகர்ணன், விபீஷணன், சூர்ப்பணகை என்பவர்கள். இந்த நால்வரும் வெவ்வேறு இயல்புகளையுடையவர்கள். இராவணன் மூர்க்கன்; கும்பகர்ணன் நல்லவன். ஆனால் முரடன்; விபீஷணன் பரம சாது. சூர்ப்பணகை மிகவும் பொல்லாதவள். ஒரு வயிற்றில் பிறந்தவர்கள் இவ்வாறு குணங்களால் வேறுபடுகின்றார்கள். புகழ்பெற்ற இதிகாசத்தில் வரும் பாத்திரங்கள் இவர்கள். எல்லோருக்கும் நன்கு தெரிந்தவர்களைப் பற்றிக் கூறினால் உங்களுக்கு நன்கு புரியும் என்று இதனைக் கூறினேன்.

ஆதலால் உலக மக்களில் ஒருவர் குணம் போல் ஒருவர் குணம் அமையாது. ஆன்மாக்கள் வெவ்வேறு இயல்புகளுடன் இருக்கின்றன. ஆனால் இப்போது நான் சொல்லப்போகும் ஒன்றில் மட்டும் யாருக்கும் கருத்து வேற்றுமை கிடையாது. "துன்பம் இன்றி இன்பத்துடன் வாழ வேண்டும்" என்றுதான், கருத்து வேற்றுமையின்றி எல்லோரும் எண்ணுகிறார்கள்.

இந்துவோ? முஸ்லீமோ? கிறிஸ்துவரோ? அரசியல் வாதியோ? சமய வாதியோ? வடநாட்டினரோ? தென்னாட்டினரோ? ஆணோ பெண்ணோ? முதியவரோ? இளைஞரோ? முந்தியிருந்தவரோ? இப்போது இருக்கின்றவரோ? இனி இருக்கப்போகின்றவரோ? எல்லோரும் துன்பமின்றி இன்பத்துடன் வாழ வேண்டும் என்றுதான் எண்ணுகிறார்கள். ஆனால் யாராவது துன்பமின்றி இன்பத்துடன் வாழ்கின்றார்களா? இல்லை. நமக்கு வரும் துன்பங்கள் ஒன்றா? இரண்டா? பலப்பல.

பல துன்ப முழன்று கலங்கிய
சிறியன் புலையன் கொலையன் புரி
பயமின்று கழிந்திட வந்தருள் புரியாயே

என்கின்றார் அருணகிரிநாதர்.

எள் வேண்டும் என்று கொள் விதைப்பது போலும், திருச்சி ரயில்வே நிலையத்தில் மதுரைக்கு டிக்கட்டுஎடுத்து விழுப்புரம்போகும் ரயிலில் ஏறுவது போலும், இன்பம் வேண்டும் என்று எண்ணுகின்ற நாம் துன்ப விதை தூவுகிறோம். துன்பவிதை தூவினால் இன்பம் எப்படி விளையும்?

"கடவுளே! நான் எப்போதும் தப்பாது உன்னையே நினைக்கின்றேன்? எனக்கு இத்தனை துன்பமா? உனக்குக் கண் இருக்கின்றதா? "நான் சஷ்டி விரதம் இருக்கின்றேன். மாதாந்திரம் வெள்ளிதோறும் திருச்செந்தூர் சென்று வழிபடுகின்றேன். இப்படியிருந்தும் என் அருமந்த மகன் மாண்டு விட்டானே? உன்னை வணங்கி என்ன பயன்? இனி கோயிலுக்கு வர மாட்டேன்" என்று கூறித் தெய்வத்தைச் சலித்துக்கொள்ளுகின்றார்கள். இதுபேதைமை. ஒருவன் ரயிலில் பயணம் செய்யும்போது அவன் வாங்கிய ஸ்டேஷனில் அவனை ரயிலை விட்டு இறக்கினால் இதற்காக டெல்லியில் இருக்கின்ற ரயில்வே மந்திரியைக் குறை கூறலாமா?

ஒரு தாய்க்கு நான்கு புதல்வர்கள். ஆரோக்கியமான மூத்த புதல்வனுக்கு 3 இட்டலி, 2 தோசை, ஒரு மலைப்பழம், ஒரு குவளை நிரம்பப் பால் தந்தாள். இரண்டாவது மகனுக்கு அரை உப்புப் போட்ட பார்லி கஞ்சி தந்தாள். அவனுக்கு மாந்தம். நான்காவது கடைக்குட்டி மகனுக்கு ஒன்றுமே தரவில்லை; சட்னி கூட இல்லை. பட்டினி. அவன் தாய் மீது சினந்து "அம்மா ஒழிக" என்றான். கருணை வடிவான தாய் அவனுக்கு ஏன் உணவு தரவில்லை? அவனுக்கு வயிற்றில் சிக்கல்; நேர்வாளமும் விளக்கெண்ணெயும் தந்துள்ளது. 4, 5 முறை பேதியான பிறகு தான் ரசமும் சோறும் தரவேண்டும். பாரபட்சமில்லாத அன்னை மக்களின் உடல் நிலைக்கு ஏற்பஉணவு

தருகின்றாள், தாயின் கருணை மீது குறை கூறலாமா?

பள்ளியின் முதல்வர், மாணாக்கர்கள் எல்லோருக்கும் பாரபட்சமின்றி ஒரே மாதிரியாகவா மதிப்பெண் தருகின்றார்? அந்தந்த மாணவன் எழுதிய எழுத்துக்கு ஏற்ப மதிப்பெண் தருகின்றார். அதுதானே முறை. ''திருச்சிக்கு அருகிலே ஓடுகின்ற நதியின் பெயர் யாது'' என்று கேள்வித் தாளில் இருந்தது. அதற்கு ஒரு மாணவன் ''திருச்சிக்கு அருகில் ஓடுகிற நதி கூவம்'' என்று எழுதினான். அவனுக்கு என்ன தருவார். பூஜ்யம் தானே தருவார்.

இதுபோல ஆன்மாக்கள் முற்பிறப்பில் செய்த நல்வினை தீவினைகளுக்கு ஏற்பச் சுக துக்கங்களை இறைவன் தருகின்றான். ஆதலால் துன்பத்தை நுகர்கின்றவர்கள் இறைவனை நோவலாமா? இறைவன் நடுநிலை வழுவாதவன். நாம் நுகர்கின்ற இன்ப துன்பத்திற்கு இறைவன் காரணன் அல்லன். நாம் முற்பிறப்பில் செய்த நல்வினை தீவினைகளே காரணமாகும். இந்தக் கருத்தைப் பிரமதேவர் மற்றைத் தேவர்கட்கு அறிவிக்கின்றார்.

இவறலும் இகலும் இன்றி
யார்க்குமோர் பெற்றித்தாகி
அவரவர் வினைகள் நாடி
அதற்படு பொருளை நல்கும்
சிவனையாம் வெறுத்தல் குற்றம்
சிறந்தநோன் பியற்றிடாதே
தவறுசெய் தனம்என் றெம்மை
நோவதே தக்க தென்றார்

—கந்தபுராணம்.

ஆதலால் நாம் அனுபவிக்கின்ற துன்பங்களுக்குக் காரணம் இறைவன் அல்லன். நாம் முன் செய்த தீவினையே காரணமாகும். நாம் முற்பிறப்பில் செய்த பாவங்களின் பயனை இப்போது நுகர்கின்றோம் என்று கருதிச் சமாதான மாக வினைப்பயனை அநுபவிக்க வேண்டும்.

உற்றநோய் நோன்றல்
உயிர்க் குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு

என்கின்றார் திருவள்ளுவர்.

நோய்-துன்பம்; நோற்றல்-தாங்கிக் கொள்ளுதல். துன்பத்தைக் கண்டு துடிக்காமலும் துவளாமலும் அமைதியாக அனுபவிக்க வேண்டும்.

ஒருவர் நமக்குத் துன்பஞ் செய்வாராயின் அவர்கள் மீது சீற்றம் அடைதல் கூடாது. நாம் செய்தவினை ''ஆத்யான்மிகம்'' என்ற நியதியின்படி இவர்கள் மூலம் துன்பம் ஆகி வருகின்றது என எண்ணி மனம் சாந்தி அடையவேண்டும்.

இதற்கு ஒரு உதாரணம் உரைக்கின்றேன். சீதாதேவியை அசோக வனத்தில் கொடிய அரக்கியர்கள் அல்லும் பகலும் அல்லற்படுத்தினார்கள். இராவணனை இராவணஞ் செய்து, இராமர் வெற்றிமாலை சூடினார். அனுமார் சீதையிடம் வந்து வணங்கி 'அம்மா! இராம ஜெயம்! இராவணன் மாண்டு விட்டான்' என்று இயம்பினார். சீதாபிராட்டியாருக்கு மட்டற்ற மகிழ்ச்சியுண்டாயிற்று. 'மகனே! ஆஞ்சநேயா! உனக்கு முன்பு சிரஞ்சீவியாக இருக்க வரம் உதவினேன், இப்போது என்ன வரம் வேணுமோ கேள்' என்றாள்.

அநுமார், ''தாயே! நான் மூவாசையும் இல்லாதவன். எனக்கென்று ஒன்றுந் தேவையில்லை. இந்தப் பத்து மாதங்களாகத் தேவரீரை வாட்டி வதைத்தஇந்த கொடிய அரக்கியரைத் தீயிட்டுக் கொளுத்த வேண்டும். ஆதலால் இவர்களை எரியிட்டு எரிக்கும் வரத்தை வழங்குமாறு வேண்டுகின்றேன்'' என்று வரங் கேட்டார். மற்றவர்களாயின் நல்லது, மண்ணெண்ணெய் விட்டுக் கொளுத்து என்று கூறியிருப்பார்கள். பரமஞானியாகிய சனகர் பெற்ற அந்தச் சீதா தேவி அப்போது என்ன கூறினாள்?

அப்பா! அநுமானே! இந்த அரக்கியர் என்னைத் துன்புறுத்தவில்லை. நான் துன்பத்தைத் துய்ப்பதற்குக் காரணம் இவர்கள் அல்லர். என் வினைதான் காரணம். தவநெறியில் நின்ற என் கணவனாரை மான் பிடித்துக் கொடுங்கள் என்று மானின் பின்னே அனுப்பினேன். அது பிழை அல்லவா? என் அருகில் காவலாக இருந்த இலக்குவனை நிந்தனை செய்து போகச் செய்தேன். என் அருகில் இலக்குவன் இருந்திருந்தால், ஈராயிரம் இராவணர்கள் ஒருங்கே வந்தாலும் என்னைக் கவர முடியுமா? முடியாது.

உணவும் உறக்கமும் துறந்து சுகத்தை மறந்து என்னைக் காத்து நின்ற பரம பக்தனாகிய இலக்குவனை நான் கொடுஞ் சொற்களால் மனத்தை நோக வைத்து அனுப்பினேன். அந்த வினைப்பயனால் இந்த இடர் வந்தது. செய்வான்-செய்வினை -வினைப்பயன் -சேர்ப்பான் என்ற இந்த நான்கு தன்மைகளை உணர்வதுவே உத்தம ஞானம். இராவணனுடைய ஏவலர்களாகிய இந்த அரக்கியர் தங்கள் எசமான் இட்ட கட்டளைப்படி என்னை இடர்ப்படுத்தினார்கள். ஆதலால் இவர்களை நோவலாமா? என்னுடைய இல்லத்தில் இருந்து, என்னுடைய உடையை உடுத்தி, என்னுடைய உணவை உண்ட கூனி எனக்குப் பெருந்துயர் விளைவித்தாள். அதனையே நான் பொறுத்து வந்தேன். அக்கூனியைவிட இவர்கள் கொடியவர்களா? இல்லை! ஆகவே நடந்ததை இனி சிந்திக்கக் கூடாது என்று அன்பும் அருளும் ஒழுக அறவுரை பகர்ந்தாள்

யான்இழைத்த வினையினால் இவ்விடர்
தான்அடுத்தது; தாயினும் அன்பினோய்
கூனியிற் கொடியா ரலரே யிவர்
போன காரியம் எண்ணலை புந்தியோய்

—கம்பராமாயணம்.

ஆதலால் துன்பத்தை நுகர்கின்றவர்கள் கடவுளையோ மற்றவர்களையோ நோவக்

கூடாது. நம் வினையைத்தான் நோவ வேண்டும். நாம் துன்பமின்றி இன்பமாக வாழவேண்டும் என்றால், மற்றவர்க்கு மன வாக்குக் காயங்களால் துன்பம் செய்யக்கூடாது. நன்மையே செய்ய வேண்டும். இதுதான் பண்பாடு. துன்பம் வினையினால் விளைகின்றது. விதையில்லேயேல் செடி கொடிகள் இல்லை. வேரின்றி மரம் இல்லை. பால் இல்லையேல் நெய்யில்லை. இதுபோல் வினையில்லையேல் துன்பம் இல்லை. துன்பங்கட்குக் காரணங்கள் வினைகள்தாம் என்பதைத் தெளிவாக உணர்தல் வேண்டும்.

வினை மூன்று வகைப்படும். ஒன்று செய்வினை. இது ஆகாமியம் எனப் பெயர்பெறும். மற்றொன்று நுகர்வினை; இது பிராரப்தம் எனப்பெயர் பெறும். மூன்றான தொல்வினை; இது சஞ்சிதம் எனப்பெறும். பாவம் செய்யக் கூடாது. புண்ணியம் நிஷ்காம்யமாகச் செய்தல் வேண்டும். இதனால் செய்வினை மேலைக்கு வித்தாக வராது. நுகர்வினை இந்த உடம்பு நுகர முடிந்துவிடும். தொல்வினை ஞானத் தீயால் எரிந்துவிடும்; அன்றியும் நம்மை அகாரணமாக நிந்திக்கின்றவர்கள் அதனைப் பங்கிட்டுக் கொள்கிறார்கள். இந்த வகையால் ஆகாமியம் பிராரப்தம், சஞ்சிதம் என்ற மூவித வினைகளும் தொலையும். இதனால் பிறப்பு முடியும். துன்பம் தொடராது.

நாம் இறவாமல் இருக்க வேண்டும் என்றால் அதற்கு ஒரு வழி உண்டு. அது யாது? இறவாமல் இருக்க வேண்டும் என்றால், பிறவாமல் இருக்க வேண்டும். நாம் எங்கு சென்றாலும் நம் நிழல் நம்மைத் தொடர்ந்து வருகின்றது. நம் நிழலை நிறுத்த ஒரு வழியுண்டு. அது என்ன வழி? நாம் இன்னொரு நிழலுக்குச் செல்ல வேண்டும். நிழலுக்குச் சென்றால் நம் நிழல் நின்றுவிடும். இதுபோல் வினையில்லையானால் துன்பமே யில்லாதொழியும்.

''இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை'' என்கிறார் அப்பர் அடிகள். தொல்வினை என்ற சஞ்சித வினை இறைவனிடம் பக்தி செய்வதாலும், ஜபம் தவம், பாராயணம் முதலிய வழிபாட்டாலும் தொலையும். இறை வழிபாட்டால் வெவ்வினை வேரறும், வினையகன்றால் துன்பம் அகலும்.

மார்கழி மாதம்; கடும் பனி கொட்டுகின்றது. காவல்துறைத் தலைவர் ''ஏ! பனியே விலகு'' என்று உத்தரவு இட்டால் பனி விலகுமா? விலகாது. சருகுகளைக் குவித்துத் தீ மூட்டினால் பனி தானே விலகிவிடும். அதுபோல் பக்தி செய்வோர்க்கு இறையருள் வெளிப்பட்டால் வினை விலகும்.

ஆதலால் அன்பர்கள் துன்பந் தொலைந்து இன்பம் ஓங்க வேண்டும் என்று கருதுவீர்களானால், வினைபுரியாது, தினையளவேனும் இறைவனை மறவாது, அன்பு நெறி நின்று அருள்மயமாகி, சிவசிந்தையுடன் இருங்கள். அவநெறி அகன்று, சிவநெறியில் செல்லுங்கள்.

## —: இந்து மதத்தின் தொன்மை :—

உலகில் நிலவிவரும் பல்வேறு மதங்களில், மிகவும் பழமையும் பெருமையும் வாய்ந்து திகழ்வது, நமது இந்துமதம். பிற சில மதங்களைப்போல, இந்து மதமானது, ஒரு குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட ஒருவரால் தோற்றுவிக்கப்பட்டதன்று. யூதமதம் (கி.மு. 1500-1200), ஷிண்டோமதம் (கி.மு. 660), சொராஸ்ட்ர மதம் (கி.மு.660), டாவோயிஸம் (கி.மு. 604), சமணம் (கி.மு. 599), பௌத்தம் (கி.மு.560), கன்பூசியம் (551), கிறித்தவம் (4 கி.பி.) இஸ்லாமியம் (570 கி.பி)., சீக்கியம் (1469 கி.பி) என்னும் மற்றைச் சமயங்கள், இன்ன காலத்தில் இன்னாரால் தோற்றுவிக்கப்பட்டன என்றெல்லாம், வரலாற்று நூல்கள் கூறக் காண்கின்றோம்.

அவ்வாறு ஏதும் கூறற்கு இயலாத நிலையில், வரலாற்றுக் காலத்திற்கும் மிக முற்பட்டு, மிக்க தொன்மை வாய்ந்ததாக, நமது இந்து மதம் விளங்கி வருகின்றது. எகிப்து, மெக்சிகோ, பாபிலோனியா, அசீரியா, பினிசீயா, சிறிய ஆசியா ,கிரீசு, உரோம் முதலிய நாடுகளில், முன்னொரு காலத்தில் விளங்கி யிருந்த, எத்தனையோ பல மதங்கள் இருந்த இடமும் தெரியாமல், மருங்கற மாய்ந்தொழிந்தன. அவ்வாறு இன்றி, நம்முடைய இந்துமதம் தொன்றுதொட்டு இன்றுகாறும் நின்று நிலவி வழங்கி வருகின்றது. பேரறிஞர் பாலகங்காதர திலகர், பேராசிரியர் எர்மன் ஜேகோபி முதலிய பெருமக்கள் வான நூற் குறிப்புகள் பலகொண்டு கணித்து, வேதகாலம் கி.மு. 4500-க்கும் முற்பட்டது என்று வரையறை செய்துள்ளனர். இதனால் இந்துமதத்தின் தொன்மை எத்தகையது என்று, யாவரும் இனி துணரலாம்.

—ந. ரா. முருகவேள்

# "அகர முதல எழுத்தெல்லாம்"

"முத்தமிழ்க் காவலர்"
**திரு. கி. ஆ. பெ. விசுவநாதம்,**
திருச்சிராப்பள்ளி

''அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு''.

என்பது திருக்குறளின் முதல் குறள்.

தமிழ் எழுத்துக்கள் யாவும் 'அ' என்ற எழுத்தை முதன்மையாகக் கொண்டிருப்பது போல, இவ்வுலகம் இறைவனை முதன்மையாகக் கொண்டிருக்கிறது என்பது இதன் பொருள்.

எழுத்துக்களை அறிபவர்கள் முதலில் அகரத்தை அறிவதுபோல, இவ்வுலகத்தை அறிபவர்கள் முதலில் இறைவனை அறியவேண்டும் என்பது இதன் கருத்து.

உயிரெழுத்து 12. மெய்யெழுத்து 18. உயிர்மெய்யெழுத்து 216. ஆய்த எழுத்து 1. ஆக எழுத்துக்கள் 247-க்கும், 'அ' எழுத்து தலைமை தாங்குவதுபோல, மண் ,நீர்,காற்று, தீ, வெளி ஆகிய ஐம்பெரும் பொருள்களைக் கொண்ட இவ்வுலகுக்கு இறைவன் தலைமை தாங்குகிறான் என்பது இதன் மறை பொருள்!

''அகர முதல எழுத்தெல்லாம்'' என்பது தமிழ் எழுத்துக்களை மட்டும் குறிப்பதல்ல. மலையாள எழுத்திலும் முதல் எழுத்து 'அ'. கன்னடத்திலும் முதல் எழுத்து 'அ'. தெலுங்கிலும் முதல் எழுத்து 'அ'. இலத்தின், கிரீக் ஆங்கிலம் பிரஞ்சு முதலிய மேல்நாட்டு மொழிகளிலும் முதல் எழுத்து 'அ'. உருதுவிலும் முதல் எழுத்து 'அ'. சம்ஸ்கிருதத்திலும் முதல் எழுத்து 'அ'. நேற்று முளைத்து நடமாட வந்திருக்கும் இந்தியிலும் முதல் எழுத்து 'அ'. ஆகவே, ''அகர முதல எழுத்தெல்லாம் என்பதற்குத் 'தமிழ் எழுத்தெல்லாம்' என்று பொருள் கொள்ளாமல், எழுத்து என்று எழுதப் பெறுகிற எழுத்தெல்லாம் என்று பொருள் காண்பதே சிறப்பாகும்.

பல மொழிகளைக் கொண்ட எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை முதலாக உடையன. அதுபோல் பல்வேறு உயிர்களைக் கொண்ட இவ்வுலகம் இறைவனை முதலாக உடையது என்பது இதன் விளக்கமாகும்.

தோன்றிய, தோன்றிக் கொண்டிருக்கிற, இனித் தோன்றவிருக்கிற எழுத்துக்கள் எல்லாம் 'அ' எழுத்தையே முதலாக உடையன என்று, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வள்ளுவர் பெருமான் ஆராய்ந்து கூறியிருப்பது வியப்பிற்குரியதாகும்.

எழுத்துக்கள் மட்டுமின்றிச் சொற்களும் கூட அகரத்தையே முதலாக உடையனவாம். மக்கள் முதன் முதல் வாயை மெல்ல மூடித் திறந்தால் 'அம்மா'' என்றும், அழுத்தமாக மூடித்திறந்தால் ''அப்பா'' என்றும் ஒலிக்கிறது. மக்கள் இவ்வுலகில் முதல் முதலிற் கண்ட தாய் தந்தையர்க்கு முதன் முதலில் ஒலிக்கிற சொற்களையே பெயராக வைத்திருப்பதும், அதிலும் மெல்லோசையை மென்மையை யுடைய தாய்க்கும், வல்லோசையை வன்மையையுடைய தந்தைக்கும் வைத்து அழைப்பதும், ஆடு மாடுகளுங்கூட அலறும்பொழுது 'அம்மா' என்ற என்ற சொல்லே வெளிவருவதும், அச்சொல்லே எல்லாச் சொற்களுக்கும் முதன்மையாக அமைந்திருப்பதும் கருதத்தக்கன! தமிழகத்தில் மட்டுமல்லாமல் உலகின் பலவிடங்களிலுமுள்ள பல மொழி பேசும் மக்களும் தங்களின் தாய் தந்தையரை ''அம்மா'' ''அப்பா''! என்றே அழைத்து வருவதையும், அதிலும் 'அ' எழுத்தே முதலில் அமைந்திருப்பதையும் காணும் பொழுது 'அகர முதல சொல்லெல்லாம்' என்றும் சொல்லத் தோன்றுகிறது.

வடிவிலும்கூட அகரம் முன் நிற்கிறது. ''சர்வம் பிரணவ மயம் ஜகத்'' என்பது வேத வேதாந்தங்களின் கருத்து. பிரணவம் என்பது ஓங்காரம் என வடநூலார் கூறுவர். தமிழிலோ வடமொழியிலோ, ஓங்காரம் முதல் எழுத்தாக இல்லை. உற்று நோக்கினால் 'அ' என்ற முதல் எழுத்தே ஓங்கார வடிவமாகத் தோன்றும்.

'அ' எழுத்தை முக்காற் பங்கு எழுதுங்கள். இன்னும் எழுதவேண்டிய காற்பங்கு போன்று மீதியாக இருக்கும் அதை அப்படியே செங்குத்தாக மேல் நோக்கிப் போட்டுவிடுங்கள். அவ்வளவுதான். ஓங்கார வடிவைத் தலைகீழாகக் காண்பீர்கள். இதைக் காணும் பொழுது 'அகர முதல வடிவெல்லாம்' என்றும் நினைக்க வேண்டியிருக்கிறது.

வடிவு மட்டுமல்ல: ஒலியுங்கூட அவ்விதமே. பிரணவத்தின் ஒலி 'ஓம்' என்பது. இதை ஒலிப்பதானால்'அ' என்று வாயைத்திறந்து 'உ' என்று குவித்து 'ம்' என்று மூடியாக வேண்டும். இதிலிருந்து 'ஓம்' என்பதை ஒலிக்க, அ,உ, ம் என்ற மூன்று எழுத்துக்களும் அவற்றின் ஒலிகளும் தேவை என்பது தெளிவாகும். அதை அறிந்தே சிவவாக்கியர் என்ற சித்தர் ஒருவர்-

''அகார காரணத்துளே அடங்கி நின்ற வையகம்
உகார காரணத்துளே ஒடுங்கி நின்ற வையகம்
மகார காரணத்துளே மயங்கி நின்ற வையகம்''

என்று கூறினர் போலும். 'ஓம்' என்பதை ஒலிக்கும் இந்த அ,உ,ம், என்ற எழுத்துக்கள் மூன்றையும் 'அ' தன்னுள் அடக்கி நிற்பதைக் காணலாம். காணுங்கள்!

மதலைகீழ் 'அ' எழுத்தைச் சரிபாதியாக வெட்டுங்கள். மேற்பாதி வ ஆகவும் கீழ்ப்பாதி ஏ அதாவது ம தலைகீழாகவும் காணப்படும். மேல் பாதி வ-வை வலது கோடியில் வெட்டினால் உ என்றும் 1 என்றும் காணப்படும். இம் மூன்றும், அ,உ,ம என்றாகி 'ஓம்' என்ற ஒலியை ஒலிப்பதைக் கண்டு மகிழுங்கள். இதைக் காணும்பொழுது 'அகர முதல ஒலி எல்லாம்' என்றும் கருதவேண்டியிருக்கிறது.

குறளில் உள்ள 'எல்லாம்' என்ற ஒரு சொல் 'எழுத்தெல்லாம்' என்பதில் எழுத்துடன் சேர்ந்தும், பிறகு தனித்தும் நின்று,சொல்லெல்லாம், வடிவெல்லாம், ஒலியெல்லாம், என்பவைகளையும் தன்னுள் அடக்கி, எல்லாம் என்று நிற்பதைக் காணும்பொழுது நமது உள்ளமெல்லாம் மகிழ்கிறது.

ஆதி பகவனையும் அகரம் விட்டுவிடவில்லை. அவனைப் பருப்பொருளாகவும், நுண்பொருளாகவும் காட்டுகிற காட்சி கண்கொள்ளாக்காட்சியாகும். அகரத்தின் 1, உ.ம என்ற மூன்று துண்டுகளும் கடவுள், உயிர், மாயை என்றாகின்றன. ம மாயையின் முதல்எழுத்து. உ, உயிரின் முதல் எழுத்து. 1 தனிக்கோடு இறைவனது அருஉரு. இது அகரம் காட்டுகின்ற ஆதிபகவனின் பருப்பொருளாம். அடுத்து நுண்பொருள்!

எழுத்துக்கள் எல்லாவற்றிலும் 'அ' நுண்ணியதாகக் கலந்தே உள்ளது. க் அ.க, ப் அ.ப, ம் அ இ மி, த் அ உ,து. 'அ' கலவாத எழுத்தே இல்லை, ஒலியும் அப்படியே. எதை ஒலிக்க வாயைத் திறந்தாலும் 'அ' ஒலிக்கப்பட்டு விடுகிறது. எழுத்திலும் ஒலியிலும் 'அ' எவ்வளவு நுண்பொருளாக மறைந்திருக்கிறதோ, அவ்வளவு நுண்பொருளாக ஆதி பகவனும் இவ்வுலகில் மறைந்து காணப்படுகிறான் என்பது வள்ளுவரது முடிவு!

அ,உ,ம என்ற மூன்றையும் கடவுள்,உயிர், மாயை எனக் கண்டோம். சித்தாந்திகள் இதனைப் பதி,பசு, பாசம் என்பர். இவற்றின் நிலைமையை அகரம் அப்படியே காட்டுகிறது. உற்றுநோக்கினால் குறளில் உள்ள உலகையே அகரத்துள் காணலாம். காணுங்கள்! முதலில் மூன்று துண்டுகளையும் ஒன்று சேர்த்து அகரமாக்கி உற்று நோக்குங்கள்.

''தனிக் கோடாகிய இறைவன் உயிர் தன்னை வந்து அடையட்டும்'' எனக் கருணை காட்டி உயிர் முன் வந்து நிற்கிறான்.

'உ' என்ற உயிர் இறைவனை அடையத் துடியாய்த் துடித்து அவன் பக்கம் நீண்டு செல்கிறது.

'ம' என்ற மாயையானது, உயிரை முழுதும் பற்றிக் கொண்டு, இறைவனை அடைய விடாமல் தடுத்து, தலைகீழாகத் தொங்கி 'ஏ' இவ்வுலகுக்கு இழுக்கிறது.

உயிரானது மாயையையும் விடமுடியாமல், இறைவனையும் அடையமுடியாமல் இடையில் துன்புற்று வருந்திக் கொண்டிருக்கிறது! என்பது, அகரத்துள்ளே அடங்கி நிற்கின்ற இவ்வுலக நிகழ்ச்சி!

உலகம் இறைவனை முதலாக உடையது என்று கூறியதிலிருந்தே உயிரை இரண்டாவதாகவும், மாயையை மூன்றாவதாகவும் உடையது என்பது தானாகவே தோன்றும். இம் மூன்றும் முப்பொருள் உண்மை எனப்படும். இதனை அகரம் தன்னுட்கொண்டு ஒளிவீசுகிறது.

'அ' முன்னும் 'உலகு' பின்னும் உள்ள இக் குறளை இன்னும் ஒருமுறை படியுங்கள். அதன் புதைபொருள்கள் அனைத்தும் நன்கு விளங்கும்.

அகர முதல எழுத்து எல்லா (வற்றிற்கும்) ஆதி பகவன் முதற்றே உலகு!

# சங்க நூல்களில் முருகன்

'வாகீச கலாநிதி'

திரு கி. வா. ஜகந்நாதன், எம்.ஏ.,

தமிழ்நாட்டில் மிகுதியாக வழிபடப்படும் கடவுள்முருகன்என்பதைத்பழையகாலத்துஇலக்கண இலக்கியங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம். தொல்காப்பியம் அவனைக் குறிஞ்சி நிலக்கடவுள் என்று சொல்கிறது. ''சேயோன் மேய மைவரை உலகமும்'' என்பது தொல்காப்பியம். எல்லா இலக்கண நூல்களும் அவனைக் குறிஞ்சித் தெய்வம் என்றே கூறுகின்றன. பௌத்தர் இயற்றிய வீரசோழியம் என்ற இலக்கண நூலும், சைனர் இயற்றிய அகப்பொருள் விளக்கமும், கிறிஸ்துவர் இயற்றிய தொன்னூலும், அப்படியே கூறுகின்றன.

பாலை நிலத்துக்குச் சிலர் கொற்றவையைத் தெய்வமென்றும் கதிரவனைக் கடவுள் என்றும் கூறுவதுண்டு. அப்படிக் கூறாமல் குறிஞ்சித் திணைக்கு முருகனையே தெய்வமென்று கூறும் வழக்கு நெடுங்காலமாக இலக்கணங்களிலிருந்து வருகிறது.

நிலத்தைக் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்று ஐந்து வகையாகப் பிரிப்பது தமிழ் மரபு. இயற்கையில் மிக உயர்ந்த நிற்பது மலை. மலையும் அதைச் சார்ந்த இடமும் குறிஞ்சி நிலம். குறிஞ்சியும் முல்லையும் வெம்மை மிகுதியால் ஈரமின்றி வறண்டுநிற்கும் நிலையில், பாலைஎன்றுபெயர் பெறும். ''கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்தம்'' என்று கம்பர் ஆற்றை வருணிப்பார். உயர்ந்த மலையில் தோன்றிப் பாலை நிலத்தின் வழியேவந்து, காடுகள், அடர்ந்த முல்லை நிலத்தின் வழியில் ஓடி, வயல்கள் நிறைந்த மருத நிலத்தில் பாய்ந்து, கடைசியில் கடலைச் சார்ந்த நெய்தல் நிலத்தை அடைந்து கடலொடு ஆறு கலக்கிறது. அதன் வழியே சென்றால் ஐந்து நிலங்களை யும் பார்க்கலாம். ''மலைத் தலைய கடற் காவிரி'' என்ற சங்கச் செய்யுளின் அடி, காவிரியின் ஆதியையும் அந்தத்தையும் சொல்கிறது.

இயற்கையின் அமைப்பைப் பார்த்தால், மலையும் மலையைச் சார்ந்த இடமுமாகிய குறிஞ்சி நிலமே முதல் திணையாக இருப்பதைக் காணலாம். ஒவ்வொரு திணைக்கும் இன்ன ஒழுக்கம் அதாவது காதலர்களின் செயல், உரியது என்று வரையறை செய்திருக்கிறார்கள். காதலனும் காதலியும் கண்ணாலும், கருத்தாலும் கலந்து ஒன்றுபட்டுக் கூடியும் பிரிந்தும் பிறர் அறியாமல் களவிலே உறவாடிப் பிறகு மணம் புரிந்து கொண்டு வாழ்க்கை நடத்துவார்கள். அந்த இல்லற வாழ்க்கையில் கூடுவதும், பிரிவதும், ஊடுவதும் நடைபெறும். களவுக் காதலில் இன்பமே சிறந்து நிற்கும். மணம் கொண்ட பிறகு நிகழும் காதல் வாழ்க்கையைக் கற்பு என்று புலவர்கள் சொல்வார்கள். அந்தக் கற்பு வாழ்க்கையில் அறம், பொருள், இன்பம், வீட்டுநெறி என்னும் நான்குமே அமையும்.

இப்படித் தொடர்ந்து நடைபெறும்காதல் வாழ்க்கையில் முதலில் இருப்பது புணர்ச்சி என்னும் நிகழ்ச்சி. ஆணும் பெண்ணும் சந்தித்து உறவாடுவது அது. அதையே குறிஞ்சித் திணையின் உட்பொருள் என்று சொல்வர். காதலனும், காதலியும் ஒன்றுபட்ட பின்னரே அவர்களுடைய இணைந்த வாழ்க்கை தொடர்ந்து நடைபெறும். ஆதலால் அவர்களுடைய ஒட்டி உறவு கொள்ளும் வாழ்க்கையில் முதலில் வருவது புணர்ச்சி அல்லது இணைதல். அதுவே அந்த வாழ்க்கையின் தொடக்கம். ஆதலால் அகப்பொருள் என்று நூல்களெல்லாம் விரித்துரைக்கும் காதல் வாழ்க்கையில் முன்னேற நிற்பது புணர்ச்சி. அதுவே குறிஞ்சி நிலத்தின் உட்பொருள்.

இயற்கையை ஒட்டிப் பார்த்தால்,குறிஞ்சி நிலம் முதலில் நிற்கிறது. வாழ்க்கையை ஒட்டிப் பார்த்தால் குறிஞ்சித் திணைக்குரிய ஒழுக்கம் முதலில் அமைகிறது. ஆகவே குறிஞ்சியே முதல் திணை என்று சொல்ல வேண்டும். அந்த முதல் திணைக்குத் தெய்வம் முருகன் என்பதால் முருகனுக்குரிய தலைமை தெளிவாகும்.

பிரளய காலத்தில் உலகமெல்லாம் நீரில் மூழ்கிக் கிடக்கும். பிறகு வெள்ளம் மெல்ல மெல்ல வடிய நிலம் தோன்றும். நிலத்திலும் மிக உயர்ந்து நிற்கும் மலையே முதலில் தலை நீட்டும். ''கல் தோன்றி மண்தோன்றாக் காலம்'' என்று நிலம் தோன்றும் முதல் காலத்தைப் புறப் பொருள் வெண்பாமாலையில் காண்கிறோம். ''மலை நாறிய வியன் ஞாலத்து'' என்பது பத்துப்பாட்டு. 'மலை முதலில் முளைத்த பரந்த உலகத்தில்' என்பது இதன் பொருள். இவற்றினாலும் நிலநூல் வல்லார் சொல்லும் உலகத் தோற்ற முறையினாலும் முதலில் மலை தோன்றியது என்பதை அறிகிறோம். அப்படி முதலில் தோன்றிய குறிஞ்சி நிலத்துக்கு உரிமையுடைய தெய்வம் முருகன் என்று தமிழர்கள் வகுத்தார்கள். ''விண் பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவன்'' என்று நக்கீரர் பாடுவார்.

முதலில் மலை தோன்றிற்று என்பதனால் உலகத்தில் தோன்றிய முதல் மனிதன் மலையில் வாழ்ந்தவன் என்பதையும் உய்த்துணரலாம். அவன் தெய்வத்தைப் பாடத் தொடங்கியபோது முருகனாக வழிபட்டான் என்றே கொள்ளவேண்டும். எனவே, மனித இனம் தன்னுடைய ஆரம்ப காலத்தில் கடவுளை வீரமும், அழகும் உடையவனாக வைத்து, முருகன் என்று பெயர் சொல்லி வழிபட்டதென்று சொல்வதில் பிழையில்லை.

உலகத்தில் வாழத்தொடங்கிய மனிதன் தன்னுடன் இருந்த விலங்கு முதலியவற்றால் அலைப்புண்டு அஞ்சினான். அந்த அச்சத்தைப் போக்கப் பெருந் துணை ஒன்றை வேண்டினான். அந்தப் பெருந்துணையாக முருகனை வழிபட்டான். துன்ப நீக்கத்துக்குரிய வீரனாக அவனைக் கண்டான். பிறகு, வாழ்க்கையில் இன்பம் தருபவனாக அந்தப் பெருமானைக் கண்டான். துன்ப நீக்கமும், இன்ப ஆக்கமும் அவனாலே உண்டாகும் என்று நம்பினான். ஆகவே, இடரின்றி வாழவும், வாழ்க்கையில் இன்பம் காணவும் முருகனையே அருந்துணையாக அவன் கொண்டான்.

வீரத்தால் இடர்போக்கும் தனிமையும், அருளினால் இன்பம் ஆக்கும் இயல்பும் முருகனுக்கு அமைந்தன. இந்த இரண்டு பண்பும் அவனுக்கு உள்ளன என்பதை அவன் திருக்கரத்திலுள்ள வேலும், அவன் தனது அடியாருக்கு அருள்புரியும்போது எழுந்தருளி வரும் வாகனமாகிய மயிலும் புலப்படுத்தும். வில் வாள் வேல் என்று ஆயுதங்களை மூன்று வகையாகப் பிரிப்பார்கள். அவற்றில் வேல் சிறந்தது. அதை உடையவன் முருகன். அதனை, ''வீரவேல், தாரைவேல், விண்ணோர் சிறைமீட்ட தீரவேல்'' என்று பாடுவார்கள். வெற்றிவேல் என்று என்று பாடுவார்கள். ஞானவேல் என்று அதைச் சிறப்பிப்பார்கள்.

R. RAJU, Dy. Commissioner (Retired) HR&CE Administration Dept.

மயில் மிக அழகியது. பறவைகளுக்குள் கண்ணைக் குளிர்விக்கும் பச்சை நிறம் பொருந்திய எழிற்பறவை அது. அது இன்பத்தைக் காட்டும் அடையாளம். வேல் துன்ப நீக்கத்தைத் தருவது. மயில் இன்ப ஆக்கத்தை உண்டாக்குவது. இவ்விரண்டும் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதவை. ஆதலால், ''வேலும் மயிலும் துணை'' என்று சொல்லும் வழக்கம் உண்டாயிற்று. அயிலேறும் கையனாகத் தோன்றி உயிர்களுக்குத் துன்பத்தை நீக்கும் முருகன், மயிலேறும் ஐயனாகத் தோன்றி இன்பத்தை உண்டாக்குகிறான்.

கண்ணுக்குத் தோன்றும் புற உலக வாழ்க்கையில் துன்பம் போகவும், இன்பம் விளையவும் அருள்புரியும் முருகப்பெருமான், அக வாழ்க்கையிலும் அவ்வண்ணம் செய்கிறான் என்பதை மனிதன் அறிவில் முதிர்ச்சி அடைந்தபோது அறிந்து கொண்டான். அறியாமையென்னும் அஞ்ஞானமே பிறவிக்குவித்து. ''மருளானாம் மாணாம் பிறப்பு'' என்று வள்ளுவர் சொல்வார். அந்த அறியாமை நீங்க ஞானம் வேண்டும். அறியாமையென்னும் இருள் நீங்கினால் மெய்ஞ்ஞானம் பிறக்கும். முருகன் கையில் உள்ள வேல் ஞானசக்தி; ஞானத்தை வேலாகக் கூறும் மரபை, '''ஞானவேல் ஏந்தும் ஐயர்'' என்ற திருவாசகத்தாலும் உணர்ந்து கொள்ளலாம்.

அடுத்து இன்பம்; அல்லது முத்தி. அறியாமை நீங்கிய பிறகு இறைவனுடைய அருள் வந்து பதியும். அப்போது இன்பம் உண்டாகும். முருகனுடைய மயில் அந்த இன்பத்துக்கு அடையாளம். அது ''துங்கஅனுகூலப் பார்வைத் தீரச் செம்பொன் மயில்''.

இப்படித் தத்துவமுறையில் முருகனை உணரத் தலைப்பட்டபோது அவன் பிறவிப் பிணியைப் போக்கி என்றும் அழியாத வீட்டின்பத்தை நல்குபவன் என்ற உண்மை புலனாயிற்று.

''என்றும் வாய்த்த துணை, கிரணக்
கலாபியும் வேலும் உண்டே''

''பயந்த தனி வழிக்குத் துணை வடிவேலும்
செங்கோடன் மயூரமுமே''

என்று முதிர்ந்த மெய்ஞ்ஞானச் செல்வராகிய அருணகிரிநாதர் பாடுவார்.

இவ்வாறு மனிதனுக்கு முதல் முதலாகக் கடவுள் உணர்வு தோன்றியபோது முருகனாகக் குறிஞ்சிக் கடவுளாகத் தோன்றிய செவ்வேள், மனிதனுடைய அறிவு முதிர முதிரப் பாச வினையறுத்துப் பரமானந்தம் வழங்கும் பெருங் கடவுளாகத் தன்னை அறியச் செய்தான்.

முருகனைக் குறிஞ்சித் தெய்வம் என்று கொண்டதாலும், அவனைப் ''பெரியோர் ஏத்தும் பெரும் பெயர் இயவுள்'' என்று போற்றுவதனாலும் தமிழர்களுக்கு முருகுணர்வு படிப்படியாக வளர்ந்து வந்த வரலாற்றை உணர முடிகிறது.

பத்துப் பாடலில் முதலில் நிற்பது திருமுருகாற்றுப்படை. அதை இயற்றியவர் நக்கீரர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய அந்த நூல், இன்றும் பாராயண நூலாகப் பயன்பட்டு வருகிறது. சைவத் திருமுறைகளில் பதினோராந் திருமுறையில் கோக்கப்பெற்ற நூல்களில் ஒன்றாகவும் திகழ்கிறது.

பத்துப்பாட்டில் பல புலவர்கள் இயற்றிய பாடல்கள் இருக்கின்றன. அவற்றைக் கால அடைவாக வைத்துக் கொடுக்கவில்லை. நக்கீரருக்கு முந்தி இருந்த கபிலருடைய நூலாகிய குறிஞ்சிப்பாட்டு, எட்டாவதாக இருக்கிறது. நக்கீரருடைய புலமைச் சிறப்பை எண்ணி அதனை முதலில் வைத்தார்கள் என்று சொல்வதற்கும் இல்லை. அவர் பாடிய மற்றொரு பாட்டாகிய நெடுநல்வாடை ஏழாவதாக நிற்கிறது. முருகனுடைய புகழைச் சொல்வதனால் திருமுருகாற்றுப்படையை முதற்பாட்டாக வைத்துக் கோத்தார்கள் என்று சொல்வது தான் பொருத்தம். எதிலும் முருகனுக்கு முதலிடம் கொடுக்கும் தமிழர்கள் அவனைப் பாடும் நூலுக்கு முதலிடம் கொடுத்தது பொருத்தம் அல்லவா?

-தொடரும்.

# ஆழ்வார்கள் காணும் முழுமுதற் கடவுள்

(டாக்டர் திரு ந. சுப்பு ரெட்டியார், M.A., Ph.D.)

திருமாலை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம் வைணவம். இது பல உயரிய கொள்கைகளைத் தன்னகத்தே கொண்ட ஒரு பரந்த சமயமாகும். ஆழ்வார்கள் திருமால் அடியார்கள். அவர்கள் திருமாலின் எண்ணற்ற மங்கள குணங்களாகிய அமிழ்த வெள்ளத்தில் மூழ்கி மிகவும் ஈடுபட்டு நன்றாக ஆழ்ந்திருப்பவர் என்னும் காரணத்தினால் அவர்கட்கு 'ஆழ்வார்கள்' என்னும் திருநாமம் ஏற்பட்டது. பொய்கையார் பூதத்தார் பேயார் திருமழிசைப் பிரான் தொண்டரடிப்பொடிகள் பாண்பெருமாள் குலசேகரர் பெரியாழ்வார் ஆண்டாள் திருமங்கைமன்னன் நம்மாழ்வார் மதுரகவிகள் என ஆழ்வார்கள் பன்னிருவர் ஆவர். ஒப்புயர்வற்ற இந்த மெய்யடியார்கள், உயர்வற உயர்நலமுடையவரான அயர்வறும் அமரர்களின் அதிபதியால் மயர்வற மதிநலம் பெற்று அருளிச் செய்த பிரபந்தங்களே 'நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்' என்ற தமிழ் மறையாகும். பக்திக்கு வரம்பாக, ஓர் எல்லை நிலமாக, அமைந்த இப்பாசுரங்களினின்றும், ஆழ்வார்களின் கடவுட் கொள்கை இன்னது என்பதைத் தெளிவாக அறியலாம்.

**கடவுளின் சொரூபம் :**

ஆழ்வார்களின் முழுமுதற் கடவுள் திருவாழ்மார்பனாகிய நாராயணன். இவன் சத்தியம் ஞானம் ஆனந்தம் அனந்தம் இவற்றின் சொரூபமாக இருப்பவன். இடத்தாலும் காலத்தாலும் அளவிடப் பெறாதவன்; ''அந்தமில் ஆதிஅம் பகவன்'' (திருவாய்-1. 3:5). எங்கும் நிறைந்திருப்பவன்; ''உடல் மிசை உயிரெனக் கரந்து மெங்கும் பரந்துளன்'' (திருவாய்-1.1:7). மூன்றுவித சேதன, அசேதன பரிணாம உருவமான வேறுபாட்டின் குறைகள் (விகார தோஷங்கள்) தட்டாதவன். இவனை,

''பிறப்பொடு மூப்புஒன்று இல்லவன் தன்னைப்
பேதியா இன்பவெள் ளத்தை
இறப்புஎதிர் காலக்கழிவும் ஆனான்''

என்று குறிப்பிடுவர் பரகாலர். (பெரிய திருமொழி 4.3.2). அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கு வகைப்பட்ட பலன்களையும் உயிர்கட்குத் தந்து அவற்றின் புகலிடமாக இருப்பவன். தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவன். இவனை நம்மாழ்வார்.

''தனிமாப் புகழே எஞ்ஞான்றும்
நிற்கும் படியாய்த் தான்தோன்றி
முனிமாப் பிரம முதல்வித்தாய்
உலகம் மூன்றும் முளைப்பித்த
தனிமாத் தெய்வம்''

என்று குறிப்பிடுவார் (திருவாய்மொழி-8.10.7) மேலும் இவன் ஞானம் சக்தி பலம் ஐசுவரியம் வீரியம் தேஜஸ் முதலிய மங்கள குணக்கூட்டங்களால் அலங்கரிக்கப் பெற்றவன். அவனிடம் இக்குணங்கள் ஆதல் அழிதல் இன்றி எப்பொழுதும் நிறைந்திருக்கும். இவற்றைத் தவிர வாத்சல்யம், சௌசீல்யம், சௌலப்பியம் முதலிய எண்ணற்ற குணங்களையும் கொண்டவன் அவன். இவ்வுலகத்தினைப் படைத்தல் காத்தல் அழித்தல் ஆகியவற்றின் காரண பூதன். இக்கருத்தினைத் திருமங்கை மன்னன்,, ''பூவளர் உந்திதன்னுள் புவனம் படைத்து,உண்டு, உமிழ்ந்த தேவர்கள் நாயகன் ''(பெரிய திருமொழி-9.9:1) என்றும்; ''உடம்பு உருவில் மூன்று ஒன்றாய், மூர்த்தி வேறாய் உலகுய்ய நின்றவன்'' (பெ.தி. 2.5:1) என்றும் குறிப்பிடுவர். இதனையே நம்மாழ்வாரும்,

''இவையும் அவையும் உவையும்
இவரும் அவரும் உவரும்
எவையும் எவரும் தன்னுள்ளே
ஆகியும் ஆக்கியும் காக்கும்
அவையுள் தனிமுதல் எம்மான்''

என்று போற்றியுரைப்பர் (திருவாய்-1.9:1). ''அழிப்பொடு அளிப்பவன் தானே'' (திருவாய் 1.9:8) என்றும், ''காக்கும் இயல்வினன் கண்ண பெருமான்'' (திருவாய்-2.2:9) என்றும் மேலும் கூறுவர். சிறார் வீடுகட்டி அழிக்குமாப்போலே இம்முத் தொழில்களும் இவனுக்குத் தன் இச்சையாலே உண்டாகும் விளையாட்டேயாகும். இதனைக் குருகூர்நம்பி,

''துன்பமும் இன்பமும் ஆகிய
செய்வினையாய் உலகங்களுமாய்
இன்பமில் வெந்நர காகிப்
பலபல மாய மயக்குகளால்
இன்புறும் இவ்விளையாட்டு உடையான்''

என்று போற்றியுரைப்பர். (திருவாய். 3.10.7). இதனைக் கம்பநாடர்,

''உலகம் யாவையும்
தாம்உள ஆக்கலும்
நிலைபெ றுத்தலும்
நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை
யாட்டுடை யார்''

என்று விளக்குவர் (கம்ப. இரா.காப்பு). ஆழ்வார்களின் பாடல்களில் அவர் தோய்ந்துநின்ற நிலையே இக்கூற்றிற்குக் காரணமாகலாம்.

**வீடுபேற்றிற்குக் காரணம் :**

மேலும், இந்த நாராயணன் அசித்து (இவ்வுலகப் பொருள்கள்) மாறுபாடு அடைவதற்கும், உயிர்கள் தத்தம் வினைகட்கேற்ப உடல்களை அடைவதற்கும் காரணன்.

''கருமமும் கரும பலனும்
ஆகிய காரணன்''

என்பர் ஆழ்வார். (திருவாய் 3.5:10). இந்த உலகிலுள்ள உயிர்கள் பக்தி மூலமும், பிரபத்தி (சரணாகதி) மூலமும் வீடுபேற்றினை அடைவதற்கும் இவனே துணையாவான்.

''தாய்நினைந்த கன்றேயொக்க என்னையும்
தன்னையே நினைக்கச்செய்து
தான்எனக்கு
ஆய்நினைந்து அருள்செய்யும் அப்பனை''

என்பார் திருமங்கையாழ்வார் (பெ.தி.7.3:2). கன்றானது எப்போதும் தன் தாயையே நினைத்துக் கொண்டு இருக்குமாப்போல உலகிற்கெல்லாம் தாயாகிய தன்னையே தானும் (ஆழ்வாரும்) நினைத்திருக்குமாறு செய்தவன் என்கின்றார்.

''பரந்தசிந்தை யொன்றிநின்று
நின்னபாத பங்கயம்
நிரந்தரம் நினைப்பதாக
நினைக்க வேண்டுமே''

என்று திருமழிசைப்பிரான் கூறியவாறு (திருச்சந்தவிருத்தம்-101) எம்பெருமானின் அருளின்றி அவனை நினைத்திருத்தல் அமையாது. நம்மாழ்வாரும்,

''சார்ந்த இருவல் வினைகளும்
சரித்து, மாயப் பற்று அறுத்துத்
தீர்ந்து தன்பால் மனம்வைக்கத்
திருத்தி வீடு திருத்துவான்''

என்று விளக்குவர். (திருவாய் 1.:5:10).

**கடவுளின் உருவம் :**

நித்திய விபூதியான பரமபதத்தில் எம்பெருமான் நாராயணனுக்கு எனத் தனியான திவ்விய மங்கள உருவம் உண்டு. அவ்வுருவம் ஈடும் எடுப்பும் அற்ற பேரொளியினை யுடையது; பேரழகு வாய்ந்தது, கண்டாரை ஈர்ப்பது. இத்திருவுருவத்தின் அழகில் தன் நெஞ்சினைப் பறிகொடுத்த ஆழ்வார், ''பயிலும் சுடரொளி மூர்த்தி பங்கயக் கண்ணன்'' என்றும், ''மாசறு சோதி என் செய்யவாய் மணிக்குன்றம்'' (திருவாய் 5.3:1) என்றும் கூறுவதைக் காணலாம். இத்தகைய உருவம் யோகியரின் தியானத்திற்கு ஏற்றது. இதனை,

''நாகம் ஏறி நடுக்கடலுள்
துயின்ற நாரா யணனேஉன்
ஆகம் முற்றும் அகத்தடக்கி
ஆவி அல்லல் மாய்த்ததே''

என்று ஆழ்வார் கூறுவதனால் அறியலாம். இந்த உருவத்துடன் பெரிய பிராட்டியார், பூமிப்பிராட்டியார், நீளா தேவி ஆகியோருக்கு நாயகனாக இருப்பவன். இதனை,

''இன்துணைப் பதுமத்துஅலர்மகள்தனக்கு
இன்பன் நல்புவிதனக் கிறைவன்
தன்துணை ஆயர் பாவைநப் பின்னை
தனக்கிறை''

(பதுமத்து அலர்மகள் - பெரிய பிராட்டியார்; புவி-பூமிப்பிராட்டியார்; நப்பின்னை-நீளா தேவி) என்ற திருமங்கையாழ்வாரின் வாக்கால் அறியலாம். நம்மாழ்வாரும்,

''முந்நீர்ஞாலம் படைத்த
எம்முகில் வண்ணன்''

என்று கூறுவதால் எம்பெருமான் நாராயணன் படைத்தல் முதலிய செயல்களை மேற்கொள்வன் என்பது புலப்படும். மேலும் இந்தத் திவ்விய மங்கள உருவம் ஐந்து வகையோடு கூடியிருக்கும் என்பது ஆழ்வார்களுடைய நம்பிக்கை.

# சேக்கிழார் பெருமை

'கவியோகி' சுத்தானந்தபாரதியார்

அருண்மணங் கமழும் தமிழ்க்கலை யளித்தான்;
அன்பினில் அரும்பிய சிவமாம்
பொருண்மணங் கமழும் திருவடி யாரின்
புனிதநல் வாழ்வினைப் புகன்றான்
இருண்மயக் கொழியப் பதியறி வென்னும்
இரவியாய் உலகினில் எழுந்தான்
தெருண்மணி, சைவத் திருமணி யான
சேக்கிழார் வாக்கினைச் செபிப்போம்.

**சேக்கிழார் மரபு :**

தமிழ்நாட்டில் புகழ்பெற்ற வகுப்பினர்-நற்குடி வேளாளர்; இவர்களே இன்றும் தமிழரிற் பெரும்பகுதியினர். இவர்கள் கல்விகேள்விகளிற் சிறந்தனர்! வீரத்திற் பேர் பெற்றனர்; அறத்தை நிலைநாட்டச் செங்கோல் பிடித்தனர்; கலை வளர்த்தனர்; அன்பினால் அருட்பணி செய்தனர். மன்னனின் மணிமுடியைவிட இவர்கள் வளர்க்கும் கதிர்முடி முதன்மையானது! கத்தியை விடக் கலப்பை சிறந்தது; செங்கோலைவிட ஏரடிக்கும் சிறுகோல் பெரிது. அரசனுக்கும் ஆண்டிக்கும் பசிப்பிணி ஒன்றுதான். அதைத் தீர்ப்பவர் ஏர்பிடிக்கும் காராளர். அவர் நெற்போர் குவிக்காவிட்டால், புலவர் சொற்போர் நடக்காது; வணிகர் பொற்போர் நடக்காது; வீரர் விற்போர் செல்லாது, வயிறு கிண்டும்போது வாயும், வாளும் நீளாவாம். உலகின் பசிதீர்க்கும் நல்லோர் வேளாளர். இந்த மரபில் மன்னர் அமைச்சர், வீரர், புலவர் பலர் எழுந்தனர். திருநாவுக்கரசர், வாயிலார், சாக்கியர், ஏயர்கோன், இளையான்குடி மாறர், விறல்மிண்டர், சத்தியார், கோட்புலியார், செருத்துணையார் முதலிய நாயன்மார்கள் வேளாளராவார்கள்.

சைவ வேளாளர் என்றால் நமது நாட்டில் பெரு மதிப்புண்டு. பாலாறு பாயும் தொண்டை நாட்டில், புலியூர்க் கோட்டத்தில் குன்றத்தூரில் ''சேக்கிழார்'' என்னும் வேளாண் மரபு வளர்ந்து வந்தது. அது புகழ்பெற்றது. அறிவாளரும், திருவாளரும், அருளாளரும், கலைவாணரும் அந்த மரபில் தோன்றினர். அவர்களுக்கெல்லாம் மாணிக்கம்போல வந்தார் அருண்மொழிப் புலவரான சேக்கிழார். இரவீந்திரநாதரால் டாகூர் மரபே புகழ்பெற்றது போல, அருண்மொழிப் புலவரால் சேக்கிழார் மரபே மலை விளக்குப் போல் நிலவுகிறது. மலையினும் மாண்பு; கடலினும் நன்மை; காரினும் கருணை, கதிரினும் பொலிவு, வானினும் அறிவின் விரிவு கொண்ட, திருவருட் செல்வர் சேக்கிழார்.

**அக்காலம் :**

சேக்கிழார் கல்வி கேள்விகளிலும் சிவநேசத்திலும், அடியார் அன்பிலும் சிறந்து விளங்கினார். அனபாய சோழன் சேக்கிழார் பெருமை யறிந்து அவரைத் தன் முதல் அமைச்சராக்கி, சோழப்பல்லவன் என்ற உயர்ந்த பட்டமளித்தான். சேக்கிழார் அரசனுக்கு அறிவென விளங்கினார். நாட்டிற்குக் கையென உதவினார், உள்ளத்தில் சிவனை வைத்தார். தாம் பிறந்த குன்றத்தூரில் திருமடமும், திருக்கோயிலும் கட்டினார். அவருக்குத் திருநாகேசுவரத்தில் அன்புமிகுதி; தாம் எழுப்பிய கோயிலுக்கும் திருநாகேசுவரம் எனப் பெயரளித்தார். இமயம் முதல் சேது மட்டும் செந்தமிழ்ச் சோழன் புகழும் செல்வாக்கும் நடக்கும்படி செய்தார்; அத்துடன் நாடெங்கும் சைவவொளி பரப்ப முயன்றார். எல்லாம் சரிதான்; ஆனால் அவர் மனத்தில் ஒரு வருத்தம் புகுந்தது; அக்காலத்தவர் சிவன் பெருமையைச் சொல்லி, மெய்வழி காட்டும் பதி நூல்களைப் படிக்காமல், கட்டுக் கதைகளையும் கற்பனை நூல்களையுமே படித்துப் பொழுது போக்கினர். காமக் களியாட்டப் புகழ்ச்சிகளில் களிப்புற்றனர். படித்தும் படிப்பின் பயனை யிழந்தனர்; நெல்லைக் குத்தி யுண்ணாது, உமியைக் குத்தி அலுத்தனர்; பாற் பசுவை விட்டு மலட்டுப் பசுவைக் கறந்தனர்; சோலை வழியை விட்டுக் குழியில் தடுமாறிவிழுந்தனர்; கரும்பைவிட்டுக் கொழுந்தாடையை மென்றனர்; சுடரைவிட்டு மின்மினியில் தீக்காய்ந்தனர்.

குலோத்துங்கச் சோழன், இத்தகைய பயனில் பொழுது போக்கு நூல்களையே கற்றுச் சிவனருள் கூட்டும் நூல்களையும், அடியார் வரலாறுகளையும் புறக்கணித்திருந்தான். சேக்கிழார் அந்த மயக்கத்திலிருந்து அவனை எழுப்பினார்.

சேக்கிழார்: அரசே, சிவகதை இம்மை மறுமைப் பயனளிக்கும். அதைத் தாங்கள் கற்கவேண்டும்.

சோழன்: அஃதென்ன கதை? சொன்னவர் யார்? அது இடையில் வந்ததா? முன்னே இருந்

ததா? அது தவஞ்செய்த அருட்கவிகள் வாக்கா? பாடினால் படித்தால் இனிக்குமா?

சேக்கிழார்: அரசே, சைவத் திருவடியார் அறுபத்துமூவர்; அவர்கள் அனைவரும் சித்தத்தைச் சிவத்திலும், உடலை அவன் தொண்டிலும், உரையை அவன் புகழிலும் வைத்த பேரன்பர். அந்த ''அடியாருக்கு அடியேன்'' என்று சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டத் தொகை பாடினார். ஆனைமுகனருள் பெற்ற நம்பியாண்டார் நம்பி, கலித்துறையந்தாதியால் திருத்தொண்டர் அருட்பெருமைகளையும் அற்புதச் செயல்களையும் சுருக்கமாக விளக்கினார். இராசராச தேவர், சிவலாயத்தேவர் முதலிய மன்னர், சிவனடியார் பெருமையைப் பாராட்டினர்.

சோழன்: அப்படியானால் அறுபத்து மூன்று திருத்தொண்டர் வரலாறுகளையும் தாங்களே விரிவாகச் சொல்ல வேண்டும். கேட்க ஆவலாயிருக்கிறேன்.

சுந்தரர் திருத்தொண்டத் தொகையைப் பாடினார். அதை ஆதாரமாகக் கொண்டு மன்னனுக்குச் சிவனடியார் பெருமையை விரிவாகச் சொன்னார். பிரமசாரியாயிருந்தும், இல்லறத்திலிருந்தும், இல்லறத் துறவிகளாயிருந்தும் ,துறவறந்தாங்கியும், சிவனடி பரவி வீடுபெற்ற அடியார் கதைகளைக் கேட்டு மன்னன் தேவருணவு உண்பது போல் உள மகிழ்ந்தான். ''சிவனடியார் கதை மாந்தரைப் புனிதமாக்கும் அருட்கதை; அடியார் செயல்களையும் சிவனருட் பெருமையையும் விரித்து ஒரு பெரிய புராணமாகச் செய்தருளவேண்டு' மென அனபாயன் அருள்மொழிப் புலவரைக் கேட்டான். அதற்கு வேண்டிய பொருளும் ஈந்தான்.

**பெரியபுராணம் :**

அருள்மொழிச் சேக்கிழார் திருத்தில்லை சென்றார். தில்லையின் எல்லையை மிதித்ததுமே அவர் உடல் சிலிர்த்தது; உளம் சிலிர்த்தது. உயிரில் சிவக் காந்தம் பாய்ந்தது; சிவகங்கை என்னும் திருக்குளத்தில் மூழ்கி, நீறுபூசி, சேக்கிழார் அம்பலவாணர் திருமுன்பு விழுந்து விழுந்து கும்பிட்டு, அன்புக் கண்ணீர் பெருகி நின்றார். ''முப்புரம் எரியத் திருநகை புரிந்த முதல்வா, அப்பர், சுந்தரர், சம்பந்தர் ஆகிய மூன்று திருவடியார்களுக்கு வாக்கும் நோக்கும் அருளி ஆட்கொண்ட அருட்சுடரே, உன் திருவடியார் பெருமையை நான் பாட வந்திருக்கிறேன்; அதற்கு நீயேஅடியெடுத்துக் கொடுக்க வேண்டும்'' என்று இறைஞ்சி நின்றார். பிறைசூடிப்பெருமான், கங்கைமுடிச் சடையன், மங்கைபாகன், பொன்னம்பலக் கூத்தன், அடியார்க்கு அடியான், அம்மையப்பன் அருள் பூத்தான். ''உலகெலாம்'' என்று விண்ணொலி பரந்தது, நிறைந்தது, பாமழை சுரந்தது. சேக்கிழார் உள்ளத்தில் சுழன்று புகுந்தது.

இந்த வாக்கைக் கேட்டுத் தில்லை மூவாயிரவரும், தவராசர்களும், அன்பர்களும் பெருமகிழ்வெய்தி, உச்சிமேற் கை வைத்து, இறைவனருளை வியந்து போற்றினர். சேக்கிழாருக்குக் கூத்தப்பெருமானுடைய திருமாலையும், திருநீறும், பரிவட்டமும் அளித்துச் சிறப்புச் செய்தனர். இறைவனருள் பெற்ற சேக்கிழார் விரதம்பூண்டு திருத்தொண்டர் புராணம் பாட முனைந்தார்.

ஒரு பெருநூல், தவத்தினாலேதான் நிறைவேறும். சேக்கிழார் தமது நூல் நிறைவேற வேண்டித் தவம் புரியலானார்; அப்பர், சுந்தரர், சம்பந்தர், ஓதிய தேவாரப் பாசுரங்களை ஆழ்ந்து ஆய்ந்தார். திருத்தொண்டரைப் போற்றினார், தொண்டர் பிரானான சிவபெருமானைத் தலையாரக் கும்பிட்டார்; சிவக்கோலம் பூண்டார். கவிதை உதித்தது; நூற்றுக் கால்மண்டபத்தில் இருந்து, திருவருளால் வந்த வாக்குகளை எழுதிப் பெரியபுராணத்தை விரைவாக முடித்தார்.

பெரியபுராணம் 4286 திரு விருத்தங்களால் முடிந்தது. அதற்குச் சிவத்தொண்டர் வரலாறு என்று பெயரிடலாம்; அது புண்ணியப் பயன் அளிப்பதிலே பெரிது. ஆதலால் அதைப் பெரியபுராணம் என்றனர் புலவர். பெரியபுராணம் அறுபத்துமூன்று அடியாரின் அருட் பெருமையைச் சொல்லும். சுந்தரமூர்த்தி நாயனாரின் திருத்தொண்டத் தொகை வரிசைப் படியே அடியார்களைப் பாடினார் சேக்கிழார்; ஆதலால் அதுவே நூலுக்கு அட்டவணை போலாகும்.

ஒற்றுமையே பேராற்றல், ஒற்றுமையே ஊற்றுக்கண், ஒற்றுமையே வாழ்வின்பம். அன்றும் இன்றும் என்றும் ஒரு நாட்டுக்கு ஒற்றுமையே வெற்றிக்குயிர். அடியார்கள் பலபான்மையராவர், பலவகுப்பினர், பலதொழிலினர். ஆயினும் அனைவரும் சித்தத்தில் சிவனை வைத்து, ஒரே அருட்குலமாக விளங்கினர். உலகம் ''சமத்துவம், சகோதரத்துவம் ஆன்மநேயம்'' என்று நீண்ட காலமாக முறையிடுகிறது; ஆனால் தனிச் செருக்கும் மனவேறுபாடுமே இன்னும் மனிதரைப் பிடித்து ஆட்டுகின்றன; ஒற்றுமை உதட்டில்தான் இருக்கிறது. பல மாநாடுகள் கூடிக் காகிதத் தீர்மானம் செய்தால் மட்டும் ஒற்றுமை வந்து விடாது; உடனுணவு, கலப்புமணம் இவற்றாலும் ஒற்றுமை நிறைவுறாது. உள்ளத்தில் ஒருமை வர வேண்டும்.

உள்ளொன் றினாலே
உலகொன்றும் ஆதலினால்
உள்ளத்தில் ஒற்றுமையை ஊன்று.

ஒற்றுமை உள்ளத்திலிருந்து மலர வேண்டும்; அனைவருக்கும் உள்ளே பரம்பொருள், அனைத்துயிர்க்கும் உயிரான ஒன்று; அதையுணர்ந்து, அந்த உணர்வில் வாழ்வதே ஒற்றுமையாகும்; அதுவே சிவநேசப் பொதுமையாகும். ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்று திருத்தொண்டர் சிவநேசத்தில் கருத்தை வைத்து உலகில் அன்பு நெறி பரவினர். சிவநேசத்தால் வரும் அருட் செல்வத்தையும்,

இம்மை மறுமைப் பயன்களையும் பெரியபுரா ணம் அள்ளியள்ளித் தருகிறது. மனித வாழ் வைப் புனித மாக்கும் அருள் இலக்கியங்களில் பெரிய புராணம் தலைசிறந்தது. நந்தனை யும் சுந்தரனையும் அப்பரையும் அப்பூதியை யும், அடியார் வரிசையில் வைத்து மதிக்கும் அரும்பெரும் அகலக் காவியம், பெரிய புராண மேயாம்.

**அரங்கேற்றம் :**

அனபாய சோழனுக்கு அதே நினைப்பு; அவன் ,தூதரை அனுப்பிப் புராணம் எந்த மட்டில் உள்ளது என்று நாடோறும் உசாவி வரச் சொன்னான்; பாதி முடிந்தது என்று ஒரு தூதர் சொல்லிக் கொண்டிருந்தார்.இன்று நாளை முடிந்துபோகும் என்றார் மற்றொரு வர். இன்னொரு தூதர் வந்து ''முடிந்தது சிவ கதை'' என்றார். சோழன் துள்ளியெழுந் தான். செய்தி சொன்னவர்க்குப் பொன்னும் மணியும் வழங்கினான். ''அந்திவண்ணனே அடியெடுத்துக் கொடுத்துப் பாடிய தொண்டர் புராணகதை! இதோ விழாவணி செய்து கேட் பேன்'' என்றெழுந்தான். நல்ல வேளையில் சிவ வேதியர் வாழ்த்த, நால்வகைப் படையு டன், தமிழுக்கு வெற்றி முரசொலித்துப் புறப் பட்டான், பொன்னிவள நாடன். தேர்க் கூட்டம், யானைக்கூட்டம், குதிரைக்கூட்டம், காலாட் கூட்டங்கள் நெருங்கி வெற்றிமுழங் கின. சோழன் வரவையறிந்த தில்லைவாழ் அந்தணரும், திருமடத் தலைவர்களும், பெரியா ரும், மாதரும், புராணம் செய்த சேக்கிழாரும், அரசனை எதிர்கொண்டழைத்து, பாராட்டுக் கூறினர். சேக்கிழாரின் சிவக் கோலத்தைக் கண்டதும், அரசனின் கைகள் தலைமேற் குவிந் தன. அருட்கவியை அரசன் அடிபணிந்தான். பிறகு தில்லையந்தணருடன் அன்பரும் தொட ரத் தில்லையம்பலவாணரைப் போற்றினான். தாரை தாரையாகக் கண்ணருவி பாய்ந்தது. மெய் சிலிர்த்தது; உள்ளத்தில் இன்பப் பெருக் கெடுத்தது; மொழி குழறியது. அருளாவேச உயிர்ப்பு விம்மியது; அனபாயச் சோழன் கை கூப்பி நடராசப் பெருமானைத் தெண்டனிட் டுப் பணிந்தான். அச்சமயம் அசரீரி வாக் கெழுந்தது:

''சேக்கிழான் நமது தொண்டர் சீர்பரவ
நாம் மகிழ்ந்துலகம் என்றுநம்
வாக்கினால் அடியெடுத்துரைத்திட
வரைந்து நூல் செய்து முடித்தனன்,
காக்கும் வேல்வளவ, நீ யிதைக்கடிது
கேள்'' எனக் ககன வெளியிலே
ஊக்கமான திருவாக்கெழுந்தது
திருச்சிலம்பொலியும் உடன்எழ.''

கூத்தப்பிரான் சிலம்பொலியும் திருவாக்கும் கேட்ட மன்னனும் மக்களும் உளம் பூரித்தனர். சிவசிந்தையும், சிவப்பற்றும், சிவ அன்பும் நிறைந்த சிவநேயரெல்லாம் சேக்கிழார் வாக் கைப் பருக எட்டுத் திக்கிலிருந்தும் திரளாக வந்து கூடினர். மறையவர் மறை ஓதினர்; மறையையே தமிழில் ஓதிய மூவர் திருப்பதி கங்கள் ஒலித்தன. அன்பர் 'சிவசிவ' என்று திருநாம மோதினர்; எல்லாம் மழையொலி போல் இசைத்தன. சிலர் இறைவனை மல ரால் பூசித்தனர்; சிலர் அன்புடன் அவன் திரு வடியை நேசித்தனர்; சிலர் பிறவா வரமே யாசித்தனர். சிலர் திருமுறைகளை எழுதி வாசித்தனர், கிளிகள்கூடச் சிவபுராண முரைத் தன; பூவைகள் கேட்டன. ''தமிழ்நாடு ஒரு பெரும் அருட்செல்வம் பெற்றது'' என்று புல வரும் மன்னரும் அமைச்சரும் மகிழ்ந்து போற் றினர். தும்புரு நாரதர் பாடினர், அரம்பையர் ஆடினர்; மடந்தையர் மங்கல யாழிசைத்தனர். சாதி வேற்றுமை மறைந்து போனது. சிற்சபை யிலே எல்லாரும் சிவசிந்தைனையிற் கூடிச் சிவ மயம் கண்டனர்.

''எல்லா வுயிர்க்கும் இறைவன் ஒருவனே
எல்லா வுடலும் இறைவ னாலயமே

என்று முழங்கினர். சிவபாதம் சூடினர். தில் லைத் திருநடனக் காட்சியை எல்லாரும் பார்த் தனர். எங்கும் சங்கு, பேரிகை, வீணை, தாளம், காகளம், இடக்கை, சில்லரி, பம்பை, வலம்புரிச் சங்கு முதலிய மங்கள ஒலிக் கருவி கள் முழங்கின. வேள்விப்புகை, குங்கிலியப் புகை, கரும்பாலைப்புகை, மாதர் வீதிகளில் போடும் அகிற்புகைகள் எங்கும் பரவின. பாட சாலை, ஆடகசாலை, நாடகசாலை, அத் தாணி மண்டபம், கழகங்கள், மாடமாளிகை கள், சூளிகைகள் எங்கும் மாலைகளும் தோர ணங்களும் விளங்கின. வீதிகளையெல்லாம் நீர் தெளித்துத் துப்புரவாக்கிக் கோலம் போட்டுத் தோரணம் கட்டி, கொடிகள் கட்டி, மாந்தர் அழகு செய்தனர். புதிய கவிதையைத் தமிழர் இவ்வளவு புனிதச் சிறப்புடன் வரவேற்றனர். திருநெறித் தமிழ் வல்லவர், சிவாகமப்புல வர், ஞானநூல் வல்லவர், வேதப்புலவர், திரு நெறிக்குரிய இலக்கண இலக்கியங்களைக் குறித் தவர், கதை மகாகாவியங்களைப் பேசவல்ல புலவர்கள் எல்லாரும் திருத்தொண்டர் வரலாறு கேட்க ஆர்வமுடனே கூடினர்.

**இன்பக் காட்சி :**

அருள் வள்ளலான இறைவன் திருக்கூத்து நடத்தும் சிற்சபை முன்றிலை, மெழுகிக் கோலமிட்டு, ஆறுகால் பீடம் வைத்து, அதன் மேல் பசும்பட்டு விரித்தனர்; அதன்மேல் தூய வெள்ளையாடை மடித்திட்டனர். தேன்மலர் தூவி நறும்புகை காட்டி, இருக்கை அமைத்து, அதன்மேல் சேக்கிழார் செய்ததிரு முறைநூலை வணக்கமுடன் வைத்தனர்.

''திருத்தொண்டர் புராணத்தை நீரே வாசித்துப் பொருள் அருளிச் செய்வீராக'' என்று சோழ மன்னன் வேண்டினான். சேக் கிழார் தமது அருள்வாக்கைப்படித்துப்பொருள் சொன்னார். ''இதுவே மறைமொழி'' என்று சிவனடியார் போற்றினர். அன்றுமுதல் சோழ ராசன் நடராசப் பெருமானுக்குப் பெரியபூசை நடத்தினான். தில்லையந்தணருக்கு உணவிட் டான்; அடியார் கூட்டத்திற்கு உணவிட்டான். திருமடங்களில் அடியார்களுக்கு விருந்துகள் நடந்தன. ஆடைகள், போர்வைகள், நெல்,

கன்னல், கனிகள், சுவையான காய்கறி, நெய், தயிர், பால், தேன், அடைக்காய், பானகம், நீர், மோர், எல்லாம் அரசன் வண்மையால் உணவிடும் இடங்களுக்கு ஏராளமாகக் கிடைத் தன. தில்லை சிவலோகம் போல விளங்கியது.

சிவனடியார் ஓலைவாரிப் பெரிய புரா ணத்தை எழுதிப் படித்தனர்; வழிபட்டனர், உரைவளம் பருகினர், பின்பற்றி நடந்தனர், சிவப்பயன் துய்த்தனர். வரிக்குவரி பால்ஒழு கும் சொற்சுவையைப் பருகினர். அனபாய சோழன் பெரிய புராணத்தையும் சேக்கிழா ரையும் யானைமேலேற்றிப் பவனிவிழாநடத்தி மகிழ்ந்தான். வாழை, கமுகு, தோரணம், கொடிகள், அணி செய்யும் தெருக்களோடு பவனி நடந்தது. மக்கள் நிறைகுடம் வைத்து, ஆலத்தியெடுத்து, கற்பூரம் காட்டி மலர்தூவி, ''அரஅரமகாதேவா'' என்று ஆரவாரம் செய்த னர். திருவுலா முடிந்து திருச்சிற்றம்பலத்தில் நடராசர் திருவடியிலே அருட்சுவடியைவைத்துச் சேக்கிழார், தொண்டர்சீர் பரவத் தொடங்கி, உலகெலாம் என்று பாடவே ஆயிரம் குரல்கள் உடனிசைத்தன.

நான் பல நாடுகளிலும் இசைக்கருவி களுடன் அப்பர், மணிவாசகர், வள்ளலார் கதை நடத்துவதுண்டு. அப்போது சேக்கிழா ரின் முதற்பாட்டையும் இறுதிப்பாட்டையும் தமிழிலும் ஆங்கிலத்திலும் பாடிக் கற்பூரம் காட்டுவதுண்டு. பல இசைக் கருவிகள் உட னிசைக்கும்; சிலர் நடனமும் ஆடுவர்.

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

All the world adores and feels
The endless splendour that plays
In the cosmic open space
With moon-lit waters shine his locks
Those jingling dancing lotus feet
Let us fervently salute !

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்றுளார் அடியார் அவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி யுலகெலாம்.

Their joys enhance with sublime heart
Who love and serve the Lord in fact
Their fame shall rise and last for ever
Shining with glory everywhere.

—சுத்தானந்த பாரதியார்.

---

# "இந்த யுகத்தே இறைவன் வருவிக்க உற்றேன்"

உலகில் தீமை பெருகி, நன்மை நலியும்போதெல்லாம், இறைவன் திருவவதாரம் செய்கின் றான்; அல்லது தனது அருள்பெற்ற அடியவர்களை அனுப்பி வைக்கின்றான் எனப் பெரியோர்கள் கூறுவர். அம்முறையில் அவ்வப்போது நம் தமிழகத்தில், அருட் சான்றோர்கள் பலர் தோன்றி வந்திருக்கின்றனர். அவர்களுள் ஒருவராக அண்மைக்காலத்தில் தோன்றியருளியவர், திருவருட் பிரகாச வள்ளலார் என்னும் நமது இராமலிங்க அடிகளார் ஆவார்.

இராமலிங்க அடிகள், ''வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபினில் யான் ஒருவன்'' என்று தம்மைக் குறிப்பிட்டுக் கொண்டு இருத்தல் காணலாம். உலகத்தைத் திருத்தி உய்விப்பதற் காக, அந்தந்த யுகம் அல்லது காலத்தில் இறைவன், தன் அருளுலகினின்று அனுப்பிவைக்கும் சான் றோர்களை ''யுக புருஷர்'' என்பர். அம்முறையில் ஆராய்ந்தால், இந்தயுகம் அல்லது காலச் சூழ் நிலைக்கு ஏற்ப, உலகத்தைத் திருத்தி, உய்யும்நெறி காட்டியருள்வதற்காக, இறைவனால் அனுப்பப் பெற்ற அருட்பெருஞ் சான்றோர், இராமலிங்க அடிகளார் ஆவர் என, நாம் துணிந்து கூறலாம். இவ்வுண்மையினை இராமலிங்க அடிகளாரே, தமது திருவருட்பாப் பாடல் ஒன்றில் இனிது எடுத்துக் மொழிந்திருத்தல் காணலாம்.

''அகத்தே கறுத்துப் புறத்துவெளுத் திருந்த வுலக ரனைவரையும்
சகத்தே திருத்திச் சன்மார்க்க சங்கத் தடைவித் திட, அவரும்
இகத்தே பரத்தைப் பெற்று மகிழ்ந் திடுதற் கென்றே, எனை இந்த
உகத்தே இறைவன் வருவிக்க வுற்றேன் அருளைப் பெற்றேனே''

எனவரும் திருவருட்பாப் பாடலில், இக்கருத்தை இராமலிங்க அடிகளார், மிகவும் தெளிவுற எடுத்துக் கூறியிருக்கக் காண்கின்றோம்.

---

# பட்டினத்து அடிகள்

நீதிபதி திரு டி. என். சிங்காரவேலு, B.A., B.L.,

''பொருளும் குலனும் புகழும் திறனும்
அருளும் அறிவும் அனைத்தும்—ஒருவர்
கருதாஎன் பார்க்குங் கறைமிடற்றாய் தொல்லை
மருதாஎன் பார்க்கு வரும்''

—திருவிடைமருதூர் மும்மணிக்கோவை.

சோழ நன்னாட்டின் நடுநாயகமாக விளங்குந் தலம் திருவிடைமருதூர். திருவலஞ்சுழி விநாயகரும், சுவாமிமலை முருகனும், ஆலங்குடி தட்சிணாமூர்த்தியும், திருவாப்பாடி சண்டீசரும், சூரியனார்கோயில் நவகோள்களும், சிதம்பரம் நடராசரும், சீகாழிச் சட்டைநாதரும், திருவாவடுதுறைத் திருநந்திதேவரும், திருவாரூர்ச் சோமாஸ்கந்தரும், சுற்றிலும் அமைந்து விளங்க, இடைமருதில் சோதிமயமாய் மகாலிங்கப்பெருமான் காட்சியளிக்கின்றார்.

அகத்தியர், உரோமசர் போன்ற முனிவர்களும், மாந்தாதா, வரகுணன் போன்ற அரசர்களும் இங்கே வழிபட்டுப் பேறு பெற்றனர். ஆயினும் பட்டினத்தாரும் பத்திரகிரியாரும், இத்தலத்தில் பேறுபெற்றதோடு நீங்கா இடம் பெற்றுவிட்டனர். அவர்களுள் பட்டினத்தடிகளின் வரலாறு சுவையானது.

காவிரிப்பூம்பட்டினத்தில், வணிகர் குலத்திலே, சிவநேசருக்கும், ஞானகலை அம்மையாருக்கும் திருவெண்காட்டு இறைவன் திருவருளால் ஓர் ஆண் மகவு பிறந்தது. அக்குழந்தை திருவெண்காடர் என்ற பெயருடன் வளர்ந்து, இளமையிலேயே முன்பு செய் தவத்தின் ஈட்டத்தால் சிவஞானச் செல்வம் மிகுந்து விளங்கியது. தக்க பருவத்தில் சிவகலை அம்மையைத் திருவெண்காடர் மணங்கொண்டார். காவிரிப்பூம்பட்டினத்தில் வாணிகத்தில் சிறப்புற்று விளங்கிய திருவெண்காடரைப் பட்டினத்துச் செட்டியார் என அனைவரும் போற்றினர். ஆனால் பட்டினத்துச் செட்டியாருக்கோ நெடுங்காலம் புத்திரப்பேறு இல்லாத பெருங்குறை இருந்து வந்தது. ஆட்கொண்டருளும் திருவிடைமருதன், தானே ஒரு குழந்தை வடிவாய், திருக்கோயில் அருகிலுள்ள வில்வ மரத்தடியில் கிடக்க, இறைவன் ஆணைப்படி சிவசருமர் என்னும் கோயிற் குருக்கள் அக் குழந்தையைப் பட்டினத்துச் செட்டியாரிடம் சேர்ப்பிக்க, அவரும் அதனைப் பெருமகிழ்வுடன் ஏற்று வளர்த்து வருவாராயினார். அக்குழந்தை, மருதப்பிரான் என்னும் திருநாமத்துடன் சகல கலைகளிலும் வல்லதாய் வளர்ந்து வரலாயிற்று. வாணிகக் கலையிலும் தேர்ச்சி மிக்க மருதப்பிரான், கடல் கடந்து சென்று, எருமுட்டையையும் அவல்கடலையையும் கொணர்ந்தார். வியப்படைந்த திருவெண்காடர், எருமுட்டையின் நடுவே மாணிக்கக் கற்களும், அவல் கடலைகளுடன் பொன் மணல்களும் கலந்திருப்பதைக் கண்டு பெருமகிழ்வடைந்து, தமதருமைத் திருக்குமாரரைத் தழுவி முத்தமிடக் கிட்டினார். ஆனால் மருதவாணர் மறைந்துவிட்டார்.

திடுக்கிட்ட திருவெண்காடர், மருதப்பிரான் பிரிவாற்றாது வாடினார். அப்பொழுது அவர் மனைவியார், சிறு பெட்டி ஒன்றினைப் புதல்வர் தந்ததாகக் கணவரிடம் கொடுத்தார். அப்பெட்டியைத் திறந்து பார்த்த திருவெண்காடர், அதனுள்ளே காதற்ற ஊசி ஒன்றும், ஓலை நறுக்கு ஒன்றும் இருப்பதைக் கண்டார். அந்த ஓலை நறுக்கில், ''காதற்ற ஊசியும் வாராது காண் நுங்கடை வழிக்கே'' என்று எழுதப்பட்டிருந்தது. பரிபக்குவமடைந்த பட்டினத்துச் செட்டியார் உடனே பட்டினத்து அடிகளானார். அவரது தனித் துறவின் உண்மை நிலையானது,

மாடுண்டு கன்றுண்டு மக்களுண்டு
என்று மகிழ்வதெல்லாங்
கேடுண் டெனும்படி கேட்டுவிட்
டோமினிக் கேண்மனமே

ஓடுண்டு கந்தையுண் டுள்ளே
யெழுத்தைந்து மோதவுண்டு
தோடுண்ட கண்ட னடியார்
நமக்குத் துணையு முண்டே''

என்பது முதலாக அப்போது அவர் பாடிய பாக்களால் புலப்படும்.

பித்தரைப் போன்று திரியத் தலைப்பட்ட பட்டினத்தடிகளது உயர்நிலையை அறியாத அவரது தமக்கையார், தமக்கு மானக்கேடு வந்தது என்று எண்ணி, நஞ்சு கலந்த அப்பத்தைப் பட்டினத்தாருக்கு அளிக்க, அதனை

அறிந்த பட்டினத்தார் ''தன்வினை தன்னைச் சுடும், ஒட்டப்பம் வீட்டைச் சுடும்'' என்று கூறித் தமக்கையார் வீட்டுக் கூரைமேல் எறிய, அவ்வீடும் பிறவும் எரியத் தொடங்கின. பின்னர், ''தங்களைக் கேட்டுப் பிறந்திலம்'' என்றொரு பாடலைப் பாடித் தீயை அவித்தார்.

தம் தாயின் ஈமக் கடன்களைச் செய்து விட்டுப் பட்டினத்தடிகள் திருவிடைமருதூர் அடைந்தார். அப்பொழுதுதான் ''தெய்வத் தாமரை செவ்விதின் மலர்ந்து'' எனத் தொடங்கும் திருவிடைமருதூர் மும்மணிக் கோவையைப் பாடி அருளினார்.

பிறகு தலயாத்திரையை மேற்கொண்ட பட்டினத்தடிகள் உச்சயினி நகரை அடைந்தார். அந்நகர்ப் புறத்தமைந்த ஒரு பிள்ளையார் கோயிலில் தியானம் செய்து கொண்டிருந்தார். அப்போது, அந்நகர மன்னனது வீட்டில் களவாடி, அவ்வழியே சென்ற கள்வர், தமது விருப்பம் நிறைவேறியமைக்கு மகிழ்ந்து ஒரு மணிமாலையை அப்பிள்ளையார்மீது வீசி எறிய, அது பட்டினத்தடிகளின் கழுத்திலே விழுவதாயிற்று. கள்வரைத் தேடிவந்த காவலர், மணிமாலையுடனிருந்த பட்டினத்தடிகளைக் கண்டு, அவரே திருடன் என்றெண்ணி, அரசனிடம் கொண்டு சென்றனர். அரசனும், ஆராயாமல் அடிகளைக் கழுவிலேற்ற ஆணையிட்டான். கழுமரத்தருகில் சென்ற பட்டினத்தார்.

''என்செய லாவதி யாதொன்று
மில்லை யினித்தெய்வமே
உன்செய லேயென் றுணரப்பெற்
றேனிந்த ஊனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்று
மில்லை பிறப்பதற்கு
முன்செய்த தீவினை யோஇங்ங
னேவந்து மூண்டதுவே''

என்று இறைவனை வேண்ட, அக்கழுமரம் தீப்பற்றிச் சாம்பலாயிற்று. அரசன் அதனைக் கண்டு அஞ்சிப் பட்டினத்தடிகளின் அடிமையாயினான். அவ்வரசனே, பத்திரகிரியார் என்று விளங்கிய அடியாரானார். பட்டினத்தடிகளும் பத்திரகிரியாரைத் திருவிடைமருதூர் செல்ல உத்திரவிட்டார்.

சிவதல யாத்திரை முடித்துக் கொண்டு, பட்டினத்தடிகள் திருவிடைமருதூரை அடைந்து கீழைக் கோபுர வாயிலில் இருந்தார். குரு ஆணையின்படி பத்திரகிரியார் மேலைக் கோபுர வாயிலில் இருந்தார். அப்பொழுது ஒரு நாள் ஒரு பிச்சைக்காரன், பட்டினத்தடிகளிடம் சென்று பிச்சை கேட்டான். 'மேலைக் கோபுர வாசலில் ஒரு குடும்பி இருக்கிறான். அவனைப் போய்க் கேள்' என்று பட்டினத்தடிகள் கூற, அவனும் மேலைக் கோபுர வாசலுக்குச் சென்றான். பத்திரிகிரியார் ஓட்டில் பிச்சையேற்று, தாமுண்டு எஞ்சியதை ஒரு நாய்க்கு அளித்து வந்தார். அந்த நாயும் அவருடனே இருந்து வந்தது. பிச்சைக்காரன் பத்திரகிரியாரிடம் வந்து பட்டினத்தடிகள் கூறியவற்றைச் சொன்னான். தம்மைக் குடும்பி என்று பட்டினத்தடிகள் கூறியதற்குக் கையிலிருந்த ஓடும், அருகிலிருந்த நாயுமே காரணம் என்று உணர்ந்த பத்திரகிரியார், தம்கையில் இருந்த திருவோட்டை நாயின்மீது வீசி எறிந்தார். ஓடும் உடைந்தது; நாயும் இறந்தது. மறுபிறவியில் அரசிளங்குமரியாக அந்த நாய் பிறந்ததென்பர். அந்த நாயின் நினைவாக, திருவிடைமருதூர்க் குளக்கரையில் 'நாயடியாள் கோயில்' இன்றும் உள்ளது.

இனி, பத்திரகிரியாருக்கு வீடுபேறளித்த பின் பட்டினத்தடிகள் சீகாழி அடைந்து திருக்கழுமல மும்மணிக்கோவையும், தில்லை சேர்ந்து கோயில் நான்மணி மாலையும், காஞ்சி மாநகர் அடைந்து கச்சித் திருவந்தாதி, திருவேகம்பமாலை, கச்சித் திருவகவல் முதலியவற்றையும் பாடி, பல தலங்களையும் கண்டு வணங்கித் திருவொற்றியூர்த் தொகை, முதல்வன் முறையீடு, அருட்புலம்பல் முதலியன பாடியருளினார்.

ஒற்றியூரின் ஊர்ப்புறத்தே மாடு மேய்க்கும் சிறுவர்களோடு வழக்கமாக விளையாடுவது போன்று விளையாடி, அருகிருந்த ஒரு குழியில் அமர்ந்து, தம்மை மணலுஞ் செடி கொடிகளும் கொண்டு மூடச் செய்து, சிவயோகத்தமர்ந்து சிவலிங்க வடிவமாயினார்.

பதினோராந் திருமுறையில், ஏழு மும்மணிக்கோவைகள் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்றாக விளங்குவது திருவிடைமருதூர் மும்மணிக்கோவை. முப்பது பாடல்கள் கொண்ட இந்த அருள்நூல் மருதிடங்கொண்ட ஒரு தனிக் கடவுளான மத்தியார்ச்சுனத்து மகாலிங்கப் பெருமானின் அருமையிலெளிய வான்கருணைப் பெருந்திறத்தினைப் பலபட விளக்குகின்றது.

இன்றும் திருவிடைமருதூர்க் கீழைக் கோபுரத்தில் பட்டினத்தடிகளும், மேலைக் கோபுரத்தில் பத்திரிகிரியாரும் நமக்குக் காட்சி தருகின்றார்கள். ''எம்மையாளும் இடைமருதன்கழல் செம்மையே தொழுவார் வினை சிந்துமே'' என்று திருநாவுக்கரசு நாயனார். தொழுதவண்ணமே நாமும் வணங்கி, பட்டினத்தார் அருள் நூல்களையும் படித்து இன்புறுவோமாக:

''அன்றென்றும் ஆமென்றும் ஆறு சமயங்கள்
ஒன்றோடொன் றொவ்வா துரைத்தாலும்-என்றும்
ஒருதனையே நோக்குவார் உள்ளத் திருக்கும்
மருதனையே நோக்கி வரும்''

—திருவிடைமருதூர் மும்மணிக்கோவை.

''ஓட்டுடன் பற்றின்றி உலகைத் துறந்தசெல்வப்
பட்டினத்தார் பத்ரகிரி பண்புணர்வ தெந்நாளோ''

—தாயுமானார்.

# திருச்சிற்றம்பலக் கோவையார்

## [கருத்துத் தொகுப்புச் சுருக்கம்]

(முற்றொடர்ச்சி)

### இல்லத்துறைவோர்:

புலவியாகிய திரைகள் வந்து மோத, சிறிய அடியாகிய பூங்கலத்தினைத் தலைமேற் கொள்ளுதலால், அப்புலவி நீங்க, கலவியாகிய கடலுள் துகிலைச் சென்று பற்றி, ஒளி பொருந் திய முத்தத்தின்கண் பொருந்தி, நிறைந்த நீர் ஆகிய மதுவைப் பருகி, தில்லைச் சிற்றம்பலத் தில் நின்ற சிவபெருமானது திருவருளைப் போன்று, ஒருநாளும் தளர்வில்லாத தனங்கள் இத்தலைவனுக்கு எய்துவன ஆயின.

[இப்பாடல் மணிவாசகப் பெருமானின் ஒப்புயர்வற்ற சிறந்த புலமை நலனுக்குச் சீரிய நல்ல திப்பிய எடுத்துக் காட்டாகும். ''எய்தல் எடுத்து உரைத்தல்'' என்னும் அகப்பொருள் இலக்கணத் துறைக்கு ஏற்ப, தலைவன் தலைவியைக் கூடி இன்புற்று மகிழ்ந்தான் என்று கூறற்பாலவற்றைக் கூறு தலும் வேண்டும்; ஆனால் அதே சமயத்தில் தமது தூய புனிதத் தன்மைக்குச் சிறிதும் மாசுமறு ஏற்படாதபடி பார்த்துக் கொள்ளு தலும் வேண்டும். ஆதலின் 'கொள்ளுவதும் மிகை கொளாது, கொடுப்பதும் குறைகொளாது இருவர் மாட்டும், சரிசமமாக நிகழ்தற்குரிய தன்மையின் ஒப்புமைஇயல்பு பற்றிக் காதல் புரிதலை, வாணிபம் புரிதலாக ஒரு சிறிதுமாற்றி மறைத்து, தலைவன் திரைகடலோடி அயல் நாடு சென்று வாணிபம் செய்து பொருளீட்டி னான் என்பதுபோலும் கருத்தமைய, மணி வாசகப் பெருமான் அணிமிகப் பாடுகின்றார்;

''புலவித் திரைபொரச், சீறடிப்
பூங்கலம் சென்னிஉய்ப்பக்,
கலவிக் கடலுட் கலிங்கம்
சென்றெய்திக், கதிர்கொள்முத்தம்
நிலவி, நிறைமது ஆர்ந்து,
அம்பலத்து நின்றோன் அருள்போன்று,
உலவிய லாத்தனம் சென்றுஎய்தல்
ஆயின ஊரனுக்கே''

எனவரும் இப்பாடலில், பொதுவும் சிறப்பு மாகிய இருவகைப் பொருள்கள் அமைந்து விளங்குகின்றன. அவைகள் பின்வருமாறு:

(1) ''புலால் நாற்றம் வீசி, அலைகள் மோத, சிறிய அடிப்பகுதியினை உடைய அழகிய மரக்கலத்தினை, அலைகளின் தலையிற் கொண்டு செலுத்தி, எல்லா ஆறுகளும் பொருள் களும் வந்து கலக்கும் கடலின்கண் சென்று கலிங்க நாட்டினை அடைந்து, முத்து வாணி பம் செய்து, ஈட்டிய பொருள் வளத்தால், தலைவன் மைந்துற்று மயங்கி, மது அருந்தி மகிழா நிற்பவும், சிற்றம்பலவாணரின் திரு வருட்செல்வம் போல, அழியாத பெருஞ் செல் வமானது, தலைவனுக்கு எய்துவதாயிற்று'' என மேல்நோக்காக வாணிகம் பற்றிய ஒரு பொருள் காணக் கிடக்கின்றது..

(2) ''புலவியாகிய அலை வந்து மோத, காதலியின் சிற்றடியாகிய அழகிய அணியினைத் தலைவன் தன் தலையிற் சூடுதலால், அப்புலவி நீங்கியது; அதனால் தலைவன் தலைவியாகிய கடலுள், தலைவியின் துகிலைப் பற்றிச்சென்று, அவளது அழகிய பற்களாகிய ஒளிமிகுந்த முத் தத்தின்கண் பொருந்தி, நிறைந்த நீராகிய மது வைப் பருகி மகிழ்கின்றான். இங்ஙனம் நம் தலைவனுக்குச் சிற்றம்பலவனது திருவருளைப் போன்ற, என்றும் தளர்வில்லாத முலைகள் சென்று பெறலாயின'' என்று, இதன்கண்ணேயே காதல் பற்றிய பிறிதொரு பொருளும் அமைந்து விளங்குகின்றது. இவ்வழகிய இனிய செய்யு ளின் கண், ''புலவித்திரை-சீறடிப்பூங்கலம்-சென்னி உய்த்தல் - கலவிக்கடல் - கலிங்கம் சென்று எய்தல்-கதிர்கள் முத்தம் நிலவல்-நிறைமது ஆர்தல்-உலவியலாத் தனம்'' என் னும் சொற்றொடர்களை, இருபொருள் வளச் சிறப்புடன் மணிவாசகப் பெருமான் அமைத்து வழங்கியிருக்கும் திறன், அறிஞர்களுக்கு ஆராப் பெருவிருந்தாகும்.

தலைவன் தலைவியரது புணர்ச்சியின் கண் உள்ளமும் உடலும் உயிரும் உணர்வும் ஒன்றாகிக் கலத்தலின் அப்புணர்ச்சியைக் ''கல்வி'' என்றும்; அக் கலவி இன்பத்தின் எல் லைக்குக் கரை காணாமையிற் ''கடல்'' என்றும்; கடலில் அலைபோலப் புணர்ச்சியின்கண் முன் நிகழ்வது புலவியாதலின் ''புலவித் திரைபொர'' என்றும்; புலவி நிகழ்ந்தவழி தலைவன் தலை வியைப் பணிந்து நிற்றல் ''மனைவி உயர்வும் கிழவோன் பணிவும், நினையுங் காலைப் புலவி யுள் உரிய'' என்று தொல்காப்பியனார் கூறு தற்கேற்ப இயல்பாகலின், ''சீறடிப் பூங்கலம்

சென்னி உய்ப்ப'' என்றும்; தலைவன் பணி யவே தலைவி புலவி நீங்கப் புணர்ச்சி நிகழு மாகலின், அதனைக் குறிப்பால் ''**கலிங்கம்** சென்றெய்தி'' என்றும்; அதுபோழ்தத்துப் 'பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி வாலெயிறு ஊறிய நீர்' என்று திருவள்ளுவர் கூறுமாறு போல, இதழ்நீர் பருகல் இயல்பாக லின் ''கதிர் கொள் **முத்தம்** நிலவி, நிறைமது ஆர்ந்து'' என்றும்; புணர்ச்சியுட் கொங்கை வருடுபவாகலின் ''**தனம்** சென்றெய்த லாயின'' என்றும்; இங்ஙனம் காமச்சுவை கனியத் தொடுத்துரைப்பினும், கடவுளருளுணர்ச்சியைக் கலந்து புகுத்திப் பெருக்கச் ''சார்ந்தனன் சார்ந்தனன் சங்கிலி மென்தோள் தடமுலை, ஆர்ந்தனன் ஆர்ந்தனன் ஆமாத்தூர் ஐயன் அருளதே'' எனநம்பி ஆரூரர் பாடுமாறு போல, ''அம்பலத் தான் அருள்போன்று'' என்றும்; மணிமொழியார் பாடும் திறம், எத்துனை அணி நலம் உடையதாய்த் திகழ்ந்தொளிர்கின்றது! காமச்சுவை கனிந்ததாயினும், அருளுணர்வு டன் கலந்து சிறந்தொளிரும் அழகிய இனிய இப்பாடல்,

''பவழவாய் பரவை அல்குல்
    என்றிவை பருகும் வேலான்
கவழமார் களிற்றை ஒத்தான்!
    காதலி கரும்பை ஒத்தாள்!
தவழ்மதுக் கோதை மாதர்
    தாமரைப் பூவ தாக,
உமிழ்நகை வேலி னானும்
    ஒண்சிறை மணிவண் டொத்தான்''

R. RAJU,
Dy. Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept.

எனவரும் சிந்தாமணிப் பாடல்போல வெளிப்படையாய் இழிந்து செல்லாமல், எத் துணை மேம்பாடுடையதாக விளங்கித் திகழ் கின்றது!] (365)

**தோழி:** இனிய புன்முறுவலை உடைய தலைவியானவள், தனது சிவந்த இதழ்கள் துடிதுடிப்ப, கருமையான கண்கள் மாறி மாறிப் பிறழ, சிற்றம்பலவனின் திருவருள் பெற்ற அடி யவர்களைப்போல, தலைவனைத் தழுவி முயங்கி, இன்பக் களிப்பில் மூழ்கி மயங்கி நிற் கின்றாள். எனினும், 'தலைவன் இவ்வாறு நமக்கு அருளும் அருளின்திறம், என்றேனும் ஒருநாள் வேறு பிறர்க்கும் ஆகும்போலும்' என்று, ஏதோ ஒன்றனை உள்ளத்திற்கொண்டு, வெம்மைமிக்க நெட்டுயிர்ப்புவிட்டுப் பொருமி அழுது புலம்பி வருந்தினாள்.

[தலைவி தலைவனைப் புணர்ந்து மகிழ்ந்த மாட்சிமைக்கு, அடியவர்கள் இறை வனை அடைந்து எய்தும் இன்பத்தினை உவ மையாக்கி ''சிற்றம்பலத்து எம்மொய்வார் சடையோன் அருளின் முயங்கி மயங்குகின் றாள்'' என்று அருளிச் செய்திருக்கும் திறன், பெரிதும் போற்றுதற்குரியது. இச் செய்யுள், தோழி தனக்குள் கூறிக் கொண்டது; இனி, இதுவன்றோ இவள் புலக்கின்றவாறு எனத் தோழிக்குத் தலைமகன் கூறியது எனினும் ஒக்கும்.] (366)

**அருகிருப்போர்:** இங்கு, மன்னனைப்போ லும் மாட்சிமை உடைய நம் தலைவன் ஒரு வனே இருக்கின்றான்; மென்மைத் தன்மையால் ஒருசிறு நறுமலரையும் கூடத் தாங்கமாட்டாத பாதங்களை உடைய, மானைப்போலும் தலை வியும், தனித்து ஒருத்தியாகவே இருக்கின்றாள். ஆயினும், இப் படுக்கைக் கட்டில் பலரைத் தாங்காது என்று கூறி, படுக்கைக் கட்டிலி னின்று மிகமிக விரைந்து இறங்கி நிற்கின்றாள்; மன்மதன் எய்த மலரம்பை வெகுண்டு, முன் னொரு காலத்தில் தனது நெருப்பாகிய நெற் றிக் கண்ணை விழித்து அவனை அழித்த, சிவ பிரானின் திருச்சிற்றம்பலத்தை வணங்காத பாவிகளாகிய தீயமக்களைப் பொறுக்கலாற் றாதவளும், இளையவளும் ஆகிய நம் தலைவி, இந் நிலைமைக்கண் தன்னுள் நினைத்துக் கொண்டது யாதோ?

[தீய மக்கள் என்று கூறும் சொல்லை யும் பொறுக்காலாற்றாதவள், தீயமக்கள் செய்யும் செயலைச் செய்தாள் என்னும் பொருளில், ''கலரைப் பொறாச் சிறியாள் என்றார்''. 'கலர்' என்னும் சொல், இங்குத் தீயமக்களைக் குறித்து வந்தது. முன்னரும் ''கலராயினர் நினையாத் தில்லை அம்பலத் தான்'' (259) என வந்திருத்தல் காணலாம். தலைவன் தோழியின்பால் ''இவ்வாறு அருள் பிறர்க்கும் ஆகும் என நினைந்து இன்னகை புலந்தாள்'' என்று கூறியது கேட்டுத் தவறாக நினைந்து, நம்மை ஒழிந்து பிறரும் சிலர் உளராகக் கூறினான் போலும் எனக் கொண்டு, தலைவி இவ் அமளி பல ரைப் பொறாது என்று புலவி கொண்டு பள்ளியினின்று எழுந்து நின்றாள் என்று, வாயில்கள் தம்முள் சொல்லியது, இச் செய் யுள்] (367)

**வாயிலோர்:** வில்போல் வளைந்த நெற்றி யையும், வேல்போல் கூரிய கண்களையும் உடைய தலைவியினது, பிரிவாற்றாமையாகிய வாட்டம் அறிந்து, அதனை நீக்குதற்காக விரைந்து வந்தமையால், தில்லைச் சிற்றம்பல வனை இடையறாது சிந்தை செய்யும் அடியவர் களைப் போல வளத்தால் பொலியும், வயல் களை உடைய ஊரன் ஆகிய நம் தலைவன், உண்மையிலேயே நல்ல தகுதியும் வாய்மையும் உடையவன் ஆவான்.

[தில்லைச் சிற்றம்பலத்தை இடைய றாது சிந்தை செய்யும் அடியவர்கள், வளத் தாற் பொலிவர் என்பதையும், அவர்கள் மெய்யே தக்க வாய்மையராகத் திகழ்வர் என்பதையும், இப்பாடலில் நுட்பமாகச் சுட்டியருளிய மணிவாசகரின் ஒட்பம் பெரி தும் மகிழ்ந்து போற்றுதற்குரியது] (368)

**உலகத்தார்:** கருப்பம் முதிர்ந்ததும், துள் ளும் நடையை உடையதுமாகிய பெண் பற வைக்கு, அது முட்டையிடும் கூட்டைப் பின்னு தற்கு விரும்பி, அதன் துணையாகிய ஆண் பறவை, தேன்போலும் இனிய சாறு மிகுந்த கரும்பினது மெல்லிய பூவைக் கொழுதுகின்ற ஊரை உடைய, தலைவனின் திண்ணிய தோள் களை, மான்போலும் பார்வையினை உடைய பரத்தையர்கள் பலரும் கூடி இன்புறும் வண்

ணம், தில்லைச் சிற்றம்பலவனின் திருவருளைப் போன்ற, இப் பொய்கையின்கண் தலைவன் பரத்தையரொடு கூடிப் புனலாடுதலால், தலைவன் தலைவியைப் புலவி கொள்ளுமாறு செய்வான் போலும்!

[பெண்பறவை, சூல் (கருப்பம்) முதிர்தலாற் குறுக அடியிடுதலின், அதனது நடையைத் ''துள்ளும் நடை'' என்றார். ஆண் பறவை தனது சூல் முதிர்ந்த பெண் பறவைக்கு, ஈனில் (முட்டையிடும்கூடு) இழைத்துப் பாதுகாப்பது போல, இத்தலைவனும் தன் தலைவிக்கு வேண்டுவன செய்து வீட்டின்கண் தங்கி இன்புறுகின்றான் என்னும் குறிப்புப் பொருள், ''சூல் முதிர் துள்ளு நடைப் பெடைக்கு, இல் துணைச்சேவல் செய்வான், தேன்முதிர் வேழத்தின் மென் பூக் குதர் செம்மல் ஊரன்'' என்னும் வரிகளில் அமைந்து விளங்குகின்றது.

யாரினும் இனியன் பேரன் பினனே!
உள்ளூர்க் குரீஇத் துள்ளுநடைச் சேவல்
சூல்முதிர் பேடைக்கு ஈனில் இழைஇயர்
தேம்பொதிக் கொண்ட தீங்கழைக் கரும்பின்
நாறா வெண்பூக் கொழுதும்
யாணர் ஊரன் பாணன் வாயே''

எனவரும் குறுந்தொகை என்னும் சங்க இலக்கியத்தின் (85) செய்யுளைத் தழுவி, இப்பாடல் அமைந்துள்ளமை அறிந்து இன்புறுதற்குரியது] (369)

பரத்தையர்: ஒளிவிட்டு விளங்குகின்ற வடிவம், மிக்க பெருஞ்சோதியே என்றுசொல்லுமாறு, நிலைபெற்ற சிற்றம்பலவரின் தில்லை நகரில் வாழ்கின்ற, மலர்போன்ற பாதங்களை உடைய பரத்தைமைப் பெண்காள்! இளமை அழகு வடிவம் முதலியவற்றால், முருகனே என்று சொல்லத்தக்க, நம் தலைவனின் நெடிய தேர், இதோ இங்கே வந்து சேர்ந்துவிட்டது. நுங்களில் இவனைப் புணர்தற்கு முற்பிறப்பிற் பெருந் தவத்தினைச் செய்தவர்கள் யாரோ, அவர்கள் இனி இவனைத் தழுவித் தோய்ந்து மகிழ்வீர்களாக!

[இச் செய்யுள், தலைமகளின் வரவைச் சேரிப் பரத்தையர்க்குப் பாங்காயினார் உணர்த்துவதாக அமைந்தது. இனி, பரத்தையர் சேரிக்கண் தலைமகனது தேர் செலலத் தலைமகள் மனம் நொந்து கூறியது எனவும் கொள்ளலாம்] (370)

பரத்தையரின் சேடியர்: தேவர் உலகத்து மகளிரைப் போல வந்து, புனலாட்டு விழாவின்கண் கூடியுள்ள பரத்தைமைப் பெண்களே! நாமெல்லாம் இங்குக் கூடியிருக்கவும், அரம்பை மேனகை ஊர்வசி திலோத்தமை என்னும் தேவருலகத்துப் பெண்களின் தலைவியர்போல, இற்பரத்தையானவள், இதோவந்து நம் தலைவனை அணுகா நிற்கின்றாள். இவள் நம் தலைவனைத் தன்பால் கவர்ந்து மயக்கி, நம்மிடமிருந்து தலைவனைப் பிரித்துக் கொள்ளினும் கொள்வாள். ஆதலின், பிரமனின் தலையினை நகத்தாற் களைந்த சிவபிரானின், சிற்றம்பலத்தை வழுத்தி வணங்காத முப்புர அசுரர்களின் மனைவியரைப்போல, நாமும் பின்னர் வருந்த நேரிடாதபடி, பொலிவுமிக்க நம் தலைவரை நமக்கே யுரியராகும்படி, முன்னதாக விழிப்புடனிருந்து காத்துக் கொள்வோமாக!

[தலைவனை இற்பரத்தை கவர்ந்து கொள்வாளாயின், பரத்தையர்களுக்கு அதனால் நேரக்கூடிய வருத்தத்திற்குத் திரிபுர அசுரரின் மனைவியர் எய்திய வருத்தத்தினை உவமையாக்கி, ''தில்லைச் சிற்றம்பலம் வழுத்தாப் புரமங்கையரின் நையாது ஐயகாத்தும் நம் பொற் பரையே'' என்று அருளிச் செய்த மணிவாசகரின் கவிதைக் கற்பனை மாட்சிமை பெரிதும் போற்றுதற்குரியது] (371)

பரத்தை: முப்புரத்தை எரித்த சிற்றம்பலத்தானுடைய அருளைப் பெற்றவர்களைப் போலச் செம்மாந்து, யான் தலைவனை நெருங்கித் தழுவி அணைந்து மகிழ்வேன்; மற்றும் ஒளி பொருந்திய புன்முறுவலை உடைய பிற பரத்தையர்கள்பால், தலைவனது அருள் செல்லாதபடி யான் தடுத்து நிறுத்துவேன். அங்ஙனம் நிறுத்தாவிடில், யானும் தலைவனைப் பிரிந்து வருந்திப் புலம்புகின்ற தலைவியைப் போன்றவளே ஆவேன். (372)

தலைவி: எனக்குத் தங்கையாக ஒரு பரத்தை தோன்றினாள். அதனால் தனது அழகிய கையின்கண் சிறிய மானை ஏந்திய சிற்றம்பலத்தானின், தில்லைக்கண் உள்ள, தலைவனுடைய திண்ணிய தோள்களைப் பெற்று மகிழ்தலால் உண்டாகிய பெருமையும், அவனோடு ஏற்பட்ட மிக நெருங்கிய தொடர்புகளும், இறுமாப்பும் என்பால் அடங்கி நீங்கி ஒழிந்தன; என்னுடைய இணை முலைகளும் நிமிர்ந்து நிற்றல் ஒழிந்து, தலைசாய்ந்து அடங்கி நிற்பனவாயின. எனக்கு ஒரு தங்கை ஏற்பட்டாற்போல, இப் பரத்தைக்கும், இனி ஒரு தங்கை ஏற்படுவாளாயின், இப்பரத்தையாகிய என்னுடைய தங்கையும், தன்னுடைய இறுமாப்பு அடங்கிப் பணிந்து நிற்பாள். இங்ஙனம் பின்னர்த் தனக்கு நேர இருப்பது அறியாமையால், இப்பரத்தை தன்னைத் தானே புகழ்ந்து மகிழ்ந்து செருக்குறுகின்றாள். (373)

['எங்கை' என்றது என்தங்கை என்றவாறாயினும், 'என் எங்கை' என இயைபு மிகுதி கூறி, தலைவி பரத்தையை நகையாடினாள்]

தோழி: தீயின்கண் நின்று நடனம் புரியும் சிவபிரானின் சிற்றம்பலத்தைப் போன்ற சிறந்த தலைவியானவள், தலையில் சூடப்படாமல் ஒரு பளிங்குச்செப்பின்கண் இட்டு அடைத்து வைக்கப்பெற்றுத் தனியே வைகுகின்ற ஓர் அழகிய நறுமலரைப் போல வாடி வதங்கி மெலிகின்றாள். ஆயினும் இதனைப் பிறர் அறியின், தில்லை ஊரனாகிய தலைவனுக்கு, இன்று இது ஒரு தகுதியற்ற பழிச் செயலாகும் எனக்கருதி நாணமுற்று, தன்னுடைய அளவற்ற வருத்தத்தை என்னிடத்தும் கூட வெளியிடாமல், இவ்வாறு மனத்துள் அடக்கிக் கொண்டு மறைத்து

ஒழுகுகின்றாள். இதனால் இத் தலைவியின் கற்பின் பொற்பு, நமக்குத் தாயாகும் இயல்பை உடையதாகத் திகழ்கின்றது. இத் தலைவியின் அச்சம் நாணம் மடம் பயிர்ப்பு முதலாகிய இயல்புகள், மிகவும் ஒப்புயர்வற்று நல்லனவாய்ச் சிறந்து விளங்குகின்றன. (374)

**தோழி:** அறல் மணல் போல வளைந்து நெளிந்த அழகிய கூந்தலை உடைய நல்ல தலைவியே! இராப்பொழுதின்கண் இரை தேடும் பொருட்டு, எல்லாத் திசைகளுக்கும் சென்று பறக்கின்ற இயல்பினை உடைய வௌவாற் பறவைகள், இரை தேடுகின்ற காலம் அல்லாமையால், பகற்பொழுதின்கண் தங்கி உறைகின்ற பெரிய ஆலமரம் போன்று, தலைவனின் துணையில்லாமல் இராப்பொழுதில் தனியே வருந்திக் கொண்டிருக்கின்ற நம்முடைய நிலைமையினை, விறலியும் பாணனும் அறிந்து கொள்ளவில்லை போலும். அறியாமையினால்தான், இவர்கள் நம்முடைய தலைவனாகிய வேந்தனுக்குத் துயில் எழும் மங்கலம் (திருப்பள்ளி எழுச்சி) பாடுவதற்காகத் தில்லை இறைவன் அமைத்த சிறந்த யாழினை எடுத்துக் கொண்டு வந்து, இங்கே நிற்கின்றார்கள். இவர்கள் நம்மை எள்ளி நகையாட வந்தார்கள் அல்லர். தலைவன் இரவிற் பரத்தையர் பாற் செல்லுதலை அறியாமையால்தான், இவர்கள் தலைவனுக்குத் திருப்பள்ளி எழுச்சி பாடப் போந்துள்ளனர். ஆதலின் தலைவியே! இவர்கள்பால் நீ சினம் ஏதும் கொள்ளுதல் வேண்டா? (375)

**தோழி:** தில்லைச் சிற்றம்பலத்தின்கண், தனது சடைமுடியிற் கொக்கிறகினை அணிந்துகொண்டு நடனம் புரிகின்ற சிவபிரானின், தெற்கேயுள்ள கூடல் என்னும் மதுரை மாநகர் போன்று, அழகிய சிறந்த தலைவியானவள், அக்குமணி போலும் வெண்மையான அழகிய தனது பற்கள் தோன்றுமாறு புன்முறுவல் புரியாமல் வருந்தும்படி, சிவந்த வேற்படையை ஏந்திய வீரனும், ஒப்பற்ற வள்ளலுமாகிய நம் தலைவன், பரத்தையர்பாற் பயின்று கலந்து காதலித்து ஒழுகுகின்றான். அதனால் முன்பு தக்க சான்றோனாக இருந்தவன், இன்று தகுதியற்ற புல்லியோனாக மாறி உள்ளான். அந்தோ! இது பெரிதும் வருந்துதற்குரியது. (376)

**அருகிருப்பவர்:** அடியவர்களின் உடலில் என்புகள் தோறும் அமிழ்தம் தோன்றி ஊறிப் பெருகும்படி, அம்பலத்தின் கண்ணே நின்று ஆடுகின்ற சிவபெருமானின், திருச்சுழியல் என்னும் சிறந்த பெருந்தலத்தின்கண், தன்னுடைய பெண்பறவை வருந்தும்படி, ஒழுக்கத் தகுதி கெட்டு, அன்னப் பறவையானது, வலிமையான சலஞ்சலம் என்னும் பெண் சங்கின் மேல் கிடந்து உறங்குகின்றது. அங்ஙனம் அன்னங்கள் உறங்குகின்ற வயல்களை உடைய தலைவன், தன்பால் பேரன்புமிக்க நெஞ்சத்தை உடைய இந்தச் சிறந்த தலைவியானவள் வருந்தி மயங்கித் துன்புறவும், இது குறித்துச் சிறிதும் இரக்கமும் பரிவும் கொள்ளாதிருக்கின்றான். அதனால் இவன் தகுதியற்றவனேயாவான்.

[தலைவியை 'அன்புடை நெஞ்சத்தவள்' என்றதனால், பரத்தையரது அன்பற்ற புன்தன்மை புலப்படுத்துப் பெற்றது. சலஞ்சலத்தை 'வன்பெடை' என்றதனால், அதனையொத்த பரத்தையரின் அன்பற்ற வன்தன்மை விளங்கும். அன்னமானது, தன் பெண் பறவை வருந்தும்படி சலஞ்சலத்தின் மேல் துயிலும் என்றது, தலைவன் தலைவி வருந்தும்படி பரத்தையர் இல்லம் சென்று தங்கி உறங்குகின்றான் என்னும் உள்ளுறை உவமைப் பொருளை உட்கொண்டுள்ளது] (377)

**தலைவி:** இறைவன் ஒருவன் உளன் என்று உட்கொண்டு, அஞ்சி ஒழுகாத கொடிய அசுரர்களின் திரிபுரங்களை அழித்த, சிற்றம்பலவரின் அழகிய குளிர்ந்த கயிலாய மலையின்கண், மேகங்கள் படிகின்ற குறிஞ்சி நிலத்தில் உள்ள நம் தினைப்புனத்தின்கண், அந்நாளில் நம் அன்பைப் பெற விரும்பி, மாந்தழையினை ஏந்தி வந்தவராகிய நம் தலைவர், இன்று நனவில் என் நெஞ்சத்தின்கண் இருக்கின்றார்; யான் தடுத்தாலும் அவ்விடத்தில் இருந்து நீங்கிச் செல்லமாட்டார்; எனக்குத் துயில் உண்டாகுமாயின், கனவின்கண் வந்து இலவம் பஞ்சால் அமைந்த படுக்கையின்கண், எனது மார்பகத்தினின்று பிரியாமல் உடனுறைந்து தங்குவார். அத்தகைய அன்பும் பெருந்தகைமையும் மிக்க நம் தலைவரை, நீ கொடுமை கூறுவது எற்றுக்கு? (378)

**தலைவன்:** தெளிந்த நல்ல நீரையுடைய கங்கைநதி தங்கும் சடையை உடைய சிற்றம்பலவனும், வஞ்சகம் நுழையும் நெஞ்சத்தை உடைய பாவிகள் ஒருநாளும் காண்பதற்கு அரியவனும், ஆகிய சிவபிரான் உறைகின்ற சீர்காழி என்னும் தலத்தைப் போன்று, சிறந்த அழகிய தலைவியானவள், யான் தன்னை நினையாமல் வேறு ஒன்றின்மேல் உள்ளத்தைச் செலுத்துகின்றபோதும், தான் என்னை நினைந்து, ஒருகாலும் என்னைவிட்டுப் பிரியாமல், என் உள்ளத்திற் புகுந்து தங்கி நிலை பெற்று நிற்கின்றாள். அன்றியும், யான் தன்னை நினையுந்தோறும், உயர்ந்த மேட்டு நிலத்தினின்றும் இழிந்து, பள்ளத்தில் விரைந்து புகுகின்ற வெள்ளத்தைப்போன்று, தடுப்பதற்கு அரியவளாய், என் உள்ளத்தின்கண் விரைந்து ஓடிவந்து சேருகின்ற இயல்பு உடையவளாகத் திகழ்கின்றாள். அதனால் அத்தகைய அழகிய இனிய தலைவியை விட்டுப் பிரிந்து, யான் இங்கு இப் பரத்தையர் சூழலில் தங்கி இருத்தல், எனக்கு மிகவும் கடினமாகவே உள்ளது. குணநலங்களில் சிறந்துயர்ந்த தலைவியின்பால், யான் இப்போதே விரைந்து சென்று சேர்தல் வேண்டும். (379)

—தொடரும்.

—ஆசிரியர்.

# சமய உணர்வு

நீதிபதி திரு ஆர். சதாசிவம், B.A., M.L.

ஒரு மனிதனின் சமயம் என்பது, அவனைப் பொறுத்து அமையும் அடிப்படைப் பண்பாகும். அவன் சமயம் என்று எதைக் கூறுகின்றானோ, எதைப் பாவிக்கின்றானோ, அதுவன்று அவனது சமயம். அறிவுக்கு அப்பாற்பட்ட இப் பிரபஞ்சத்திற்கும் அவனுக்கும் உற்ற உறவு பற்றியும், அது குறித்துத் தன் கடமை-குறிக்கோள்-இவை பற்றியும், அவன் உள்ளத்தின் ஆழத்தில் எதை நம்புகிறானோ, அதுவே அவனது சமயம் ஆகின்றது.

ஆறறிவு படைத்த மனிதன் ஆண்டவனைத் தேடி நாடுவதே சமயம் என்பது. இறைவனை நோக்கி ஏங்கும் உள்ளப் பண்பு, ஏங்கி நிற்கும் உள்ளத்திற்கு இறைவன் காட்டும் பாலிப்பு-இவையே எல்லாச் சமயங்களின் சாரமாகும். ஆண்டவனை அடைய வேண்டும் என்ற தாபம், மக்களின் மனத்திலே அகலாத வகையில் அமைந்ததொரு குணமாகும். போர், வெள்ளம் போன்ற பெரிய துன்பங்கள் நேரும் பொழுதுதான் இறைவன்மீதுள்ள நாட்டம் அதிகமாகிறது. ''செல்வம் மிகச் சேர்ந்தால் மனிதன் சீரழிந்து போகிறான்'' என்று கவிஞர் கோல்ட்ஸ்மித் கூறுவது இந்த உண்மையைத் தான்.

நாட்டிலே அமைதி நிலவும் காலத்தில், இடர்ப்பாடு ஏதுமின்றிப் பொதுவாழ்வு நடக்கும் காலத்தில், மக்களுக்குப் பெரிய கவலை இல்லாது சோம்பியுள்ள காலத்தில், நாத்திகம் பரவுகிறது என்று பேரறிஞர் ஒருவர் கூறியுள்ளார். நாத்திகம் பரவியபின் நாட்டின் குலைவு தோன்றுகிறது. இன்னல்களும், இடர்ப்பாடுகளும் நிறைந்த காலத்திலே தான் தந்நல மறுப்பும் தியாகமும் மக்களிடையே தோன்றுகின்றன. இக்காலத்தில்தான் அய்ம்புல இன்பத்திற்கு அப்பாற்பட்டு உயர்ந்தது ஒன்று உண்டென்ற உணர்வைப் பெறுகிறான் மனிதன்; சுகபோகங்களைத் துறக்கின்றான்; விலங்கினத்தினின்றும் தான் வேறுபட்டவன் என்பதை உணர்ந்து உயருகின்றான். எனவேதான், மனிதனின் இறை நாட்டமும் இறையின் கருணையும் எல்லாச் சமயங்களின் அடிப்படையாக அமைகின்றன.

மனிதனின் முழு வாழ்வையும் அளாவி நிற்பதே உண்மையான சமய நெறியாகும். சமய உணர்வும், சமயக் கொள்கைகளும், சமயச் செயல்களும், ஒரு நாட்டு மக்களிடம் காணப்பட்டால்தான், அந்நாட்டைச் சமய உணர்வுள்ள நாடு என்று நாம் கூறமுடியும். புலனடக்கம், பகட்டு இன்பத்தை விழையாமை போன்ற ஒழுக்க நெறியை மனிதகுலத்தின் மாண்புமிக்க சமயத் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர். ஒருவன் உடலுக்கு அடிமையாகி விடக்கூடாது, மனத்தையும் ஆன்மாவையும் உடல் அடக்கிவிடல் கூடாது என்பதையும் போதித்துள்ளனர். முற்காலத்தில் ஒரு நாட்டின் வாழ்வு சமயநெறியால் வளர்க்கப்பட்டது. கோட்பாடுகளை மட்டுமின்றி அன்றாட நடத்தைக்குரிய நெறிமுறைகளையும் ஒவ்வொரு மதமும் போதித்தது. மனிதனுடைய அன்றாட வாழ்வும் சமயமும் ஒன்றி நின்றன. மோஸஸ் எழுதிய பழைய விதிமுறைகளும் இதைப் புலப்படுத்தின. ஒழுக்க விதிகளுக்கும் மற்ற வாழ்க்கை விதிகளுக்கும் அன்று வேறுபாடு இல்லை.

சென்ற நூற்றாண்டில் விஞ்ஞான அறிவு முன்னேற்றம் அடைந்தது. அந்த விஞ்ஞானம் புலன்வழி இன்பத்திற்கு வழி செய்தது. ஒவ்வொரு மதத்திலுமுள்ள அறிவியல் கருத்துக்களை மனிதன் தனது விஞ்ஞான அறிவு கொண்டு ஆராய்ந்தான். எனவே, நம்பிக்கையின் அடிப்படையில் மதம் வளருவதற்கு வழியில்லை. பேராசிரியர் ஹக்ஸ்லி போன்ற பெரிய விஞ்ஞானிகள் சமயத்தைச் சந்தேகக் கண்கொண்டு பார்த்தனர். அவர்கள் உலோகாயதவாதிகள் என அழைக்கப்பட்டனர். ஆங்கிலத்தில் 'Agnostics என்றால், ஞானமில்லாதவர்கள் என்று பொருள். குறிப்பிட்ட பொருள்பற்றி ஞானமில்லாதவர்கள் என்பது சரியான பொருளாகும். ஆனால் சமயத்தைப் பற்றிச் சந்தேகம் தெரிவிப்பவர்கள் ஞானமில்லாதவர்கள் என்று கூறுவது பொருந்தாது. மனிதன் இருவழிகளில் ஞானம் பெறுகின்றான் என்று, பேராசிரியர் ஹக்ஸி கூறுகிறார். புலனுக்குத் தெரியும் வெளித் தோற்றங்களிலிருந்து புலன்வழி அறிவு பெறுதல் ஒருவகை. அத்தோற்றங்களைக் காரண காரியத்துடன் ஆராய்ந்து முடிவு காணுதல் வேறொரு வகை. புலன்களால் கண்டு உணருதல், ஆராய்ந்து முடிவு காணுதல் என்ற இருவழிகளில், ஞானத்தை மனிதன் பெறுவதாக அவர் கூறியுள்ளார். புலன்களுக்கு அப்பாற்பட்டதை வெறும் அறிவால் மட்டும் தெரிதல் இயலாது. ஆன்மிக ஞானத்தை ஆன்மிக வழியிலேயே உணரவேண்டும். அறிவுக்கும் புலன்களுக்கும் அப்பாற்பட்டது ஆன்மிக ஞானம் என்றும், அது எங்கும் என்றும் உள்ளது என்றும், எல்லாச் சமயங்களும் ஒருமித்துக் கூறுகின்றன.

மனிதனின் மனச் சான்றிலே மாறாது பரவி நிற்கும் பண்பு சமய உணர்வுதான் என்

பதை வரலாறும், ஞானிகளின் வாழ்க்கைகளும் நமக்குப் போதிக்கின்றன. மனச்சான்றின் அடிப்படையிலேயே நமது ஞானம் அமைகின்றது. மனச்சான்று வழிவரும் ஞானமே ஆழமாகவும் அழுத்தமாகவும் இருப்பதாகும். நம் புலன்கள் நம்மை ஏமாற்றிவிடலாம். ஆதவன் கிழக்கில் தோன்றி மேற்கில் மறைவதாக நம் புலன்களுக்குத் தோன்றுகிறது. ஆனால், உண்மையில் அஃது அவ்வாறு இல்லை; நாம் நம் முடிவுகளை எடுக்கிறோம். எனினும் அம்முடிவுகள் தவறுதலாகப் போவதும் உண்டு. ஆனால், உலகத்திலுள்ள பெரிய ஞானிகளின் வாழ்க்கையிலிருந்து நாம் அறிந்து கொள்வது, சமய உணர்வு உலகெங்கிலும் பரவியிருந்தது, இன்றும் இருக்கிறது என்பதுதான்.

நமது நாட்டின் தந்தையான காந்தியடிகளின் புனித உரை ஒன்று, இசைத்தட்டில் பதிவாகியுள்ளது. எல்லாப் பொருள்களிலும் நிறைந்து நிற்கும் வர்ணிக்க முடியாத அற்புத ஆற்றல் ஒன்றை அவர் உணருவதாகவும், அவ்வாற்றலை அவர் கண்ணால் காண முடியாவிட்டாலும், அஃது உண்மையானது என்றும், அவ்வுரையிலே காந்தி அடிகள் கூறியுள்ளார். அவருடைய சமய மனச்சான்றுதான் இந்த உண்மையை அவருக்கு உணர்த்தியது. கண்ணுக்குப் புலனாகாத இந்த ஆற்றலை நாம் உணரலாம். ஆனால் மெய்ப்பிக்க முடியாது. ஏனெனில், புலன்களுக்குத் தெரியும் மற்ற பொருள்களினின்றும் இந்த ஆற்றல் மாறுபட்டது. அது புலன்களுக்கு அப்பாற்பட்டது. தம்மைச் சுற்றியுள்ள எல்லாப் பொருள்களும் மாறுகின்றன, மடிகின்றன என்பதைக் காந்தியடிகள் கண்டார். ஆனால், இந்த மாற்றங்களின் அடிப்படையிலே மாற்றமில்லாத ஓர் ஆற்றல், படைத்துக் காத்து நிற்கும் ஆற்றல் ,அமைந்திருப்பதை அவர் உணர்ந்தார். இந்த அறிவு உணர்த்தும் ஆற்றலைக் கடவுள் என அவர் கூறினார்; அதை நன்மையின் வடிவாகக் கண்டார். மரணத்தின் மத்தியில் வாழ்வும், பொய்யின் நடுவில் மெய்யும், இருளின் இடையில் ஒளியும் தொடர்ந்து நிற்பதைக் காந்தியடிகள் கண்டார். எனவே, கடவுளை உயிராக, உண்மையாக, ஒளியாக அவர் கொண்டார். அன்பே கடவுள் என்று அவர் அறிவித்தார்.

நம்பிக்கையை வைத்துத்தான் நாம் பெரும்பாலும் உண்மையை உணர முடியும். சமயத்தின்மீது ஆழ்ந்த நம்பிக்கை கொண்டோர்கள் உண்மையிலேயே புண்ணியம் செய்தவர்கள். மெய் உணர்த்தாத வெறும் கல்வி, சமய நம்பிக்கைக்கும் ஞானத்திற்கும் தடையாகவே உள்ளது. அதனால்தான் ஞானி தாயுமானவர் 'கல்லாதவரே நல்லவர்கள், நல்லவர்கள்' என்று பாடியுள்ளார். ''கல்வியால் எவரையும் வெல்லலாம், ஆனால் இன்பமான மேலுலகம் கிடைக்குமா?'' என்றும் அவர் வினவுகின்றார்.

இன்று நமக்கு வேண்டியதெல்லாம் நடைமுறைக்கு உகந்த சமயமாகும். அத்தகைய சமயத்தால் இந்த உலகு நல்லுலகு ஆகவேண்டும். இந்த எண்ணத்தைக் கொண்டுதான், ''பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், உற்பத்திச் சாலைகளிலும் நான் கோவில்களையே காணுகின்றேன்'' என்று ஜவஹர்லால் நேரு கூறினார். கோயில்களிலே கூட்டங்கள் குறையாது உள்ளன. ஆனாலும், கூரிய அறிவு படைத்த பலரும் மனித இனத்தின் நன்மைக்காக அரிய தியாகங்களைச் செய்து கொண்டிருக்கின்றனர். ஆன்மிக ஆற்றல் தங்களிடமுள்ளதாக அவர்கள் கூறுவதில்லை. அவர்கள் எடுத்த கடமையைத் திறம்படச் செய்வதே அவர்களது ஆன்மிகம் ஆகிறது. வழிபாடும், சடங்குகளும் ஓரளவுதான் அவர்களுக்குப் பயன் உள்ளனவாகின்றது. உழைக்கும் பேற்றினையே அவர்கள் வாழ்விலே பெரிதாகக் கருதுகின்றனர். அவர்களைக் கர்ம யோகிகள் என்று நாம் கூறலாம். பள்ளிகளிலும், சேரிகளிலும், வைத்தியசாலைகளிலும், கைத்தொழிற்சாலைகளிலும் அவர்கள் அயராது உழைக்கின்றனர்.

லாங்பெல்லோ (H. W. Longfellow) என்ற ஆங்கிலக் கவியின் கவிதையோடு நான் இக்கட்டுரையை முடிக்கின்றேன்:

''உடலிலே ஒன்றுமின்றி உலகிற்கு வந்தோம்;
உழைப்பும் உளைச்சலுமே வாழ்விலே கண்டோம்;
உலகைவிட்டுச்செல்வதெங்குஎன்பதைநாமறி
யோம்;
உயர்ந்த வாழ்வு இங்கெனில், உயர்ந்த வாழ்வு
அங்குண்டு என்பதை நாம் அறிவோம்''

# இந்து மதத்தின் பொதுமை

நமது இந்தியப் பெருநாட்டில், பலதிற மக்களும், பல்வேறு மொழிகளும், பல்வேறு நடையுடை பாவனைகளும், பல்வேறு பழக்க வழக்கப் பண்பாடுகளும், ஆங்காங்கே அமைந்து விளங்கக் காண்கிறோம். ஆயினும், இப் பலதிற வேறுபாடுகளுக்கும் இடையே, ஒரு பெரும் பொதுத் தன்மையும் ஊடுருவி நின்று, பொலிந்து திகழ்தல் காணப்படுகின்றது. இந்திய மக்களின் புறக் கோலங்களும், பிறவும் வேறுபட்டாலும், அவர்கள் அனைவருடைய உள்ளப்போக்கும் உணர்வும், பெரும்பாலும் ஒரே தன்மை உடையனவாக விளங்குகின்றன. இமயம் முதல் குமரி வரையிலுள்ள எல்லா மக்களும், பற்பல துறைகளில், மிகவும் வியக்கத்தக்க நிலையில், ஒத்த மனப்பான்மையும் உணர்வும் உடையவராக இருக்கின்றனர். கடவுள் நம்பிக்கையிலும், விக்கிரக வழிபாடுகள் புரிவதிலும், பல்வேறு சடங்குகள் இயற்றுவதிலும், பாவம் புண்ணியம் ஊழ்வினை பிறப்பு இறப்பு மறுபிறப்பு சுவர்க்கம் நரகம் என்பன பற்றிய கொள்கைகளிலும், இந்திய மக்கள் அனைவருக்குமிடையே ஒத்த கருத்தே நிலவி வருகின்றன. இவைகள் யாவும் இந்திய மக்களின் அடிப்படைப் பொதுக் கருத்துக்களாக அமைந்திருக்கக் காண்கின்றோம். சார்வாகம் சமணம் பௌத்தம் சைவம் வைணவம் சாக்தம் சீக்கியம் முதலிய சமயங்களும், கேவலாத்துவிதம் விசிட்டாத்துவிதம் துவிதம் சுத்தாத்துவிதம் முதலிய, எத்துணையோ பற்பல தத்துவக் கொள்கைகளும், நமது இந்தியப் பெருநாட்டில் விளங்கி வருகின்றன. ஆயினும், அவைகள் அனைத்தையும் தனக்குள் ஏற்றுக் தழுவிக்கொண்டு விளங்கிவரும் சிறந்த பொதுமைப் பெருநெறியே, இந்து மதம் ஆகும் என நாம் சுருக்கமாக் கூறலாம்.

—ந. ரா. முருகவேள்.

# "இனியன் தன் அடைந்தார்க்கு இடைமருதன்"

பேராசிரியர் டாக்டர் திரு. வ. ஆ. தேவசேனாபதி, M.A., Ph.D.

திருவிடைமருதூரில் கோயில் கொண்டிருக்கும் இறைவனை மூவர் முதலிகளும் பாடி வணங்கியுள்ளனர். அவர்களுடைய அருள்வாக்கில் சிலவற்றை நினைவு கூர்வது நமக்குப் பெருநலம் பயக்கும்.

நம்மைவிட நமக்கு இனியர் வேறெவருமிலர் என்னும் நிலையில் நம்மில் பெரும்பாலோரின் வாழ்க்கை கழிகிறது. இத்தகைய ஆழ்ந்த தன்னலம் ,மனைவி, மக்கள், உற்றார், உறவினர், நம்நாட்டவர், நம்மொழியினர் என்பவர் மீது அன்பு செலுத்தும்போது ஓரளவு குறைகிறது. நம்முடன் தொடர்புடையவர்மீது மட்டுமின்றி அனைத்து உயிர்கள்மீதும் அன்பு பரவும்போது தன்னல விருப்பம் மிகக் குறைந்த நிலையில் உள்ளது. இறுதியாக அனைத்தையும் படைத்துக் காத்துத் தன் அருளுக்கு உரிமையாக்கும் இறைவன்மீது அன்பைச் செலுத்தும்போது தன்னல விருப்பமும், தன்முனைப்பும் மறைந்தொழிகின்றன. நமக்குள்ளும் புறம்பும் உள்ள இறைவனை நம் வாழ்க்கையின் மையமாகக் கொண்டால், நம் வாழ்க்கை வளமுறுவதோடு, பிறர் வாழ்க்கையை வளமுறச் செய்யும் ஆற்றலும் பிறக்கும். இவ்வுண்மைகளை நினைவு படுத்தும் வகையில்,

> ''என்னி லாரும் எனக்கினி யாரில்லை
> என்னி லும்இனி யானொரு வன்உளன்
> என்னு ளேஉயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்
> கென்னு ளேநிற்கும் இன்னம்ப ரீசனே''

என்று அப்பர் பெருமான் பாடுகின்றார்.

இனிமை எத்தகையது? பொதுவாகக்கூறுமிடத்து அதனைப் பருமை நிலையில் உண்பதில் பெறும் இனிமையாகவும், பருமை சற்றுக் குறைந்த நிலையில் பாவை நல்லாரிடம் கொள்ளும் தொடர்பின் இனிமையாகவும், சற்றே நுட்பமான நிலையில் பிறர்மீது ஆட்சி செலுத்துவதில் நுகரும் இனிமையாகவும் வகைப்படுத்தலாம். முன்னவை இரண்டும் உடலளவில் பெறப்படும் இனிமை. மூன்றாவது உள்ளத்தின் அளவில் பெறப்படுவது. ஆயின், நிலையான இனிமை உயிர் அளவில் பெறப்படுவதேயாகும். இவ்வினிமை இறைவனோடு இடைவிடாத தொடர்பு கொள்ளும் போது தான் பிறக்கிறது. இவ்வினிமையே தெவிட்டாத இனிமை. இறைவன் இவ்வினிமையே உருவானவன் என்பதை அப்பர் நமக்கு அறிவுறுத்துகிறார்;

> ''கனியி னும்கட்டி பட்ட கரும்பினும்
> பனிம லர்க்குழல் பாவைநல் லாரினும்
> தனிமு டிகவித் தாளும் அரசினும்
> இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே''

நம்மிலும் இனியன்-தன்னில் தான் இனியன்-அனைத்தினும் இனியன்-தன்னடைந்தார்க்கு இனியன் ஆகிய இறைவனிடம் நாம் தொடர்பு கொள்ளாது பிறவற்றோடு, பிறரோடு தொடர்பு கொள்கிறோம். இனிப்பது போலத் தொடங்கும் இத்தொடர்பு எட்டிக்காயாகக் கசந்து போகிறது. சுந்தரர் இவ்வுண்மையை நமக்கு நினைவூட்டுகிறார். பெறற்கரிய மனித வாழ்க்கை; மின்னலையொத்த நிலையிலாத, நொடிப் பொழுதில் தோன்றி மறையும் வாழ்க்கை; 'புல் நுனைப்பனி வெங்கதிர் கண்டாற்போலும் வாழ்க்கை'— நிலையற்ற இவ்வாழ்க்கையில், 'இன்று என் செய்வது, நாளை என் செய்வது?' என்னும் கவலைக்குள்ளாகி இடருறுகின்றோம். இவ்வாறு தக்க குறிக்கோளின்றிக் கவலைக்கே இடமாக உள்ள வாழ்க்கைக்கு, ஓரளவோ பெரிதோ காரணமாக இருப்பது நம் பழவினை.

> ''முந்திச் செய்வினை இம்மைக்கண் நலிய
> மூர்க்க னாகிக் கழிந்தன காலம்''

> ''முன்ன மேஉன சேவடி சேரா
> மூர்க்க னுகிக் கழிந்தன காலம்''

என்றெல்லாம் பழவினை காரணமாக நிகழும் இடர்ப்பாடுகளைச் சுந்தரர் குறிப்பிடுகிறார்.

> ''ஏழை மானுட இன்பினை நோக்கி
> இளைய வர்வலைப் பட்டிருந் தின்னம்
> வாழை தான்பழுக் கும்நமக் கென்று
> வஞ்ச வல்வினை யுள்வலைப் பட்டு....''

என்னும் போக்கில் போகின்ற வாழ்க்கை நரைப்பு, மூப்பு, பிணி இவற்றிற்குள்ளானது. வாழ்க்கை தேய்ந்து போவதைச் சுந்தரர் அரைத்த மஞ்சளுக்கு ஒப்பிடுகின்றார். ஐம் புலன்கள் நம் வசப்படாமல் தம் வசமாக நம்மை இழுத்துச் செல்வதையும் அவர் நினை வூட்டுகிறார். பிறவி வீணாகப் போகாமல் பயன்படுவதற்கு இறைவனே வழிகாட்ட வேண் டும்:

''எவ்வகை எனக்கு உய்வகை யருள்வாய்
இடைம ருதுறை எந்தை பிரானே''

என்று சுந்தரர் இறைவனை வேண்டிக் கொள் கிறார்.

தம் பதிகத்தை ஓதுவதால் இறைவனரு ளால் விளையும் நன்மையையும் சுந்தரர் குறிப் பிடுகிறார். இடைமருதுறைகின்ற இறைவனை,

''உரைக்கும் ஊரன் ஒளிதிகழ் மாலை
உள்ளத் தாலுகந் தேத்தவல் லார்கள்
நரைப்பு மூப்பொடு நடலையு மின்றி
நாதன் சேவடி நண்ணுவர் தாமே''

திருஞானசம்பந்தர் பதிகங்களிலும் இடை மருதுறை இறைவனை வழிபடுவதால் ஏற்படும் நன்மைகள் விளக்கப் பெறுகின்றன.

''கருதுசம்பந்தன் மருத ரடிபாடிப்
பெரிதும் தமிழ்சொல்லப் பொருத வினைபோமே''

வீடுபேற்றுக்கே தமிழால் வழிகண்டவரல் லவா, ஞானசம்பந்தர்? அவர் பதிகங்களை ஓதுவதால் இறைவன் மகிழ்ந்து நம் வினை களைப் போக்கி வீடுபேறாக்கம் பெய்வார் என் பது சைவப் பெருமக்களின் கடைப்பிடி.

பழைய வினைகள் ,வல்வினைகள் நம் மோடு போர் செய்கின்றன. இவ்வினைகள் நம் செயல்களால் நாமே ஏற்படுத்திக் கொண்ட வைதாம். உடன்பிறந்தே கொல்லும் நோய் போன்று இவை நமக்குப் பகையாகிப் போரிடு கின்றன. ஆயினும்

''இடைமரு தடையநம் இடர்கெடல் எளிதே''
''இடைமருதினை
வலமிட உடல் நலிவிலது.....''

என்றெல்லாம் ஞானசம்பந்தர் பாடுகையில் வினையின் விளைவுகளாகிய உடல்துன்பம், உள்ளத்துயர் ஆகியவையனைத்தும் இறைவனை வழிபடுவதால் அறவேநீங்கும் என்னும் எளிய வழியை நமக்குக் காட்டுகின்றார்.

''....இடைமரு தெனும்நகர்
உடையவ ரடியிணை தொழுவதெம் உயர்வே'

எது சரியான உயர்வு என்பதை இங்கே ஞானசம்பந்தர் விளக்குகிறார். இறைவனைத் தொழுவதற்காகப் பணிவதே உயர்வு. இவ் வாறன்றி இறைவனைத் தொழாமல் நம்மையே உயர்ந்தவர்களாகக் கொண்டு, பிறர் நம்மைத் தொழவேண்டும் என்று ஆணவ முனைப்பால் நம் வாழ்க்கையைப் பாழாக்கிக் கொள்கிறோம். இதனால் விளைவது தாழ்வு. இவ்வாறாக ஆன்மிக வாழ்க்கையில் உயர்வு தாழ்வாகிறது; தாழ்வு உயர்வாகிறது! நம்மைத் தாழ்த்தி இறைவனைத் தொழுவதில் உயர்வு பிறக்கிறது. சுருக்கமாகக் கூறின் இறைவனைத் தொழுவ தால் இம்மை அம்மை நலன்கள் அனைத்தும் விளைகின்றன.

''இம்மை வானவர் செல்வம் விளைத்திடும்
அம்மை யேற்பிற வித்துயர் நீத்திடும்
எம்மை யாளும் இடைமரு தன்கழல்
செம்மை யேதொழு வார்வினை சிந்துமே''

எனவே இடை மருதிறைவன் இனியன் அல் லனோ?

***

---

# வள்ளித் திருமண வரலாற்று நுட்பம்

ஐம்புல வேடரிடை வாழ்ந்துழலும் ஆருயிரை
எம்பெருமான் ஆட்கொண் டினிதருளும்—செம்பொருளே
வள்ளித் திருமணமாம் மாண்பார் வரலாறென்(று),
உள்ளியுணர்ந் துய்க உவந்து!

—ந. ரா. முருகவேள்

---

# மன்னு தீந்தமிழ்

"மகாவித்துவான்"

திரு. சி. அருணைவடிவேல் முதலியார், காஞ்சிபுரம்.

முன்னுரை :

தமிழ் தோற்றம் அறியப் படாத தொன்மை வாய்ந்தது. இதனையொத்த பழமை வாய்ந்த மொழிகள் உலகில் மற்றும் பல உள. எனினும், அவை இக்காலத்தில் வழக்கு இறந்த மொழிகளாயின. அவை போல் இன்றித் தமிழ் இன்றும் உலகவழக்கு, செய்யுள் வழக்கு என்னும் இருவழக்கிலும் நன்கு விளங்கி வருதல் தமிழுக்கு உள்ள ஒரு தனிச் சிறப்பாகும். இது பற்றியே மனோன்மணீய நாடக நூலின் ஆசிரியராகிய பேராசிரியர் திரு. சுந்தரம்பிள்ளையவர்கள், அந் நாடக நூலின் முதற்கண்,

ஆரியம்போல் உலக வழக் கழிந்தொழிந்து சிதையா உன்
சீரிளமைத் திறம் நினைந்து செயல் மறந்து வாழ்த்துதுமே.

எனத் தமிழ் வாழ்த்தில் சிறப்பித்துக் கூறினார். இதனால் 'மன்னுதல்-நிலைபெறுதல்' ஆதலின், தமிழை, 'மன்னு தமிழ்' எனச் சிறப்பித்துக் கூறலாம். கம்பரும் தமிழை "என்றும் உள தென்றமிழ்" என்றார்.

'தமிழ்' என்பதற்கு 'இனிமை' என்பது பொருளாதலால், தமிழ் என்பதையே தனக்குப் பெயராக உடைய மொழி, இனியதொரு மொழி என்பதில் ஐயமில்லை. எனினும் அக்கருத்து இனிது விளங்குவதற் பொருட்டு அதனைத் 'தீந்தமிழ்' என்றல் பெரிதும் பொருந்துவதே. எனவே, என்றும் அழியாது நிலை பெற்றிருத்தல், இனிமையாய் இருத்தல் என்னும் இரண்டியல்பும் இனிது விளங்குமாறு, தமிழை 'மன்னு தீந்தமிழ்' எனக் குறிப்பிடுதல் சாலச் சிறந்ததாகும். 'மன்னு தீந்தமிழ்' என்பது பொதுவாகவே தமிழுக்குப் பொருந்துமாயினும், அதனை இன்னும் மிகச்சிறந்த பொருளில் சேக்கிழார் ஓரிடத்தில் வழங்கியுள்ளார். அவ்விடம் ஆழ்ந்து நினைக்கத் தக்கது.

இடைக்கால நிலை :

தமிழ் மொழி தோன்றிய காலந் தொட்டுப் பன்னெடுங் காலம் சிறந்த இலக்கிய வளங்களோடு பல துறை நூற் சிறப்புக்களையும் பெற்றுத் திகழ, அவை வாயிலாகத் தமிழ்ப் பண்பாடும் பன்னெடுங்காலம் செம்மையாகவே விளங்கி வந்தது. ஆயினும் களப்பிரர், பல்லவர் முதலிய வேற்று நாட்டு அரசர்கள் நுழைந்து தமிழகத்தைக் கைக்கொண்டு ஆளத் தொடங்கிய பின்பு, தமிழ் மொழியும், தமிழ்ப் பண்பாடும் பலவகையில் சீர்கேடுறுவனவாயின. அவற்றுள் சமய மாற்றம் குறிப்பிடத்தக்க ஒன்று. இச் சீர்கேட்டுக் காலத்தை வரலாற்றாசிரியர்கள் 'இருட் காலம்' எனக் குறிப்பிடுகின்றார்கள். தமிழ் மொழிக்கும், தமிழ்ப் பண்பாட்டிற்கும் நேர்ந்த இவ் இருள் நீங்கி ஒளி மிக விளங்க, இரு பெருமக்கள் தமிழ் நாட்டில் ஒருங்கே திருவவதாரம் செய்தார்கள். அவர்கள் ஞானசம்பந்தரும், நாவுக்கரசரும் ஆகிய இருவரே. தமிழ்நாடு உய்ய வேண்டியே இவர்களை இறைவன் இந்நாட்டிற்கு அளித்தருளினான்.

அதன்படி ஞானசம்பந்தர் நாளும் இன்னிசையால் எங்கும் தமிழ் பரப்பி, நற்றமிழ்க்கு இன்றுணையாய், நன்றி இல் நெறியில் அழுந்திய நாடும், நற்றமிழ் வேந்தனும் உய்ந்து வெற்றிகொள் திருநீற்றொளியினில் விளங்கச் செய்தார். நாவுக்கரசரும் தமது அற்புதச் செயல்களால், புல்லறிவிற் சமணர்க்காப் பொல்லாங்கு புரிந்தொழுகிய பல்லவ மன்னனை, வல்லமணர் தமை நீத்து மழவிடையோர் தாளடையச் செய்தார். இவ்விருவரும் தமிழகம் புன் சமய மயக்கொழிந்து நன் சமயமே பற்றியொழுகுதற்குச் செய்தருளிய பேரருட் செயல், அளவற்ற செந்தமிழ்த் திருப்பதிகங்களை அருளியதேயாகும். அவர்களது அற்புதச் செயல்கள் அவர்களது பெருமையை அக்கால மக்கள் உணர்ந்து அவர்களது திருப்பதிகங்களைப் பொன்னே போல் போற்றி ஒழுகுதற்கு வாயிலாய் அமைந்தன. அவர்களது அருளிச் செயல்களாகிய திருப்பதிகங்களோ அவர்கட்குப் பின்னும் என்றும் நின்று நிலவி மக்களை உய்விக்கும் வானமுதமாய் மன்னுகின்றன. அத் திருப்பதிகங்களினும் இறைவனுக்கு இனிமையைத் தருவது வேறொன்றில்லை. எனவே, அவர்களது திருப்பதிகங்களே 'மன்னு தீந்தமிழ்' என்றற்குச் சிறப்புரிமை உடையனவாதல் விளங்கும். இதனைச் சேக்கிழார் தக்கதோரிடத்தில்

தக்கவகையில் எடுத்தருளிச் செய்தமை குறிப்பிடத்தக்கது.

நாவுக்கரசர் திருக்கயிலையில் இருக்கும் இறைவனை நேரே கண்டு தொழ விரும்பி நெடுந் தொலைவு பயணம் செய்து நடக்க முடியாத இடங்களிலெல்லாம் நடந்து கால் புண்பட்டுப் போனமையால் ஊர்ந்தும், புரண்டும் சென்று ஓரிடத்தில் நினைவற்றுக் கிடக்கையில், இறைவன் அவருக்குத் தானே சென்று அருள் புரியக் கருதினான். நாவுக்கரசர் விரும்பியது கயிலாயத்தை அடைந்து அங்கு இறைவனை நேரில் காணுதலை. எத்துணையோ பேரைக் கயிலைக்கு அழைத்துக் கொண்ட இறைவனுக்கு இந்த நிலையில் உள்ள நாவுக்கரசரைக் கயிலைக்கு அழைத்துக் கொள்ளுதல் இயலாதோ! எளிதில் இயலும். ஆனால், அவன் அவ்வாறு அவரைக் கயிலைக்கு அழைத்துக் கொள்ள எண்ணவில்லை. 'அதற்குக் காரணம் என்ன' என்பதைச் சேக்கிழார் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

அன்ன தன்மையர் கயிலையை அணைவதற் கருளார்
மன்னு தீந்தமிழ் புவியின்மேற் பின்னையும் வழுத்த
நன்னெ டும்புனல் தடமும் ஒன்றுடன் கொடு நடந்தார்
பன்ன கம்புனை பரமர் ஓர் முனிவராம் படியால்

இதன்படி பார்க்கும்பொழுது நாவுக்கரசரைப், பதிகம் ஏழெழு நூறு பகர்வதற்காகவே இறைவன் நிலவுலகில் தோற்றுவித்திருக்க, அச் செயல் முடிவதற்கு முன்னே அவரைக் கயிலைக்கு அழைக்க இறைவன் திருவுளம் கொள்ளவில்லை என்பது போதருகின்றது. நாவுக்கரசர்முன் முனிவர் கோலத்தில் தோன்றியருளிய இறைவன், பின்பு ஒரு பொய்கையை அங்கே தோற்றுவித்து அதில் அவரை முழுகும்படி அருளாணை தந்து, அங்ஙனமே அதில் மூழ்கிய அவரைத் திருவையாற்றில் எழச்செய்து அங்குள்ள திருக்கோயிலையே கயிலையாக்கிக் காட்சியளித்தான்! நாவுக்கரசரும் கண்டு மகிழ்ந்தார்.

அதன் பின்னரே அவர் பல சிறப்பான திருப்பதிகங்களை அருளிச் செய்தார். அவை ''மாதர் பிறைக் கண்ணியானை'' என்று தொடங்கும் திருப்பதிகம், பல்வகைத்திருத் தாண்டகம், தனித்திருத் தாண்டகம், அடைவுத் திருத்தாண்டகம், திருவங்கமாலை முதலியன. அவரது பாண்டி நாட்டு யாத்திரையே அதன் பின்னர்த்தான் நிகழ்ந்தது. எனவே, பாண்டி நாட்டுத் தலங்கள் அப்பரது பாடலைப் பெற்றது, அவரது கயிலை யாத்திரைக்குப் பின்னேதான் என்பது குறிக்கொளத் தக்கது.

பாண்டிநாட்டு யாத்திரையை முடித்துக் கொண்டு திருப்புகலூரில் வந்து எழுந்தருளியிருந்தபொழுதுதான், நின்ற திருத்தாண்டகம், பாவநாசப் பதிகம், சேத்திரக் கோவை, குறைந்த திருநேரிசை, தனித் திருநேரிசை, ஆருயிர்த் திருவிருத்தம், தசபுராணம், சிவனெனும்ஓசை முதலிய திருப்பதிகங்களை அருளிச் செய்தார். அரம்பையர்கள் வந்து அவர்முன் ஆடல் பாடல்களைச் செய்யப் ''பொய்ம் மாயப் பெருங்கடலுள்'' எனத் தொடங்கும் பதிகத்தை அருளிச் செய்ததும் அப்பொழுதுதான்.

இங்குக் குறிப்பிட்ட இத்திருப் பதிகங்கள் பலவும் எத்துணைஅருமை யுடையன, இன்றியமையாதன! இவ் அருமைத் திருப்பதிகங்களுள் ஒன்றையேனும், அப்பரை அன்றே இறைவன் கயிலைக்கு அழைத்துக் கொண்டிருந்தால் நாம் பெற்றிருக்க முடியுமா என்பது, நம்மால் பெரிதும் எண்ணி எண்ணி உணர்தற்பாலது. ஆகவே, சேக்கிழார் தமது மெய்ம்மை கூறும் திருமொழியால், அப்பரை இறைவன் அன்று கயிலையில் சேர்ப்பியாமைக்குக் காரணம், 'புவியின்மேல் பின்னையும் வழுத்த வேண்டியிருத்தலே!' என அருள்வழி நின்று அருளிச் செய்தது எத்துணைப்பெருண்மையாயுள்ளது என்பது, நாம் நன்குணர்ந்து பயன் கொள்ளத்தக்கது.

---

## இந்தியத் தத்துவ நூல்களின் சிறப்பு

''இந்திய நாட்டின் கவிதை இலக்கியங்கள், தத்துவ நூல்கள் ஆகியவற்றை ஆராயும்பொழுது அவைகளிற் பொதிந்துள்ள உண்மைகள் மிகவும் சிறப்புடையனவாகக் காணப்படுகின்றன. அவற்றின் உயரிய தத்துவக் கொள்கை நலங்களை, நம்முடைய ஐரோப்பிய அறிவு நலனுடன் ஒருங்குவைத்து ஆராயும் போது, நாம் மண்டியிட்டு வணங்கிப் பணிய வேண்டிய நிலையில் இருக்கின்றோம்'' என்று, **விக்டர்கசின்** என்னும் பேரறிஞர் விளம்புகின்றார். இதனால் நம் இந்தியத் தத்துவ நூல்களின் சிறப்பை யாவரும் நன்குணரலாம்.

—ஆசிரியர்

" When we read with attention, the poetical and philosophical movements of the East, above all those of India, which are beginning to spread in Europe, we discover there so many truths, and truths so profound, and which make such a contrast with the meanness, of the results at which the European genius has sometimes stopped, that we are constrained to bend the knee before that of the East, and to see in this cradle of human race the native land of the highest philosophy.

—VICTOR COUSIN

# காஞ்சிப் புராணமும் சைவ சித்தாந்தமும்

''சித்தாந்தக் கலைச் செல்வர்''

திரு. க. வச்சிரவேலர், B.A.,L.T., மதுரை.

காஞ்சிப் புராணம் உயர்ந்த தத்துவக் கருத்துக்களைக் கொண்டது. அதனைச் செந்தமிழில் மொழிபெயர்த்து அமைத்துக் கொடுத்த ஆசிரியர் இருமொழிக்கடலும் நிலை கண்டு உணர்ந்த மாதவச் சிவஞானிமுனிவர் ஆவர். ஆதலால், அஃது இலக்கியச்சுவை மட்டும் பொருந்தியதாக அமையாமல், உயர்ந்த சாத்திரக் கருத்துக்களும் வேதாகம நுண் பொருள்களும் அமைத்து சிறந்து விளங்குவதில் அருமை ஒன்றும் இல்லை. ஆயின், அவ்வுயர்ந்த கருத்துக்களைத் தக்கவர்கள் உணர்ந்து மகிழ்தலும் பயன்கொள்ளுதலும் கடப்பாடு ஆகும்.

காஞ்சிப் புராண அவையடக்கத்தில் ஓர் உயர்ந்த கருத்துத் தெரிவிக்கப்படுகிறது. கல், மண், செம்பு முதலிய பொருள்கள் எவ்வளவு கலைத்திறனோடு அமைக்கப்படினும், அவை அழகிய பொருள்கள் எனப் பாராட்டப்படுமே யன்றிப் போற்றப்படமாட்டா; உலகப் பொருள் உலகப்பொருள்தான். அவை அனைத்தும் மாயையின் காரியமே எனக் கொள்ளப் படும். ஆயின், அவையே தெய்வ உருவாக அமையின் போற்றி வழிபடப்படும் பொருள்கள் ஆகின்றன; அவை திருவருள் வடிவம் எனவே கொள்ளப்படும். அதுபோல, இப் புராண வடிவில வரும் என் உரை பிதற்றுரை ஆயினும், அதன்கண் திருவேகம்பநாதனது பொருள்சேர் புகழ் அமைந்திருத்தலின், அஃது அறிஞர்களுக்குக் குற்றம் அற்றதாகவே விளங்கும் என்கிறார்.

மாயை காரிய உருக்களும்
　　எம்பிரான் வடிவம்
ஆயவேல் அவை அருள்மயம்
　　ஆகும்மற் றதுபோல்
பேய னேன்பிதற் றுரையும்
　　ஏகம்பர்தம் பெருமைத்
தூய காதையுள் உறுதலால்
　　துகளறத் தோன்றும் (பாயிரம், 1).

திருநாட்டுப் படலத்தில் மழைச் சிறப்பு உரைக்கும்போது பின்வரும் பாட்டு வருகின்றது:—

''போதம் மேலாகப் பண்டே
　　புல்லிய மலநோய் தீர்ந்தும்
வாதனை தாக்கு மாபோல்
　　மழைப்பெயல் மறித் தீர்ந்தும்
காதல்செய் துறையும் புள்ளும்
　　மாக்களும் கவன்று நெஞ்சம்
நோதக மரங்கள் எல்லாம்
　　நுண்துளி துவற்றும் மாதோ''

(திருநாட்டு 12)

'அடைமழை விட்டும் செடிமழைவிட வில்லை' என்பது பழமொழி. மழைக்காலம் நீங்கிப் பின் குளிர்காலம் வருகிறது. மரங்களில் பறவைகளும், அவற்றின்கீழ் விலங்குகளும் தங்குகின்றன. பனித்துளிகள் இலைகளிலிருந்து அவற்றின் உடம்பின்மேல் வீழ்தலினால், அவை பெரிதும் துன்புறுகின்றன. இதற்குச் சிவஞானம் மிகுந்தபோது மூலமலம் அறவே நீங்குகிறது; ஆயினும், பழைய பயிற்சி பற்றி மலவாதனை அவர்களை உலக முகப் பட வைக்கும்; அப்போது அவர்கள் பெரிதும் அவ்வாதனைக்கு அஞ்சி, இறைவனையே சார்பாகக் கொண்டு நிற்பார்கள். இவ்வுண்மை சாத்திர நூல்களில் பயின்ற சிவஞான முனிவர் முதலியோர்க்கு அன்றிப் பிறர்க்குச் சொல்ல வருதல் அரிது.

மேட்டு நிலத்தில் விழும் நீர்த்துளிகள், பல அருவிகளாகப் பாய்ந்து இறுதியில் பாலியாறு என்னும் பெருவெள்ளமாக வந்து சேர்கின்றன. இவ்வாறு வந்து சேர்வது, ஒருவன் பல பிறவிகளில் பல உலகங்களில் செய்த வினைகளெல்லாம் ஒரு பிறவியில் அவன் எடுத்துள்ள உடம்பின்கண் இன்ப துன்பங்களை உண்டு பண்ணுதற் பொருட்டு ஒருங்கே சேர்தல் போலும் எனக் கூறுகிறார் முனிவர்.

''பாரிடம் குழித்து வீழும் பல்வயின்
　　அருவி யெல்லாம்
ஓரிரும் பாலியாற்றின் ஒருங்குசென்(று)
　　அணையும் தோற்றம்

சீரிய புவனம் தோறும் சிதறிய
வினைகள் எல்லாம்
ஓரிடத் தொருவன் தன்பால்
உடங்குசென்(று) உறுதல் போலும்
(திருநாட்டு,15)

மேல் இரண்டு செய்யுள்களிலும் முறையே அணைந்தோர் தன்மையும், இருவினைகள் இறைவன் ஆணையாற்றால் ஒருவனை வந்து சேரும் முறைமையும் உரைக்கப்பட்டன.

முனிவர் சுவேதாசுவதரம் என்னும் உபநிடதத்தில் ஆறாம் அத்தியாயத்தின் இறுதியில் வரும் ஒரு மந்திரத்தின் பொருளைத் தம் புராணத்தில் வைத்து உறுதி உரைக்கின்றார்:—அம்மந்திரம்,

''யதா சர்மவத் ஆகாசம்
வேஷ் டயிஷ் யந்தி மாநவா
ததா சிவம் (தேவம்) அவிஜ்ஞானய
துஃகச் யாந்தோ பவிஷ் யதி'

என்பது. அதற்கு முனிவர் கொடுக்கும் மொழி பெயர்ப்பு:

'மானிட விசும்பைத் தோல்போல்
சுருட்டுதல் வல்லோ னாயின்,
ஈனமில்சிவனைக் காணாது
இடும்பைதீர் வீடும் எய்தும்'

என்பது. அப்பாட்டைப் பின்வருமாறு அவர் முடிக்கிறார்;

'மானமார் சுருதி கூறும்
வழக்கிவை ஆதலாலே
ஆனமர் இறையைக் காணும்
உபாயமே அறிதல் வேண்டும்'
(சனற்குமார 43)

மகாநாராயண உபநிடதத்தில் த க ர வித்தை பேசப்படுகிறது. நெஞ்சக் கமலம்; அதனுள் வெளி; அதன் நடுவில் ஒளிவடிவச் சுடர்; அதன் முடியில் பரமாத்மா உளர் என்று அது பேசுகிறது. இங்கு நாராயணருடைய நெஞ்சக் கமலமே வருணிக்கப்படுகிறது என்பது சைவர்கள் கொள்கை. இக் கருத்தை வேள்விச் சாலையில், ஓமகுண்டத்தில் சிவாக்கினியை வளர்த்து அதன்கண் இறைவனை ஆவாகனம் செய்து வழிபடும் அந்தணர்களின் செய்கையில் வைத்துப் பேசுகிறார் சிவஞான முனிவர். பின் வருவது திருநகரப் படலத்தில் உள்ள 119-வது செய்யுள்:

'சேந்தபொற் குண்டத் தோங்கும்
சிகைத் தழல்மிகை ஏகம்ப
வேந்தை ஆவாகித் தேத்தும்
புகைபொதி வேள்விச் சாலை
ஏய்ந்தசீர்த் தகர வித்தை
முறைப்படி இதயக் கஞ்சப்
பூந்தழற் சிகைமேல் ஈசற் போற்றும்
மாயவனை ஒக்கும்''

புகைபொதி வேள்விச்சாலை நீலமேக சாமளவண்ணம் உடைய திருமாலையும், ஓமகுண்டம் அவர்தம் நெஞ்சக்கமலத்தையும் ஒக்கும் என்கிறார்.

பிருகத் ஆரண்யக உபநிடதத்தில் பின் வரும் செய்தி வருகிறது. விதேகமன்னன் சனகன் ஒரு பெருவேள்வியைச் செய்தான். அவ் வேள்வியில் ஆயிரம் ஆக்களைக் கொணர்ந்து, அவை ஒவ்வொன்றன் கொம்புகளிலும் பப்பத்துப் பொன் நாணயங்களைக் கட்டி, பிரம்ம ஞானத்தில் வல்லவர் அவற்றை ஓட்டிச் செல்லலாம் என்று கூறினான். அங்கு வந்திருந்த பிராம்மணர் பலரும் தயங்கி நிற்கும்போது, யாஞ்ஞவல்கியர் தமதுமாணவன் ஒருவனை அழைத்து, அவற்றைத் தம் ஆச்சிரமத்துக்கு ஓட்டிச் செல்லும்படி உத்தரவிட்டார். அதைக் கண்டு அங்கிருந்த மற்றைய பிராம்மணர் பல வகையான வினாக்களை வினாவினர். அவற்றிற்கெல்லாம் யாஞ்ஞவல்கியர் விடை சொல்லிக் கொண்டு வருகிறார். அப்போது உத்தாலக ஆருணி என்பவர் அந்தரியாமியின் இலக்கணம் பற்றி வினாவினார். அவ்வினாவிற்கு 21 மந்திரங்களால் பல பொருள்களைச் சுட்டி விடைதருகிறார் யாஞ்ஞவல்கியர்.

'எவர் அறிவில் தங்கி அதனுள் இருக்கிறாரோ, யாரை அறிவு அறிந்து கொள்ளவில்லையோ, யாருக்கு அறிவு உடம்போ, யார் அறிவினுள் இருந்து அதனை ஆளுகிறாரோ, அவர் உன் ஆன்மா-அந்தரியாமி-அமுதம்' என்பது இதன் பொருள். இவ் அந்தரியாமிப் பொருளைச் சிவஞானமுனிவர் மூன்று திருவிருத்தங்களில் அடக்கிக் கூறுகிறார். இக்கருத்தைக் கொண்டு வேதங்கள் திருவேகம்பநாதரை ஆதி காலத்தில் போற்றியதாகப் பாடுகின்றார்.

''பாரின் மேயினை பாரொரு வடிவினை
பாரினுக் கறியொண்ணாய்
பாரும் மற்றையப் பாரிடைப் பொருளும்நின்
ஆணையிற் பயில்வித்தாய்
நீரின் மேயினை நீரொரு வடிவினை
நீரினுக் கறியொண்ணாய்
நீரும் மற்றையந் நீரிடைப் பொருளும்நின்
ஆணையின் நிலைப்பித்தாய். (1)

நெருப்பின் மேயினை நெருப்பொரு வடிவினை
நெருப்பினுக் கறி யொண்ணாய்
நெருப்பும் மற்றையந் நெருப்பிடைப் பொருளும் நின்
ஆணையின் நிறுவித்தாய்
மருத்தின் மேயினை மருத்தொரு வடிவினை
மருத்தினுக் கறியொண்ணாய்
மருத்தும் மற்றைஅம் மருத்திடைப் பொருளும் நின்
ஆணையின் வதிவித்தாய் (2)

விண்ணின் மேயினை விண்ணொரு வடிவினை
விண்ணினுக் கறி யொண்ணாய்
விண்ணும் மற்றையவ் விண்ணிடைப் பொருளும் நின்
ஆணையின் நிறுவித்தாய்
கண்ணும் ஆருயிர் இருசுடர் எவற்றினும்
இம்முறை கலந்தோங்கி
எண்ணினால் வரும்பெரு முதல்வநின்
இணையடி மலர்போற்றி'' (3)

உண்மையில் இப்பாட்டுக்கள் பிருகத் ஆரணியகத்தில் வரும் அந்தரியாமிப் பிரகரணத்தை, உள்நின்றுந்து பொழிந்து எழுந்த உயர் ஞானத் திருமொழியால் சொற்செய்து அமைத்துள்ளார், நம் முனிமுதல்வர், என்றே வியந்து போற்றித் தொழும்படி அமைந்துள்ளன. சங்கரர் உலகத்தை வெறுந் தோற்றமே என்றனர். இராமானுசர், உலகுயிர்கள் முதல்வனுக்கு உடம்பாக உள்ளன என்றனர். மத்துவர், உலகுயிர்களும் வேறே, முதல்வனும் வேறே என்றனர். வேதம் முதற் பொருள் உலகுயிர்களின் உள் நிற்பது; அவற்றால் அறியப்படாத தாக உள்ளது. உலகுயிர்களை உடம்பாக மட்டும் கொள்ளாமல் உள்நின்றும் இயக்குகின்றது எனக் கூறுகின்றது. சைவர்கள் இம் மூன்று சம்பந்தத்தையும் முற்றக்கொண்டு 'உலகெலாமாகி வேறாய் உடனுமாய் ஒளியாய் ஓங்கி' இறைவன் இருக்கின்றான் என்பதை விளக்கி வருகிறார்கள். இக்கருத்து வேதங்களை அடிப்படையாகக் கொண்டதுதான். இதுவே சரியான கருத்து என்பதைப் புராண வாயிலாக வலியுறுத்தவே நம் முனிவர் பெருமான் இம் மூன்று பாட்டுக்களை வேதங்களின் துதிமொழியாகத் திருவேகம்பப் படலத்தில் வைத்துள்ளார்.

இன்னும் ஒருபாட்டு, நமது முனிவர்தம் வேத ஆகம நுண்பொருள் நுழைவை அறிந்து இன்புறுதற் பொருட்டு எடுத்துக் கொள்கிறேன். அஃது,

'அகில நாமமும் எமக்குரிப் பெயராம்
அவற்றினும் பவன்முதற் பெயர் சிறப்பாத்
தகுமவற்றினும் சம்புவே மயோபு
சங்கரன் மயற்கரன் சிவன் மற்றை
இகழரும் சிவதரன் எனும்பெயர்கள்
இனியவாகும் அங்கெவற்றினும் மேலாய்ப்
புகழ்படைத்த ஏகாம்பரநாதன் எனப்புகல்
பெயரெமக்குமிக் கினிதாம்.

(திருவேகம்ப,44)

எனவரும். இஃது இறைவனே கூறுவது. எல்லாப் பெயர்களும் சிவபிரானுக்கு உரியவைதான். ஆயினும் பவன், சருவன், ஈசானன் பசுபதி, உருத்திரன், உக்கிரன், பீமன், மகாதேவன் என்னும் எட்டுப் பெயர்கள் சிறந்தவை. அவற்றினும் சீருத்திரத்தில் திருவைந்தெழுத்து கூறுமிடத்தில் வரும் சம்பு, மயோபு, சங்கரன், மயற்கரன், சிவன், சிவதரன் என்னும் பெயர்கள் சிவபிரானுக்கு இனிமையைத் தருவன. எல்லாப் பெயர்களுள்ளும் ஏகாம்பரநாதன் என்னும் பெயர் இறைவனுக்கு மிகவும் இனிதாகும். என்பது இப்பாட்டின் பொருள். சம்பு முதலிய ஆறு பெயர்களும் சீருத்திரத்தில் 'நமஸ்சம்பவேச, மயோபவேச, நமஸ்சங்கராயச, மயஸ்கராயச ,நமஸ்சிவாயச, சிவதராயச' என வருவன என்பதை உணர்தல்வேண்டும். ஏகாம்பரநாதன் என்னும் சொல் ஒற்றை மாவின் தலைவன் என்னும் பொருளைத் தரும். இங்கு ஒற்றைமா என்பது வேதங்களைக் குறிக்கும். ஆதலால், அப்பெயர் வேத உள்ளுறையாகவும், வேதமூலமாகவும் உள்ள வேத முதல்வன் என்னும் கருத்தைத் தெரிவித்து மக்களைத் தன்பால் அன்பு பூண்டு ஒழுகச் செய்தலின் அப்பெயர், எப்பெயரினும் இறைவனுக்கு இனிமை உடையதாயிற்று.

***

# கிழக்காசிய நாடுகளில் இந்துமதம் !

இந்து மதமும், அதன் பல்வகைப் பண்புநலங்களும், உலகின் பல பகுதிகளிலும் பரவியுள்ளன. சுமத்திரா (சுவர்ணதீபம்), ஜாவா (யவத்தீபம்), பாலி, போர்னியோ, மலேயா, சயாம், கம்போடியா (காம்போஜம்), சம்பா, இந்தோனேஷியா, இந்தோசைனா, நடுஆசியா, திபெத்து, பர்மா, சிமோன், சைனா, கொரியா, ஜப்பான் முதலிய உலகநாடுகளின் பல பகுதிகளிலும், இந்துமதத்தின் பண்பாடுகளும் சாயல்களும் பரவிக் காணப்படுகின்றன.

கிழக்காசிய நாடுகளில் தேவவர்மன், குணவர்மன், உத்திரவர்மன், யசோவர்மன், சஞ்சயன், கௌணியன், அர்ச்சுனன், உக்கிரசேனன், சித்திரசேனன், பிரம்மதத்தன், இந்திராதித்தியன் முதலிய பல இந்துமதப் பெயர்கள், இன்றளவும் பெருக வழங்கப்பட்டு வருகின்றன.

ஜாவாவில் உள்ள போராபூதூர்ப் புத்தர் கோயிலும் (கி.பி. 750-850), கம்போடியாவில் உள்ள அங்கோர்தாம் என்னும் சிவபிரான் கோயிலும் (கி.பி. 1110-1150), நமது தமிழக இந்துக் கோயிற் கட்டடக் கலை, சிற்பக்கலைகளினுடைய வளர்ச்சியையும், சிறப்பையும், பரவலையும் விளக்குவனவாக அமைந்து திகழ்கின்றன.

கம்போடியாவில் அங்கோர்வாட் என வழங்கும் ஒரு பெருங்கோயில், திருமாலுக்கென அமைக்கப்பட்டுள்ளது. அதன்கண் இராமாயணம், மகாபாரதம், அரிவம்சம் என்னும் நூல்களிலிருந்து பல அழகிய சிறந்த சிற்பக் காட்சிகள் செதுக்கப்பட்டுள்ளன. இராமன் மாயமானைப் பின்தொடர்தல், வாலி சுக்ரீவர்போர், அசோகவனத்தில் சீதையின் சோகநிலை, கண்ணபிரான் கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்தல், சிவபிரான் காமதகனம்செய்தல், தேவர்கள் திருப்பாற்கடல் கடைதல், முதலிய காட்சிகள் மிகப்பெரிய அளவில் செதுக்கப்பெற்று இன்றளவும் உயிரோவியங்களாகத் திகழ்ந்து வருகின்றன.

—ஆசிரியர்

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept